PUBLIC LIBRARY
JAFFNA

# எங்கள் தேசம்

மாதம் இரு முறை

QD/13/NEWS/2014

...ழமிடமெல்லாம் எங்கள்...

Engal Thesam எංගල් දේසම්

...0 | 2014 ஜூன் 15 - 31 | ...க்கங்கள்: 20 | ... 30.00

270



பதவிப்பிரமாண அரசியல் 05



வீரவன்ச புரட்சி எதை நோக்கி? 10

## சுப்ஹு அதானுக்கு தடை



இந்தியாவில் சுப்ஹு தொழுகைக்கான அதானை தடைசெய்ய வேண்டும் என ஹிந்துத்துவாவினர் மங்களரில் ஆர்ப்பாட்டம் ஒன்றை செய்துள்ளனர். காங்கிரஸ் ஆட்சியில் ஊழல் மலிந்துவிட்டது என்று ஆர்.எஸ்.எஸ். கைக்கூலியான ஆன்னாஹசாரே வினாலும் ஆம் ஆத்மி கெஜ்ரிவாலையும் தூண்டிவிட்டு வாக்குகளை பரித்து ஹிந்துத்துவர் ஆட்சியை நிறுவவேண்டும் என்ற ஆர்.எஸ்.எஸ். இன் கனவு பலித்துவிட்ட வேளையில், இஸ்லாமியர்கள் உலகமெங்கும் கடைப்பிடித்து வரும் தொழுகைக்கான அதானை தடை செய்ய வேண்டும் என ஹிந்துத்துவாவினர் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

# கௌதம புத்தர் அடிப்படைவாதத்தை முழுமையாக நிராகரித்தார்



### அமைச்சர் ராஜித சேனாரத்ன

கௌதம புத்தர் இனவாதம், மத வாதம் மற்றும் அடிப்படைவாதத்தை முற்று முழுதாக நிராகரித்தார் என மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

மத்துகமவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; இனவாதிகள் மற்றும் மதவாதிகளினால் நீண்டகாலத்திற்கு நிலைத்திருக்க முடியாது. மனித நேயத்தை எவ்வாறு வளர்த்துக்கொள்வது என்பது பற்றியே கௌதம புத்தர் அதிகம் வழிகாட்டினார்.

## கிரேண்ட்பாஸ் பள்ளிவாசல் வேறு இடம் போகாது

### பிரதி பொலிஸ் மா அதிபர் அநுர சேனாநாயக்க



புனர்நிர்மாணம் செய்யப்படுகின்ற கொழும்பு கிரேண்ட்பாஸ் பள்ளிவாசல் எக்காரணம் கொண்டும் அவ்விடத்திலிருந்து பிறிதோர் இடத்திற்கு இடமாற்றம் செய்யப்படமாட்டாது எனத் தெரிவித்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் அநுர சேனாநாயக்க, முஸ்லிம்கள் தங்களது மத அனுஷ்டானங்களைச் செய்வதற்குத் தேவையான அனைத்து உதவிகளும் புனர்நிர்மாணத்தின் மூலம் கிடைக்கப்பெறும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

➡ 16

## முஸ்லிம் அமைச்சர்கள் ஜனாதிபதிக்கு செல்லாக்காசுகள்

### மேல் மாகாணசபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான்



16 முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து ஜனாதிபதியை சந்திப்பதற்கான ஏற்பாடுகளை செய்யுமாறு கோரியும் இதுவரையிலும் சந்திக்க நேரம் ஒதுக்காத ஜனாதிபதி, விமல் வீரவன்ச இரண்டே இரண்டு அறிக்கை விட்டதற்கு பயந்து நடுங்கி நேரம் ஒதுக்கி சந்தித்தும் விட்டார். எனவே முஸ்லிம் அமைச்சர்கள் ஜனாதிபதியிடம் செல்லாக்காசுகளே என மேல் மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

➡ 17

## முஸ்லிம் சமூகத்தின் எழுச்சிக்காக அனைத்து இயக்கங்களும் ஒன்றுசேர வேண்டும்

### மடவளையில் உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர்



நாட்டில் இயங்குகின்ற அனைத்து சமய அமைப்புக்களும் இயங்கவேண்டும். ஆனால் அவற்றின் இறுதி விளைவு குறித்த ஒரு நோக்கை அடைவதாக இருக்க வேண்டும். என்று இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் தலைவர் அமீர் அஷ்ஷெய்க் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர் தெரிவித்தார்.

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி மடவளை கிளையின் ஏற்பாட்டில் மடவளையில் இடம்பெற்ற இஜ்திமா மாநாட்டில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது;

இன்று நாட்டில் பல்வேறு அமைப்புக்கள் சமயரீதியாக இயங்குகின்றன.

➡ 17



ஸ்ரீ லங்கா தௌஹீத் ஜமாஅத்தின் பொதுச் செயலாளர் அப்துர் ராஷீக்கின் காணொலிக்கு எதிராகவும் முஸ்லிம் பெண்களின் நிகாபைத் தடைசெய்யக் கோரியும் பொதுபல சேனாவினால் நடத்தப்பட்ட முஸ்லிம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்.

## இணைய குற்றங்கள் அதிகரிக்கின்றன தனியான சிம் அட்டையை பயன்படுத்துங்கள்

### பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் ரோஹண



இணையத்தின் ஊடாக வங்கிச் சேவைகளை பயன்படுத்துவோர் கூடுதல் அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

இணைய குற்றங்கள் அதிகரித்து வரும் நிலையில், பொதுமக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும் என பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இணைய பாவனைக்கென தனியான சிம் அட்டையினை பயன்படுத்துமாறு பொதுமக்களுக்கு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

➡ 17

## எட்டு வெப்தளங்களுக்கு அரசாங்கம் கதவடைப்பு

அஸ்ரப் ஏ. சமத்

இலங்கை அரசாங்கம் 8 வெப்தளங்களை இலங்கைக்குள் பொதுமக்கள் பார்வையிடாமல் நிறுத்தியுள்ளது. இவ்விடயம் சம்பந்தமாக வெப் தள ஊடகவியலாளர்கள் சங்கம் மனித உரிமை ஆணைக்குழுவிடம் அடிப்படை மனித உரிமை மீறல் சம்பந்தமாக அறிக்கை சமர்ப்பித்துள்ளதுடன் வழக்கு தாக்கலும் செய்யவுள்ளது.

தமிழ்வின், கொழும்பு டெலிகிராப், லங்கா நியுஸ்வெப், லங்கா ஈ நியுஸ், லங்கா காடியன், ஸ்ரீலங்கா மிரர், ஜப்னா முஸ்லிம், த இன்டிபெண்டன்ட் ஆகிய 8 வெப்தளங்களை அரசு இலங்கையிலிருந்து பார்க்க முடியாமலும் வெப்தளங்களை இயக்க முடியாமலும் தடுத்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

➡ 17

## மரண தண்டனை கைதிகளுக்கு ஆயுள் தண்டனை வழங்க உத்தேசம்

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள 75 கைதிகளுக்கு ஆயுள் தண்டனை வழங்குவது தொடர்பில் ஆலோசிக்கப்பட்டு வருவதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சு குறிப்பிடுகின்றது.

இந்த கைதிகளின் கருத்துக்களை அமைச்சின் மீளாய்வுக்குழு கேட்டறிந்துள்ளதாக அமைச்சின் செயலாளரும் மீளாய்வுக்குழுவின் உறுப்பினருமான ஜீ.எஸ். விதானகே தெரிவிக்கின்றார்.

➡ 17

## குழந்தைகளுக்கு வைரஸ் நோய் பெற்றோர் கவனமாக இருக்கவும்

### டாக்டர் தீபால் பெரேரா

தற்போது குழந்தைகள் மத்தியில் வைரஸ் காய்ச்சல் நோய் பரவுவதாக குழந்தை நோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

வாந்தி, வயிற்றோட்டம், வயிற்றுவலி ஆகியவை நோயின் அறிகுறிகளாகும். குழந்தைகளுக்கு காய்ச்சல் ஏற்பட்டால் பாடசாலைக்கு அனுப்பாமல் தவிர்க்குமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

➡ 17

Des: Shafeek

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறிபடப் போகிறது கந்தாணை பள்ளிவாசல் காணி

அஷ்ரப் ஏ. சமத்

கண்டி கந்தாணை பிரதேசத்தில் தொடர்மாடி வீடமைப்புத் திட்டத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள பள்ளிவாசலுக்கு சொந்தமான 40 பேர்ச்சஸ் காணியை 3 துண்டுகளாக அளவையிட்டு விற்பனை செய்வதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இதனை தடுத்து நிறுத்தி தொடர்ந்தும் அக்காணியை பள்ளிவாசலுக்கு தக்கவைத்துக் கொள்வதற்காக பள்ளிவாசல் நிர்வாகம், வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் விமல் வீரவன்சவை சந்திக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

குறித்த இடம் 100 வருடங்களுக்கு முன்பு ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் தேயிலை, இரப்பர் தோட்டமாக இருந்து வந்துள்ளது. அக்காலம் தொட்டு தோட்டத்தில் வேலை செய்தவர்களுக்காக தமிழ் பாடசாலை யொன்றும் இந்துக் கோவிலும் முஸ்லிம்கள் தொழுவதற்காக சிறு தொழுகையறையும் இருந்து வந்துள்ளன.

கட்டுகஸ்தோட்டை உதவி அரசாங்க அதிபராக கடமையாற்றிய எம். சித்திக் குறித்த பள்ளிவாசலை அபிவிருத்தி செய்தார். அன்றிலிருந்து குறித்த பள்ளிவாசலுக்கு 40 பேர்ச்சஸ் காணியும் வழங்கப்பட்டிருந்தது. அதே போன்று இந்துக் கோவில், தமிழ் பாடசாலைகளுக்கும் சமமான காணிகள் வழங்கப்பட்டன.

இந்நிலையில் கடந்த வாரம் கொழும்பிலிருந்து சென்ற வீடமைப்பு அதிகார சபையின் நில அளவையாளர்கள் மற்றும் அதிகாரிகள் இக்காணியை அளவீடு செய்து தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அடையாளமிட்டுள்ளனர்.

# ஊழல் பட்டியலில் இலங்கை 91 ஆவது இடத்தில்

ஊழல் தரவரிசைப் பட்டியலில் இலங்கை 79 ஆவது இடத்திலிருந்து 91 ஆவது இடத்துக்கு பின்னே சென்றுள்ளது.

அரசாங்கத்தில் இருப்பவர்களின் அளவுக்கதிகமான அதிகாரம் மற்றும் செல்வாக்கு காரணமாக நேர்மை, தூய்மை போன்ற விழுமியங்கள் புரையோடி வருவதாக 2013 ஆம் ஆண்டுக்கான ஊழல் மதிப்பீட்டு சுற்றாய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்ற வருடம் நாற்பது புள்ளிகள் எடுத்து 79 ஆவது இடத்திலிருந்த இலங்கை, இந்த வருடம் 37 புள்ளிகளை எடுத்து 91 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசாங்கப் பிரதிநிதிகள் வசம் அதிகாரம் குவிந்து வருவதால், அரசியல் சாசனரீதியாக ஆளும் கட்டமைப்பில் இருந்த வரம்புகளும் கட்டுப்பாட்டு அம்சங்களும் செயலற்றுப் போயுள்ளதாக டிரான்ஸ்பரன்ஸி இண்டர்நேஷனல் அமைப்பின் சுற்றாய்வு கூறுகிறது.

பொதுமக்களின் பணம் தவறான வழியில் சுருட்டப்படுகின்ற போக்கும் பரவலாகி வருவதாக அது சுட்டிக்காட்டுகிறது. மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற சட்டம் இயற்றும் மன்றங்களுடைய மேலான்மையைக் குலைப்பதாகவும் நீதித்துறையின் சுதந்திரத்தை பாதிப்பதாகவும் இந்தப் போக்கு அமைந்துள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக காவல்துறை, கல்வித்துறை, காணி நிர்வாகம், அரசியல் கட்சிகள் போன்றவற்றில் ஊழல் அதிகமாகி இருப்பதாக டிரான்ஸ்பரன்ஸி இண்டர்நேஷனலின் இலங்கைப் பிரிவு கூறுகிறது.

# எதிர்காலத் திட்டங்களே எம்மை உயிர்ப்பிக்கும்

## கலாநிதி எம்.ஐ.எம். ஜெஸீல்

ஜெஸ்மி எம். மூஸா

பழைய நினைவுகளில் மட்டும் இன்புற்று, அதனைச் சொல்லி மீட்டிக் கொண்டே நம்மில் பலர் காலத்தைக் கடத்துகின்றோம். இதில் விமோசனம் கிடையாது. எதிர்காலத்தை நோக்கிய நகர்வுகளும் திட்டங்களுமே எம்மை உயிர்ப்பிக்கும் என தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமியக் கற்கைகள் பீடத்தின் முன்னாள் தலைவர் கலாநிதி எம்.ஐ.எம். ஜெஸீல் (ஸலபி) தெரிவித்தார்.

இலங்கை அன்சாரில் சுன்னதுல் முகம்மதியா கலாபீடத்திலிருந்து வெளியாகிய கிழக்கு மாகாண ஸலபி மௌலவிமார்களின் ஒன்றுகூடல் மாளிகைக்காடு பிஸ்மில்லா மண்டபத்தில் நடைபெற்றது. அங்கு பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்முனை பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் றஸ்மி மூஸா (ஸலபி) தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர்;

கடந்த காலங்களை மீட்டி அதனை நாம் ஒவ்வொருவராக வந்து பகிர்ந்து கொண்டதில் சந்தோசம். பல உணர்வுகளின் கலப்பினூடாக எம் விடுதி அனுபவங்களை மீட்டோம். உண்மையில் நினைவுகள் நீங்காதவை. எனினும் இந்நினைவுகளினூடாக சமூகத்திற்கு என்ன செய்திருக்கின்றோம், அதில் எமது தடம் என்ன என்பது தான்? எமது வினாவாகும்.

இலங்கையிலும் சர்வதேசத்திலும் மார்க்க விளக்க உரைகளைச் செய்வதினூடாக எமது தடம் பதியப்படுவதில்லை. அது வளர்ச்சிக்கான அளவுகோலும் அல்ல. எமது நாட்டில் ஏனைய கலா பீடத்திலுள்ளவர்கள் பல துறைகளிலும் மிளிர்ந்து வரும் நிலையில் மிகப் பிரபல்யமிக்க ஸலபி மௌலவிகளாகிய நாம் எந்த இடத்தில் உள்ளோம் என்பது குறித்து சிந்திக்க வேண்டும்.

தௌஹீத் கொள்கையுடன் தொடர்புடையவர்கள் என்பதால் பல உயர் பதவிகளில் வரமுடியாமல் ஸலபிகளான நாம் ஓரங்கட்டப்பட்டு வருகின்றோம். இதனை எவ்வாறு வெற்றி கொள்வது என்பதனைப் பற்றி ஆழமாகவும் நிதானமாகவும் சிந்திக்க வேண்டும்.

சமூக கலாசார விடயங்களில் ஸலபிகளின் கருத்து தெரிவிக்கப்படவில்லை. இதற்கான காரணம் என்ன? இவை தொடர்பில் எம்மை நாமே சுய விசாரணைக் குட்படுத்த வேண்டியுள்ளது.

நாங்கள் படிக்கின்ற பாட விதானங்கள் இன்றைய சவால்களை எதிர்கொள்ள ஏற்புடையதா? என்பதை சீர்தூக்கி அதைப் பற்றி நாம் மீள் வளர்ச்சிக்கு உட்படுத்த வேண்டும்.

சமயக் கல்வி, உலகாயக் கல்வி என்ற பிரிகோட்டை விட்டுவிட்டு இஸ்லாமிய வரலாற்றில் இரண்டையும் ஒன்றாக நோக்கியமையினாலேயே எமது மார்க்கம் வளர்ச்சி கண்டது என்பதை நாம் உணர வேண்டும்.

# மோடி இலங்கை மீதும் சீறுவார்

## அரசு தப்புக்கணக்குப் போடுகிறது

### டாக்டர் வசந்த பண்டார




சீனாவுடனான இலங்கையின் நட்புறவை நரேந்திர மோடி ஒரு போதும் விரும்பப்போவதில்லை. எனவே, எதிர்காலத்தில் இலங்கைக்கு எதிரான மோடியின் அரசியல் காய்நகர்த்தல்கள் அதிகரிக்கும். மோடி இன்னும் கொஞ்ச நாட்களில் பாகிஸ்தானுக்கு எதிராக போரை ஆரம்பிப்பது நிச்சயமாகும். எனவே, முழு தெற்காசியாவில் யுத்த மேகங்கள் சூழும் காலம் வெகு தொலைவில் இல்லை. தீவிரவாத இந்துத்துவ கொள்கை கொண்ட மோடி தெற்காசியாவை மோதல்கள் வலயமாக மாற்றுவார் என தேசப் பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலையே தெற்காசியாவில் மோடியின் அரசாங்கம் முன்னெடுக்கும். இந்திய மத்திய அரசாங்கத்திற்கு தனிப் பெரும்பான்மை பலமிருப்பதனால் ஜெயலலிதாவின் அழுத்தங்கள் எடுபடப்போவதில்லை என்ற அரசாங்கத்தின் நிலைப்பாடு பிழையானது. ஏனென்றால் இதற்கு முன்பிருந்த காங்கிரஸ் அரசும் ஜெயலலிதாவும் இலங்கையின் பிரிவினையை ஏற்படுத்தும் அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலுக்கே துணை போனவர்கள்.

எனவே, இந்தியாவின் மோடியின் அரசாங்கமும் அமெரிக்காவின் நிகழ்ச்சி நிரலையே முன்னெடுக்கும். அதற்கு ஜெயலலிதாவும் துணைபோவார். இதனை புரியாது அரசு தப்புக்கணக்கு போடுகிறது. அத்தோடு தெற்காசியாவில் சீனாவின் ஆதிக்கத்தை எதிர்க்கும் அமெரிக்கா அதற்காக மோடியைப் பயன்படுத்தும்.

➡ 16



முல்லை முஸ்லிம் இளைஞர் அமைப்பினால் கல்வி அபிவிருத்தி செயற்திட்டமாக இவ்வாண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களின் நலன் கருதி ஆலங்குடா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் இலவசக் கருத்தரங்கு நடைபெற்றது.

இந்நிகழ்வின்போது சுமார் 115 மாணவர்கள் கலந்துக்கொண்டனர். வளவாளர்களாக ஆசிரியர் பி.எம். நஸீம், ஐ.எம். ரனூஸ் ஆகியோரும் முல்லை முஸ்லிம் இளைஞர் அமைப்பின் தலைவர் என்.எம். நௌபலும் அமைப்பின் உறுப்பினர்களும் பாடசாலை அதிபரும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

படமும் தகவலும்: முல்லை நஸீர்

# பேருந்து தீப்பிடித்து விபத்து 35 குழந்தைகள் கருகிய பரிதாபம்

கொலம்பியாநாட்டில்பேருந்து ஒன்று தீப்பிடித்து எரிந்ததில் 32 குழந்தைகள் பரிதாபமாக பலியாகினர். இந்த விபத்து காரணமாக கொலம்பியாவில் கடும் அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது.

கொலம்பியா நாட்டின் தலைநகர் பொகாதா என்ற நகரிலிருந்து 750 கி.மீ. தூரத்திலுள்ள ஒரு நகரில் சர்ச் ஒன்றுக்காக சென்று கொண்டிருந்த பேருந்தில்தான் இந்த தீவிபத்து ஏற்பட்டுள்ளது. இந்த பேருந்தில் 35 குழந்தைகள் உட்பட மொத்தம் 50 பேர் பயணம் செய்துள்ளனர். பேருந்து சென்று கொண்டிருக்கும் போதே தீப்பிடித்ததால், வயதானவர்கள் பேருந்திலிருந்து குதித்துவிட்டனர். ஆனால் பயணம் செய்த 35 குழந்தைகளும் பரிதாபமாக பலியாகினர்.

இந்த பேருந்து விபத்து குறித்து பொலிஸார் விசாரணை செய்து வருகின்றனர். பலி எண்ணிக்கை இன்னும் அதிகமாகும் என அஞ்சப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY JAFFNA.

# ஊடகங்களின் சோடினைச் செய்திகள் கவலையளிக்கிறது

## பிரதியமைச்சர் பைஸர் முஸ்தபா

ஐ.ஏ. காதிர்கான்



சமயங்களுக்கிடையிலான பிரச்சினைகளை பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சிகள் ஊடாக அறிவிக்கும்போது மிகவும் அவதானத்துடன் மேற்கொள்ளுமாறு, சகல ஊடக நிறுவனங்களையும் முதலீட்டு ஊக்குவிப்பு பிரதியமைச்சர் சட்டத்தரணி பைசர் முஸ்தபா கேட்டுள்ளார்.

இவரது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது; கடந்த காலப் பகுதிக்குள் இனவாதம் மற்றும் இனங்களுக்கிடையில் அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையிலான செய்திகள், சில பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டும் வானொலிச் செய்திகளில் அறிவிக்கப்பட்டும் வந்தன.

சமயங்களுக்கிடையில் இன முறுகலையும் மனக் கசப்புக்களையும் உருவாக்குபவர்களின் அறிக்கை மற்றும் செய்திகளை ஊடக நிறுவனங்கள் மேலும் சோடினை செய்வது அல்லது செய்திகளை திரிபுபடுத்திக் கூறுவதானது பிரச்சினைகள் மேலும் அதிகரிப்பதற்கு வழிவகுக்கும்.

இவ்வாறான செய்திகளை, ஊடகங்கள் தொடர்ந்தும் வெளியிட்டு வருவதால் இனவாதிகளின் சமயங்களை அபகீர்த்திக்கு உள்ளாக்கும் முயற்சிகள் மென்மேலும் வலுவடையும் என்பதையும் கவலையுடன் தெரிவிக்கின்றேன்.

தவறான முறையில் செய்திகள் வழங்கப்படுவது, இனங்களுக்கிடையிலான நல்லுறவுக்கு பாரிய விரிசல்களை ஏற்படுத்தும். இதுபோன்ற செய்திகளை வழங்கும்போது, மிகப் பொறுப்புடனும் விழிப்புடனும் ஊடகங்கள் நடந்துகொள்ள வேண்டும்.

# பௌத்த-முஸ்லிம் கலவரத்தை ஏற்படுத்தவே சதி நடக்கிறது

## வட மாகாண சபை உறுப்பினர் றிப்ஹான்



முஸ்லிம்களின் ஹலால் உணவில் ஆரம்பித்து தற்போது பொருளாதாரத்தை அழிப்பதில் இனவாத அமைப்புகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன. முஸ்லிம்-சிங்கள கலவரமொன்றை ஏற்படுத்தி அதில் குளிர்காய்வதே அவ்வமைப்புகளின் நோக்கமாகும் என்று வட மாகாண சபை உறுப்பினர் றிப்ஹான் பதியுத்தீன் தெரிவித்துள்ளார்.

முஸ்லிம் சமூகத்துக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டு அச்சமூகத்தின் பொறுமையைச் சோதிக்க இந்த இனவாத கும்பல்கள் தொடர்ந்தும் முயற்சித்து வருகின்றன.

அளுத்கமையில் முஸ்லிம் வர்த்தகருக்குச் சொந்தமான வர்த்தக நிலையமொன்று எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பான சர்ச்சை தணிவதற்குள், மாவனல்லையில் மற்றுமொரு முஸ்லிம் வர்த்தகரின் கடையொன்றும் எரிக்கப்பட்டுள்ளது.

ஏனைய இனங்களுடன் சகோதரத்துவமாக வாழ நினைக்கும் முஸ்லிம் சமூகத்தின் மீது ஏன் இவ்வாறான காழ்ப்புணர்வு செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்?

முஸ்லிம் சமூகத்தை குறிவைத்து வரும் இந்த எதிர்ப்பு செயற்பாடுகளை அரசாங்கம் உடனடியாக கட்டுப்படுத்த வேண்டும். நாங்கள் அரசுடன் இணைந்து நாட்டுப் பற்றுடன் செயற்படும்போது, இவ்வாறான செயல்கள் மூலம் எமது சமூகம் எங்களைப் பார்த்து கேள்விகளைக் கேட்கும்போது பதிலளிக்க முடியாத நிலையில் உள்ளோம்.

வடக்கில் புலிகளினால் முஸ்லிம் சமூகத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட செயற்பாடுகளை விஞ்சிய நிலையில் இன்றைய இனவாதக் கும்பல்களின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. சட்டத்தையும் ஒழுங்கையும் இவர்கள் கையில் எடுத்துக்கொண்டு காட்டுத்தர்பார் புரிகிறார்கள். இவ்வித இனவாதத்தை கக்கி வரும் இவர்களின் நடவடிக்கைகளுக்கு தீர்க்கமானதொரு முடிவு வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# டெங்குத் தாக்கம் எங்கும் பரவல்

அண்மையில் பெய்த மழை காரணமாக கொழும்பு மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் மீண்டும் டெங்கு காய்ச்சல் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இரத்தினபுரி நகர பிரதேசத்தில் டெங்கு காய்ச்சல் அறிகுறிகளுடன் 40 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் புனித அலோசியஸ் கல்லூரி மாணவர்கள் 30 பேர் உட்பட, 32 பேர் பாடசாலை மாணவர்கள் என இரத்தினபுரி பொது மருத்துவமனை தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் டெங்கு நோய் ஆபத்து தொடர்ந்தும் இருப்பதாக மாகாண சமூக வைத்திய நிபுணர் டாக்டர். எஸ். அருள்குமரன் தெரிவிக்கின்றார்.

கிழக்கு மாகாணத்தில் மழை பெய்யாத போதிலும் நீர்த் தாங்கிகளிலும் குளிர் சாதனப் பெட்டிகளில் தேங்கும் நீரிலும் டெங்கு நுளம்புகள் பெருகுவதை தங்களால் கண்டுபிடிக்க முடிந்ததாகவும் அவர் குறிப்பிடுகின்றார்.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னேற்றகரமாக இருந்தாலும் சமூக மட்டத்தில் அது எதிர்பார்த்த பலனைத் தரவில்லை என்றும் அவர் குறிப்பிடுகிறார்.



கல்முனை செக்றோ ஸ்ரீலங்கா மற்றும் வாஹிதிய்யா அரபுக்கல்லூரி இணைந்து நடத்திய விசேட தலைமைத்துவ பயிற்சிநெறி சாய்ந்தமருது இளைஞர் மத்திய நிலையத்தில் நடைபெற்றது. மௌலவி நபாஸ் தலைமையில் இடம்பெற்ற இப்பயிற்சி நெறியில் விசேட அதிதியாக யூத் சென்டரின் அதிபர் லதீப் மற்றும் வளவாளராக உளவள ஆலோசகரும் செக்றோ ஸ்ரீலங்கா நிறுவனத்தின் தலைமைப்பாளர் றினோஸ் ஹனிபா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# சீனா - இலங்கை உறவில் பாதகத்தை ஏற்படுத்திய இருவருக்கு சிறைத் தண்டனை

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை உரிய முறையில் நிர்மாணிக்காத காரணத்திற்காக சீன அதிகாரிகளுக்கு அந்நாடு சிறைத் தண்டனை விதித்துள்ளது.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் சகல நிர்மாணப் பணிகளையும் மேற்பார்வை செய்த இரண்டு உயர் அதிகாரிகளே இவ்வாறு தண்டிக்கப்பட்டுள்ளனர். நிர்மாணப் பணிகளை பொறுப்புடன் மேற்கொள்ளாத காரணத்தினால் அனல் மின் நிலையத்தின் பணிகள் தோல்வியடைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் சீனாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளில் பாதக நிலைமை ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டதாகவும் இதற்கு காரணமான இந்த சீன அதிகாரிகள் இருவருக்கு அந்நாட்டு நீதிமன்றம் சிறைத் தண்டனை விதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# வட்டுக்கோட்டை மூளைச் சலவை அழிவுப் பாதைக்கே இட்டுச் சென்றது

## முன்னாள் முதலமைச்சர் சந்திரகாந்தன்



தோல்விகளை வெல்லக் கூடியதும் அதனை ஓர் அனுபவமாகவும் கொண்டு சவால்களை எதிர்கொள்ளக் கூடியவர்களாகவும் இளைஞர்கள் திகழ வேண்டும்.

இளைஞர்கள் திடீரென உணர்ச்சிவசப்படுபவர்கள். இச்செயற்பாடுகள் அவர்களது எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கி விடும். இன்றைய இளைஞர் சமுதாயம் அறிவுப் புரட்சியின்பால் உந்தப்பட்டவர்கள். அவர்கள் நிச்சயம் தவறான பாதைக்கு செல்லமாட்டார்கள். 1976 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின்போது கிழக்கு மாகாணத்திலிருந்து பெரும்பாலான இளைஞர்கள் மூளைச் சலவை செய்யப்பட்டு வட்டுக் கோட்டைக்கே அனுப்பி வைக்கப்பட்டார்கள். அப்போது அங்கு எடுக்கப்பட்ட தீர்மானமானது வெறுமனே அழிவுக்கான கோஷங்களாக இருந்ததே தவிர, எந்தவித ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கும் அது வித்திடவில்லை என முன்னாள் முதலமைச்சரும் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

தற்போதைய போட்டிமிக்க உலகிற்கு ஏற்றாற்போல் நாமும் மாறவேண்டும். இன்று அறிவு சார்ந்த ஒரு சமூகத்துடன் நாம் பின்னிப் பிணைந்துள்ளோம். ஆதற்கேற்றால் போல் நாமும் கற்று எதிர்காலத்தை வளமானதாக்கிக் கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மாற்றங்களைப் பொறுத்து எமது முடிவுகளும் மாறலாம்

## அமைச்சர் ரவூப் ஹக்கீம்



ஊவா மாகாணத்தில் நடைபெறவுள்ள மாகாணசபைத் தேர்தலில் அனைவரும் ஒன்றுபட்டு நின்றால் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொள்ள முடியும். ஊவா மாகாணசபைத் தேர்தலில் அனைவரும் ஒன்றுபட வேண்டியுள்ளது என அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் தேசிய மட்டத்தில் தேர்தலொன்று நடைபெறக் கூடிய சூழ்நிலையுள்ளது. அது ஜனாதிபதித் தேர்தலாகவோ, நாடாளுமன்றத் தேர்தலாகவோ இருக்கலாம். இன்றுவரை ஜனாதிபதித் தேர்தலொன்றுக்கான சாத்தியங்கள் காணப்படுவதாகவே கூறப்படுகிறது. எனினும், இனிவரும் மாற்றங்களைப் பொறுத்து எமது முடிவுகளும் மாற்றக்கூடிய நிலையுமுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மல்வானை அல் முபாறக்கில் தொழிநுட்பப் பாடநெறிகள்

உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல் மற்றும் தொழிநுட்பம் போன்றதுறைகளில் தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல உயர்தர வகுப்புக்கள், மல்வானை அல் முபாறக் தேசிய பாடசாலையில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக, கல்லூரியின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர் ஸபர் சாலி தெரிவித்தார். அத்துடன், இக்கற்கை நெறியில் இணையும் மாணவ, மாணவிகளுக்கு இலவச விடுதி வசதிகள் செய்து கொடுக்கப்படுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்த வகுப்புக்களில் கணிதம், பொறியியல், தொழிநுட்பம், வர்த்தகம், கணக்கியல், தமிழ் ஆகிய பாடங்களைப் போதிக்கக்கூடிய, மிகவும் அனுபவமுள்ள ஆசிரியர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் ஆர்வமுள்ள ஆசிரியர்கள், அல் முபாறக் தேசிய பாடசாலையுடனோ அல்லது 011-2571552, 077-1993255 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடனோ தொடர்பு கொள்ள முடியும் என்றும் கல்லூரி அதிபர் எம். ஆர். எம். ஹம்ஸா தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தேசம்
மலர் : 13 இதழ் : 11 ஜூன் 01 - 14

77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு– 09, இலங்கை
தொலைபேசி: 0112 698771 / 0777 412561, பெக்ஸ்: 0112 686030,
மின்னஞ்சல்: engalthesamnews@gmail.com




## இந்தியத் தேர்தல் முடிவு இலங்கைக்கு ஒரு பாடமாக அமைய வேண்டும்

இந்திய லோக் சபாவுக்கான தேர்தலில் நரேந்திர மோடியைப் பிரதமர் வேட்பாளராகக் கொண்ட பாரதீய ஜனநாயக கட்சி தனிப் பெரும்பான்மை பெற்று ஆட்சியமைக்கும் தகுதியைப் பெற்றுள்ளது. இதுவரை தேசிய அரசியலில் எவ்வித அனுபவமும் அற்ற நரேந்திர மோடி இப்போதுதான் முதன் முறையாக இந்தியப் பாராளுமன்றத்தின் ஓர் எம்பியாக வருகிறார். முதல் வருகை அவருக்குப் பிரதமர் பதவியையே வழங்குகின்றது. குஜராத் மாநிலத்தைப் பொருளாதார ரீதியாக முன்னேற்றினார் என்ற பாராட்டுடன் ஆயிரக்கணக்கான அப்பாவி முஸ்லிம்களைக் கொன்று குவிக்கக் காரணமாய் இருந்தார் என்ற அவப் பெயரும் அவருக்குண்டு. இந்தியாவில் மட்டுமன்றி, சர்வதேசத்திலும் அவரின் கொடுமைகள் கண்டிக்கப்பட்டன. அமெரிக்கா அவருக்கு வீஸா வழங்குவதை நிறுத்தி வைக்குமளவுக்கு அது பாதிப்பைச் செலுத்தியிருந்தது.

காங்கிரஸ் ஆட்சியில் உலகளவில் புகழ் பெற்ற பொருளியல் நிபுணர் கலாநிதி மன்மோகன் சிங் பிரதமராக இருந்தார். ஏற்கனவே இந்தியாவின் நிதியமைச்சராக இருந்து திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்தி, இந்தியாவைப் பொருளாதார ரீதியாக நிமிர்த்தி வைத்த பெருமை அவருக்குண்டு. தனது சொத்துக்களில் பெரும் பகுதியை அரசாங்கத்துக்கு நற்கொடையாக வழங்கியவர். அரசியலில் இருந்து ஒதுங்கியிருந்தவர். அவரளவில் எந்த ஊழலிலும் ஈடுபட்டதற்கான சான்றுகள் இல்லை. புகழ் பூத்த நேரு குடும்பத்தின் வாரிசுகள் ராகுல், பிரியங்கா, சோனியா ஆசிய இந்திய நட்சத்திரங்களின் பங்களிப்புடன் களமிறங்கிய தேர்தலில் காங்கிரஸ் கட்சி ஏன் தோற்றுப் போனது என்பது பற்றிய பல கருத்துக்கள் பரிமாறப்பட்டுள்ளன.

ஆகக் குறைந்த பொருளாதார வளர்ச்சியாக 5.5 முதல் 6.5 வரை இருந்துள்ளது. தேசிய ரீதியில் செல்வாக்காளர் கட்சி, சிறுபான்மையினரின் ஆதரவைப் பெற்ற கட்சி. 180 கோடி முஸ்லிம்கள் இம்முறை பாஜக கட்சி தோற்கடிக்கும் நோக்கில் வாக்களிப்பில் ஈடுபட்டனர். ஹரிஜன்கள், தபர்கள், கிரிஸ்தவ மற்றும் சிறுபான்மை சமூகத்தினரும் பாஜக கட்சியை பெரிதாக விரும்புவதில்லை இருந்தும் பாஜக தான் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளது. இதற்கான பிரதான அல்லது ஒரே காரணமாகக் கூறப்படுவது காங்கிரஸ் அரசின் ஊழல்தான். பல மட்டங்களிலும் நடைபெற்ற ஊழல்கள் சரியாக விசாரிக்கப்படவில்லை. உரிய குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. குறிப்பாக, 39 அலைக்கட்டு எனப்படும் தொலைத்தொடர்பு அலைவரிசை விநியோகம் தொடர்பான 195,000 கோடி இந்திய ரூபா மோசடி செய்த வழக்கில் காங்கிரஸ் அரசின் அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் சம்மந்தப்பட்டுள்ளனர் என்று ஊடகங்கள் பறைசாற்றின.

தமிழ்நாட்டில் தி.மு.க. வின் தோல்விக்கு கூட இது காரணமாய் அமைந்தது. தி.மு.க. வைச் சேர்ந்த அ. ராஜா என்ற அமைச்சர்தான் மேற்கூறிய ஊழல் மோசடியில் நேரடியாக சம்பந்தப்பட்டு பல காலம் விளக்கமறியலில் இருந்தார். எவ்வளவு பலமான அரசாக இருந்தாலும் எதிர்க்கட்சிக்கு எத்தகைய அவப் பெயர்கள் இருந்தாலும் பொதுமக்கள் ஊழல் மோசடிகளைச் சகித்துக் கொள்வதில்லை என்பதை இந்தியப் பொதுத்தேர்தல் பெறுபேறுகள் எமக்குச் சுட்டிக் காட்டுகின்றன. இது இந்தியாவுக்கு மட்டுமன்றி இலங்கைக்கும் ஒரு நல்ல பாடமாகும். அபிவிருத்திகளினால் மட்டும் மக்களின் வாக்குகளை வெல்ல முடியாது ஊழல் மோசடியற்ற நல்லாட்சி நோக்கிய பயணமும் வேண்டும் என்ற பாடத்தைச் சம்பந்தப்பட்டவர்கள் படிப்பார்களா?

## சொல் வெட்டு





■ இலங்கையின் இனப்பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினையாகும். இதற்கான தீர்வு உள்நாட்டுக்குள்ளேயே தீர்க்கப்படல் வேண்டும்.

– அமைச்சர் விமல் வீரவன்ச

ஆத்தக் கடக்கும் வரைக்குந்தான் கடவுள் வேண்டுதல். உள்நாட்டுப் பிரச்சினைக்கு வெளிநாட்டுத் தலையீடுகள் தேவையில்லை என்றிருந்தால் போர்விமான இறக்குதலுக்கு வெளிநாடுகள் தேவைப்பட்டிருக்கக் கூடாது.



■ நாட்டில் இந்துக்களும் பௌத்தர்களும் இணைந்து அமைப்பொன்றை உருவாக்கி மதமாற்ற நடவடிக்கைக்கு எதிராக போராட வேண்டும்.

– ஞானசாரர்


ஆடு நனையிதுண்டு ஓநாய் அழுதிச்சாம். ஓங்க ஆட்டத்தில் முதன் முறையாக தமிழர்களையும் சேர்த்திருக்கீங்க போல...



■ முஸ்லிம் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தைக்கு நேரம் ஒதுக்காத ராஜபக்ஷ அமைச்சர் விமலுடன் பேச்சுவார்த்தை நடத்த நேரம் ஒதுக்கியிருக்கிறார்.

– மாகாணசபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான்

அரசியல் நீடிக்கவேண்டுமென்றால் சில பிரச்சினைகள் நீடிக்கப்படல் வேண்டும். சில பிரச்சினைகள் உடன் தீர்க்கப்படவும் வேண்டும்.



■ இந்தியாவை தாக்கிய அரசியல் சூறாவளி இலங்கையை தாக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை.

– ஐக்கிய தேசியக் கட்சி

உங்களது முள்ளந்தண்டு நிமிராத வரையில் நீங்கள் எப்படித்தான் குத்திக்கரணம் அடித்தாலும் ஆட்சிமாற்றத்தைக் கொண்டுவர முடியாது.



■ இந்திய வரவேற்பு விழாவில் எதிர்க்கட்சிகளின் முக்கியஸ்தர்கள் மற்றும் முன்னாள் ஆட்சியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டமை இலங்கையின் அரசியலுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

– டியு குணசேகர

எதிர்க்கட்சிகள் ஆளுந்தரப்புக்கு ஒத்துழைத்திருந்தால் பண்டார நாயக்கவின் ஆட்சிக் காலத்திலேயே இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டிருக்க முடியும்.



■ நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் நியாயமான தீர்வு கிடைக்காவிட்டால் அரசை விட்டும் வெளியேறுவேன்.

– அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

அப்போ நீங்களும் ஆட்சிமாற்றத்தை எதிர்ப்பார்க்கீங்க போல...

**எங்கள் தேசம் சந்தா விபரம்**

உள்நாடு: தனிப்பிரதி: 30.00 / வருட சந்தா: 1200.00 / ஆறு மாதங்கள்: 600.00

வெளிநாடு: இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, மலேஷியா, சிங்கப்பூர்:3600.00 / மத்திய கிழக்கு நாடுகள்: 3750.00 / அவுஸ்திரேலியா, தென்கொரியா: 4700.00 / இங்கிலாந்து: 5750.00, அமெரிக்கா, கனடா: 6900.00, ஜப்பான்: 4800.00

எங்கள் தேசத்துக்கு காசுக்கட்டளை அனுப்ப விரும்புவர்கள்: காசுக்கட்டளை பெறுவோர், Engal Thesam, தபால் நிலையம் Dematagoda எனவும் குறிப்பிட்டு அனுப்பவும். முகவரி: 77, Dematagoda Road, Colombo - 09.
Accont Name: SLJEI | Bank Account No. BOC: 372132 | Commercial Bank: 1320009182
தொடர்புகளுக்கு: 077 2992220


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதவிப்பிரமாண அரசியல்

எம்.எஸ்.எம். ஐயூப்

இலங்கை விடயத்தில் தமிழ்நாட்டுத் தலைவர்கள் விடுத்த முதலாவது கோரிக்கையை புதிய இந்திய பிரதமராகப் போகும் நரேந்திர மோடி நிராகரித்துள்ளார். மோடி, பிரதமராக சத்தியப்பிரமாணம் செய்யும் வைபவத்தில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொள்வதை தமிழ்நாட்டுத் தலைவர்களான முதலமைச்சர் ஜெயலலிதா, எதிர்க்கட்சித் தலைவர் மு. கருணாநிதி மற்றும் மோடியின் பாரதீய ஜனதாக் கட்சியோடு கூட்டமைப்பு அமைத்து போட்டியிட்ட வைகோ ஆகியோர் எதிர்த்த போதிலும் பா.ஜ.க. அந்த எதிர்ப்பை ஏற்கவில்லை.

சந்தோஷமான நிகழ்வொன்றின் போது அயலவர்களை அழைப்பதுதான் இங்கு நடந்துள்ளது என்றும் அதனை தமிழ் நாட்டுத் தலைவர்கள் புரிந்து கொள்வார்கள் என்றும் பா.ஜ.க. பேச்சாளர் நிர்மலா சீதாராமன் கூறியிருக்கிறார்.



தமது பதவிப்பிரமாண வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு மோடி, தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு அமைப்பின் (சார்க் அமைப்பின்) சகல நாடுகளினதும் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார். உண்மையிலேயே இதில் அசாதாரணத் தன்மை காண்பதாக இருந்தால் காண வேண்டியது ராஜபக்ஷவுக்கான அழைப்பில் அல்ல. பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷரிபுக்கு விடுக்கப்பட்ட அழைப்பே அசாதாரணமான அழைப்பாக கருதப்படல் வேண்டும். ஏனெனில் இந்தியாவும் பாகிஸ்தானும் நட்பு நாடுகளாக மரபுரீதியாக கருதப்படுவதில்லை.


உண்மையிலேயே இந்த அழைப்பை விடுக்கும்போது மோடியும் பாகிஸ்தான் பிரதமரைத்தான் மனதில் வைத்துக் கொண்டு அழைப்பு விடுத்திருப்பார். அதே வேளை, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, மோடியின் வைபவத்தில் கலந்துகொள்ளா விட்டால் அது அந்த வைபவத்தில் குறையாக விளங்கும் என்று கூற முடியாது. ஆனால் நவாஸ் ஷாப் கலந்துகொள்ளா விட்டால் அது அங்கு தெளிவாக தெரியும், குறைபாடாக அமையும்.

பா.ஜ.க. வின் இந்துத்துவக் கொள்கையை கவனத்தில் கொள்ளும்போது பாகிஸ்தானும் உள்ளடங்கும் வகையில் மோடி, சார்க் நாடுகளின் தலைவர்களை அழைப்பதே வித்தியாசமான விடயமாகும். தமிழக தலைவர்கள் இலங்கைத் தலைவர்களுடன் முரண்படுவதை விட பா.ஜ.க. வினர் பாகிஸ்தான் தொடர்பில் முரண்படுகிறார்கள் என்பது எல்லோரும் அறிந்த விடயமாகும். எனவே அந்தப் பிரச்சினைகளை ஒரு புறம் வைத்துவிட்டு சகல சார்க் நாடுகளினதும் தலைவர்களை பா.ஜ.க. அழைக்கும்போது இந்துத் தீவிரவாதக் கட்சி என்று தமக்கிருக்கும் அவப்பெயரை நீக்கிக்கொள்ள அக்கட்சி முயற்சிக்கிறதா என்ற கேள்வியும் எழுகிறது.

பா.ஜ.க. பதவிக்கு வந்த முதன் முறை இதுவல்ல. 1998 ஆம் ஆண்டு அடல் பிஹாரி வாஜ்பாயின் தலைமையிலும் அக்கட்சி பதவிக்கு வந்தது. அப்போதும் அக்கட்சியின் தலைவர்கள் இது போன்று பாகிஸ்தான் விடயத்தில் சுமுகமான கொள்கையொன்றை கடைப்பிடிக்க முற்பட்டனர். வாஜ்பாய், பாகிஸ்தானுக்கு பஸ் சேவையொன்றை ஆரம்பித்து முதலாவது பஸ்ஸில் தாமும் பாகிஸ்தானுக்குச் சென்று பாகிஸ்தான் விடயத்திலான இந்திய நிலைப்பாட்டை மாற்ற முயற்சி செய்தார். எனவே இலங்கை ஜனாதிபதிக்கு அழைப்பு விடுப்பதானது பாரியதோர் திட்டத்தின் மிகச் சிறியதொரு விடயமாகும்.

தமிழ்நாட்டுத் தலைவர்கள், இலங்கைத் தலைவர்களுடன் முரண்பட்டுக் கொண்டிருந்த போதிலும் இந்திய மத்திய அரசாங்கத்திற்கோ அல்லது மத்திய அரசாங்கத்தின் புதிய ஆளுங்கட்சியான பா.ஜ.க. வுக்கோ இலங்கை அரசாங்கத்துடன் அவ்வளவு பெரிய பிரச்சினைகள் இல்லை. தமது தேர்தல் பிரசாரத்தின் போதும் மோடி, பாகிஸ்தான் மற்றும் சீனாவை சாடி பேசினாரேயல்லாமல் இலங்கையைப் பற்றி ஒரு வார்த்தையேனும் மோசமாக பேசியதில்லை.

இப்போது மோடியின் சத்தியப்பிரமாண வைபவத்தைப் பற்றி இலங்கையிலும் ஒரு



சர்ச்சை உருவாகியிருக்கிறது. தமது பதவிப்பிரமாண வைபவத்தில் கலந்துகொள்ளுமாறு மோடி விடுத்த அழைப்பை ஏற்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அதற்காக தம்மோடு இணைந்து கொள்ளுமாறு வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கும் அழைப்பு விடுத்துள்ளார். ஆனால் முதலமைச்சர் அதனை நிராகரித்துள்ளார்.

மற்றவர்களுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்வதில் மஹிந்த ராஜபக்ஷ வல்லவர் என்றே கருதப்படுகிறது. எனவே அவர் இதுபோன்றதோர் அழைப்பை விடுப்பதில் ஆச்சரியப்படத் தேவையில்லை. அதற்காக அவர் பலரது பிறந்த நாட்களையும் இது போன்ற முக்கிய நிகழ்வுகளையும் பாவிப்பதும் உண்டு.

அண்மையில் அவர் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திஸா நாயக்கவுக்கு அவரது பிறந்த நாளில் தொலைபேசியில் அழைத்துள்ளார். ம.வி.மு. தலைவர் அதற்கு பதிலளிக்கவில்லையாம். உண்மையிலேயே ஜனாதிபதி தொலைபேசியில் தம்மை அழைத்தது தம்மை வாழ்த்த அல்ல என்றும் தம்மை வாழ்த்திவிட்டு அதனை ஊடகங்களுக்கு அறிவித்து புள்ளிகளை சேகரிப்பதற்காகவே என திஸாநாயக்க பின்னர் கூட்டம் ஒன்றில் பேசும்போது கூறியிருந்தார்.


வட மாகாண முதலமைச்சருக்கான ஜனாதிபதியின் இந்த அழைப்பிலுள்ள ஒரு முக்கியத்துவம் என்னவென்றால் ஜனாதிபதி, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மூலமாகவே முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு அழைப்பு விடுத்துள்ளார். இது விந்தையானது. வெளிநாட்டலுவல்களுக்கு பொறுப்பான அமைச்சர் மூலம் வட மாகாண முதலமைச்சருக்கு அழைப்பு விடுப்பதற்கு வட மாகாணம் என்ன வெளிநாடொன்றா?

ஜனாதிபதியின் அழைப்பை ஏற்பதானது இலங்கையின் மத்திய அரசாங்கத்திற்கும் வட மாகாண சபைக்கும் இடையே சிறந்த உறவு இருப்பதாக உலகுக்கு தவறானதொரு கருத்தை கொடுத்துவிடும் என்பதால் தாம் அந்த அழைப்பை ஏற்பதில்லை என்றே வட மாகாண முதலமைச்சர் கூறியிருக்கிறார்.

இந்த பதில் சற்று சர்ச்சைக்குரியதாகும். இலங்கையின் மத்திய அரசாங்கத்திற்கும் வட மாகாண சபைக்கும் இடையே சிறந்த உறவு இருப்பதாக உலகக்கு காட்டிக் கொள்வதால் ஏற்படப்போகும் நட்டம் என்ன? அல்லது மத்திய அரசாங்கத்திற்கும் வட மாகாண சபைக்கும் இடையே சிறந்த உறவு இல்லை என்று காட்டிக்கொள்வதில் ஏற்படப்போகும் நன்மை என்ன? என்று ஒருவர் கேட்கலாம்.

➡ 16

# மண்முனைப்பற்று முஸ்லிம்கள் மீதான அரச, நிர்வாக கெடுபிடிகள்



மண்முனைப்பற்று பிரதேசத்தில் வாழும் முஸ்லிம் மக்கள் மீதான அரச, நிர்வாக ரீதியான கெடுபிடிகள் தொடர்ந்து கொண்டே செல்கின்றன. இதற்கான தீர்வை மாவட்ட அபிவிருத்திக்குழு பெற்றுத்தர வேண்டுமென கிழக்கு மாகாணசபை உறுப்பினர் பொறியியலாளர் சிப்லி பாறுக் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் கொக்கட்டிச் சோலையிலுள்ள கருணை அம்மான் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. அங்கு உரையாற்றுகையிலேயே கிழக்கு மாகாணசபை உறுப்பினர் பொறியியலாளர் சிப்லி பாறுக் மேற்கண்டவாறு கூறினார்.

மண்முனைப்பற்று பிரதேச முஸ்லிம் மக்களின் காணிப் பிரச்சினை ஆராயப்பட்டு, அதன் பின்பு இது சம்பந்தமாக இரண்டு கூட்டத்தொடர்கள் மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தில் நடைபெற்றன.

அதன்போதெல்லாம் காணி தொடர்பான பிரச்சினைகள் ஆராயப்பட்டதுடன் அரச அதிகாரிகள் மக்களின் பிரச்சினைகளை இன, மத வேறுபாட்டுக்கு அப்பால் நின்று தீர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொண்ட போதிலும் தொடர்ந்தேர்ச்சியாக மண்முனைப்பற்று பிரதேசத்தில் வாழும் முஸ்லிம் மக்கள் மீதான அரச, நிர்வாக ரீதியான கெடுபிடிகள் தொடர்ந்து கொண்டே செல்கின்றன.

இதனடிப்படையில் மண்முனையில் அரச காணி என்ற பிரச்சினை தொடர்ச்சியாக வலுப்பெற்றுக் கொண்டுதான் செல்கின்றது.

28.03.2014 இல் LAN/HAN/MA/FE 2013.07 என்ற இலக்கத்தினாலான 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் சட்டத்தின்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்.460) 2 ஆம் பிரிவின் கீழ் ஒரு படிவம் மண்முனைப்பற்று பிரதேச செயலாளரினால் ஒப்பமிடப்பட்டு அங்கு நிரந்தரமாக வசித்துவருகின்ற ஒருவரது கடையில் ஒட்டப்பட்டிருக்கின்றது.

இதனடிப்படையில் 21.04.2014 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் ஒன்று பிரதேச செயலாளர், காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு, பத்தரமுல்ல என முகவரியிடப்பட்டு மேற்குறிப்பிட்ட விளம்பரப்படுத்தலுக்கு 14 நாட்களுக்குள் இந்தக் காணி சம்பந்தமாக எவ்வித மறுப்புமில்லை என எழுத்து மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்ளதாக கூறி, இதனை மேல் நடவடிக்கைக்காக சமர்ப்பிக்கப்படுகின்றது என்ற கடிதம் காணி அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இக்காணிக்கு உரிமையாளர் இருக்கத்தக்க, இதற்கு எவ்வித மறுப்புமில்லை என்றதொரு பொய்யான தகவலைக் கூறி இக்கடிதம் அனுப்பப்பட்டதென்பது அரச நிர்வாக அதிகாரி தன்னுடைய அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கின்றார் என்று சுட்டிக் காட்ட ஆசைப்படுகின்றேன்.

ஆகவே கௌரவ தவிசாளர் அவர்களே இவ்விடயத்தை கருத்திற்கொண்டு 100 வருடங்களுக்கு மேலாக மண்முனை பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்ற முஸ்லிம் மக்களுடைய காணிப் பிரச்சினையை தீர்த்து தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல் அங்கு குடியிருக்கும் மக்களுடைய வாழ்வாதாரங்களைப் பறிக்கும் நோக்கில் மலசல கூடங்களை கட்டவிடாமல் தடுப்பதும் அங்குள்ள 2013 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் புதிதாக 2014 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்புகளில் சேர்க்க முடியாது என்றும்

➡ 18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோடியின் வெற்றி தெற்காசியாவை இருளுக்குள் தள்ளிவிடும்

## அமைச்சர் வாசுதேவ நாணயக்கார



இந்தியப் பிரதமராக நரேந்திர மோடி பதவியேற்பது தெற்காசியாவை இருண்ட யுகத்திற்குள் தள்ளிவிடும் அதேவேளை, பயங்கரவாத நிலைமைகளையும் தோற்றுவிக்கும் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.


அத்தோடு எதிர்காலத்தில் இலங்கையுடனான இந்தியாவின் உறவுகளிலும் விரிசல்களை ஏற்படுத்த வாய்ப்புக்கள் இருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மோடியின் வெற்றி இந்தியாவிற்குள் சிவில் வன்முறைகள் தலைதூக்க வழிவகுக்கும். இன, மத ரீதியான மோதல்களால் அந்நாட்டில் மக்கள் நெருக்கடிகளை எதிர்நோக்குவார்கள். மறுபுறம் அயல் நாடுகளுடன் மோதல்கள் ஏற்படும் அபாயமும் காத்திருக்கின்றது. இதற்கு சீனா தொடர்பாக மோடிக்குள்ள அச்சமே காரணமாகும். ராஜ்தீரிய சுயசேவா சங்கமே மோடியின் பின்னணியில் உள்ளது. இது கடும் இந்துத்துவ மதக் கொள்கையுடைய, இனவாத அமைப்பாகும். மகாத்மா காந்தியின் அஹிம்சாவழிப் போராட்டத்தை எதிர்த்த இவ்வமைப்புதான் காந்தியின் கொலைக்கு காரணமாயிருந்தது.

அத்தோடு பாரதிய ஜனதா கட்சியின் வெற்றியானது எதிர்காலத்தில் நாடுகளின் மகிழ்ச்சிக்கும் இந்தியாவின் செல்வந்தர்களின் தேவைகளை நிறைவேற்றுவதாகவும் அமையும். இலங்கையுடனான இந்தியாவின் உறவுகளில் விரிசல்கள் ஏற்படும் ஆபத்துமுள்ளது. இதற்கு மோடி அரசாங்கத்தின் சீன எதிர்ப்பு கொள்கையே காரணமாக அமையப் போகிறது என்றும் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

# நாய்களுடன் உறங்கி தேள்களுடன் விழித்தெழும் நிலையே நாட்டில் ஏற்பட்டுள்ளது

## சரத் பொன்சேகா



அடுப்பில் போடுகின்றார்கள். சொந்த விருப்புக்களுக்கு முன்னுரிமை கொடுக்கின்ற இந்த தலைவர்களை விரட்டுவதற்கான காலம் நெருங்கியுள்ளது. எங்களுக்கு நம் பிக்கைமிகு அரசியல்வாதிகளே தேவை எனவும் அவர் தெரிவித்தார்.

**- பொன்னிலங்கை அன்று இந்து சமுத்திரத்தின் முத்து**

**- இன்று அது வெறும் வித்து**

நாட்டை அழிவின்பால் இட்டுச் செல்கின்ற, சாரத்தை உறிஞ்சி சக்கையை தருகின்றவர்களுடன் நாங்கள் சென்றால் நாய்களுடன் உறங்கி, நாய்த் தேள்களுடன் விழித்து எழலாம். இன்று அந்த நிலைதான் நாட்டில் உருவாகியுள்ளது என ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா குறிப்பிட்டார்.

கொழும்பில் இடம்பெற்ற விசேட நிகழ்வொன்றின் போதே அவர் அவ்வாறு தெரிவித்துள்ளார்.

தூரநோக்கற்ற கலப்பு அரசாங்கத்தை விரட்டிவிடுவதற்கான காலம் நெருங்கியுள்ளது. அரசியல்வாதிகள் தேர்தலில் வெற்றி பெற்ற பின், பொதுமக்களுக்கு எதுவும் செய்யாமல், அவர்களைக் கொன்று

இந்து சமுத்திரத்தின் முத்து என அன்று வர்ணிக்கப்பட்ட எங்கள் பொன்னிலங்கை இன்று வெறும் வித்தாக மாறியுள்ளது.

எந்தவோர் இழி செயலையும் செய்பவர்களுக்கு இன்று அரசியலில் முதலிடம் வழங்கப்பட்டுள்ளது. சிறுவர் பாலியல் வல்லுறவுகளிலும் கொலை கொள்ளைகளிலும் ஈடுபடுபவர்களுக்குத்தான் இன்று அரசியல் ஆசனங்கள் ஒதுக்கப்படுகின்றன.

நீதிக்கு இடமில்லை. அநியாயமே அரசோச்சுகின்றது. இன்று நாட்டிலுள்ள கலப்பு அரசியலுக்கு முடிவு கட்டும் காலம் நெருங்கியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அல் முஹம்மதியா அரபுக்கல்லூரியில் முதலாவது பட்டமளிப்பு விழா

அல் ஹாபிழ் நதீர்

ஏத்தாளை, திகழி அல் முஹம்மதியா அரபுக்கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழா ஜூன் முதலாம் திகதி மாலை 2:30 மணிக்கு கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது.

கல்லூரியின் உப தலைவர் அல்ஹாஜ் ஏ.சி. சலாஹுத்தின் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில், தீரும்பொல ஜாமிஆ மனாருல் ஹுதா அரபுக்கல்லூரி அதிபர் அல்ஹாஜ் கே.எம்.எம். ஹலாலுத்தின் (மிஸ்பாஹி) பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

2009 ஆம் ஆண்டு முதல் புனித அல்குர்ஆனை மனனம் செய்து வெளியேறிய 32 ஹாபிழ்கள் இவ் விழாவில் ஹாபிழ் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

ஹட்டன், தாருல் உலூம் உஸ்மானியா அரபுக்கல்லூரி அதிபர் அஷ்ஷெய்க் ஐ.எம். முபாரக் (உஸ்மானி) சிறப்பு சொற்பொழிவாற்றிய இந்நிகழ்வில், புத்தளம் மற்றும் சூழவுள்ள பிரதான அரபுக்கல்லூரிகளின் அதிபர்கள் அரசியல் பிரமுகர்கள் மற்றும் சிவில் சமூக தலைவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

திகழி மொஹிதீன் ஜும்ஆ பள்ளிவாசல் நிருவாகத்தின் கீழியங்கும் அல் முஹம்மதியா அரபுக் கல்லூரி பிரதேசத்தில் குர்ஆன் மனன ஹிப்ழ் பிரிவில் பல பட்டதாரிகளை உருவாக்கி சாதனை படைத்து வருவது குறிப்பிடத்தக்கது.

# பதுளை மாவட்ட முஸ்லிம் பிரதிநிதித்துவம் சுழற்சி முறையில் இயங்கலாம்

## நல்லாட்சிக்கான தேசிய முன்னணி

ஊவா மாகாணசபையில் பதுளை மாவட்டத்திற்கான முஸ்லிம் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் பிரதேச பிரமுகர்களினால் முன்வைக்கப்பட்டவேளை, பிரதேச பிரமுகர்கள் மற்றும் முஸ்லிம் வாக்காளர்கள் ஒத்துழைக்கும் பட்சத்தில் பதுளை மாவட்டத்திற்கான முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்த முடியும் என நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தலைமைத்துவ சபை பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

விரைவில் நடைபெறவுள்ள ஊவா மாகாண சபைத் தேர்தலில் பங்கேற்பது தொடர்பாக நல்லாட்சிக்கான தேசிய முன்னணி அதன் 2 ஆவது கட்ட களப் பயணத்தை மேற்கொண்டது.

இக்களப் பயணத்தின்போது முஸ்லிம் பிரமுகர்களுடனான பல்வேறு சந்திப்புக்களை மேற்கொண்டது.

தெரிவு செய்யப்படும் பிரதிநிதித்துவம் பதவிகளைப் பெற்றுக் கொண்ட பின்னர் மக்களால் வழங்கப்பட்ட அரசியல் அதிகாரத்தை எந்த வகையிலும் துஷ்பிரயோகம் செய்யாத, அரசியல் அதிகாரம் எனும் அமானிதத்தைப் பேணுகின்ற பிரதிநிதித்துவமாகவே இருக்க வேண்டும் எனவும் இப் பிரமுகர்களிடம் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தலைமைத்துவ சபையினர் வலியுறுத்தினர்.

பதுளை மாவட்டத்தில் கிடைக்கப் பெறும் முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை சுழற்சி முறையில் இம் மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களுக்கிடையில் பகிர்ந்து கொள்வது பற்றியும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

# முசலி தேசிய பாடசாலையில் இலவச பரீட்சை கருத்தரங்கு

ஏ.கே.எம். சியாத்

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் க.பொ.த. உயர்தர பரீட்சைக்கு தோற்றவிருக்கின்ற மாணவர்களுக்கான கருத்தரங்கொன்று முசலி இளைஞர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது. 70 இற்கும் அதிகமான முஸ்லிம், தமிழ் மாணவர்கள் இதில் கலந்துகொண்டனர். அரசறிவியல் பாடநெறியை ஆசிரியர் ரைசுதீன் நடத்தி வைத்தார்.

தமிழ், புவியியல், இஸ்லாமிய நாகரீகம் போன்ற ஏனைய பாடங்களுக்கான இலவச கருத்தரங்குகளை எதிர்வரும் வாரங்களில் ஒழுங்கு செய்துள்ளதாக முசலி இளைஞர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

# சமாதான நீதவான்




மூதூர் அறபா நகரைச் சேர்ந்த மௌலவி சாகுல் ஹமீது தஸ்ரீக் திருகோணமலை மாவட்ட நீதி நிருவாக வலயத்துக்கான சமாதான நீதவானாக மூதூர் மாவட்ட நீதிமன்ற நீதிபதி பயோஸ் றஸ்ஸாக் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர், மூதூர் அறபா நகர் ஜும்ஆ பள்ளிவாசலின் தலைவராகவும் மூதூர் அனைத்துப் பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் இணைத் தலைவராகவும் சம்பூர் பொலிஸ் நிலையத்தின் சிவில் பாதுகாப்புக் குழுக்களின் ஆலோசகராகவும் மூதூர் மத்தியஸ்த சபையின் உறுப்பினராகவும் அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா மூதூர் கிளை சமூக சேவைக்குழுவின் செயலாளராகவும் சேவையாற்றி வருகிறார்.

அறபா நகர் வித்தியாலயம், அல்ஹிதாய மகா வித்தியாலயம், மூதூர் நத்வதுல் உலமா அரபுக் கலாசாலை, கிண்ணியா சஹ்றியா அரபுக் கலாசாலை ஆகியவற்றின் பழைய மாணவரான இவர், அறபா நகரைச் சேர்ந்த மர்ஹூம்களான சாகுல் ஹமீது - றகுமத்தும்மா தம்பதியாரின் கனிஷ்ட புதல்வராவார்.





அம்பாறை மாவட்ட கலைஞர்கள் கௌரவிப்பு விழா அட்டாளைச்சேனை தேசிய கல்வியற் கல்லூரி அரங்கில் நடைபெற்றது. இதன் போது அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் செயலாளர் ஐ.எல்.எம். றிசான், கலைஞர் ஒருவருக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்ட கலைஞர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கட்சி சார்பற்ற தெரிவு என்பது வேதாளம் முருங்கை ஏறும் கதைதான்

எம்.எச்.எம். ஹஸன்

நிறைவேற்று நிர்வாக ஜனாதிபதி முறையை ஒழிக்க வேண்டுமென்ற கோஷம் பல தரப்புகளாலும் வலுப் பெற்று வருகிறது. மொத்த எதிர்க்கட்சிகள் மட்டுமன்றி, அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளும் இந்தக் கருத்தை தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. அண்மைக் காலமாக அரசாங்கத்தின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளும் இவ்விடயம் பேசு பொருளாக வந்துள்ளது. அக்கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், சிரேஷ்ட அமைச்சர்கள் ஜனரஞ்சகமான தலைவர்கள் கூட இன்று பகிரங்கமாகவே ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைக்குப் பலம் சேர்த்து வருகின்றனர். சம்பிரதாய இடதுசாரிக் கட்சிகளான இலங்கை கம்யூனிசக் கட்சி லங்கா சமசமாஜக் கட்சி, நவ சமசமாஜக் கட்சியினர் சார்பில் அமைச்சர் பதவிகள் வகிக்கும் டியூ குணசேகர, பேராசிரியர் திஸ்ஸ விதாரண, வாசுதேவ நாணயக்கார ஆசிரியோர் இனியொரு ஜனாதிபதித் தேர்தல் இந்த நாட்டில் நடைபெறக் கூடாது, அதற்கு முன்னர் அரசியல் யாப்பு மாற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடமே முன்வைத்துள்ளனர். இன்று ஜனாதிபதி ஆட்சி முறையை விமர்சிக்காதவர்கள் ராஜபக்ஷ அணி மாத்திரமே என்று கூறப்படுகின்றது.

நடந்து முடிந்த மே தினக் கூட்டங்களின் போது இடதுசாரிக் கட்சிகள் உட்பட பல கட்சிகளும் இவ்விவகாரத்தை முக்கியத்துவப்படுத்திப் பேசின. அரசுக்குள் இருக்கும் இடதுசாரிக் கட்சிகள் மட்டுமன்றி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரபலங்களான அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா, ஜோன் செனவிரத்ன, ராஹித சேனரத்ன போன்றோரின் முயற்சியில் கட்சியின் அடுத்த நிறைவேற்றுக்குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி முறை ஒழிப்புக்கான ஒரு பிரேரணை கொண்டுவரப்பட உள்ளதாகவும் செய்திகள் வந்துள்ளன.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதாகக்கூறி பதவிக்கு வந்தவர்களும் அதனை ஒழிப்பதற்குப் பதிலாகப் பலப்படுத்துவதிலேயே குறியாக இருந்தனர். சந்திரிகா பண்டார நாயக்க இரு தடவைகளும் ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக தேர்தலின்போது குறிப்பிட்டார். இன்றைய ஜனாதிபதி அவர்களின் மகிந்த சிந்தனையிலும் நிறைவேற்று நிர்வாக ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டும் என்ற விடயமுமுள்ளது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைக் கொண்டே, இன்றைய மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருக்கும் போதே நிறைவேற்றிக் கொள்ள இடதுசாரிக் கட்சிகள் முயற்சியெடுப்பது தெரிகிறது.




நாட்டின் புத்திஜீவிகள் மத்தியிலும் பொதுமக்கள் மத்தியிலும் ஏற்பட்டு வரும் இந்தச் சிந்தனை மாற்றத்தினை அடுத்து ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக நிறுத்தப் பொருத்தமானவர்கள் என்று பலரும் அடையாளம் காணப்பட்டும் உள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சிதான் இந்த நிறைவேற்று அதிகாரமுறையை நாட்டுக்கு அறிமுகம் செய்தது. இந்தப் பதவியில் இருக்கும் எவரும் அதனை ஒழிக்க முன்வரமாட்டார்கள் என்று இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன கூறிய விடயம் இங்கு நினைவு கூரத்தக்கதே.

1994 முதல் ரணில் விக்கிரமசிங்ஹ நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாகும் கனவில் இருக்கிறார். இரண்டு, மூன்று முறை அவர் போட்டி போட்டாயிற்று. இப்போது ஜனாதிபதி முறை ஒழிப்புக் கோஷம் உச்சக்கட்டத்தை அடைத்துள்ள நிலையில் அதனைப் பயன்படுத்தி தானே பொது வேட்பாளராகக் களமிறங்கும் யோசனை அவரிடமும் ஐக்கிய தேசியக் கட்சியில் பலரிடமும் இருப்பது தெரிகிறது. அத்தகைய ஒருவர் எத்தகைய வாக்குறுதிகளை அளித்தபோதிலும் அதிகாரத்துக்கு வந்த பின் அதனை அனுபவிக்காமல் ஒழித்து விடுவார் என்ற நம்பிக்கை பொதுமக்களுக்கு இல்லை. பொது வேட்பாளராகும் அவரை, உத்தி எடுபடாதிருப்பதற்கு அதுவே பிரதான காரணம். சந்திரிகா பண்டார நாயக்கவின் பெயரும் இதில் அடிபட்டாலும் இரண்டு முறை வாக்குத் தவறிய நிலையில் மக்கள் மீண்டும் அவரை நம்புவார்களா என்பது சந்தேகம். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அபிமானிகளிடையே இன்றும் அவருக்கும் பண்டார நாயக்க குடும்பத்தினருக்கும் செல்வாக்கு இருப்பது உண்மை. அக்கட்சியின் பிரதான அமைச்சர்கள், எம்பீக்கள் பலரதும் ஆதரவை வென்றெடுக்கும் சாத்தியக்கூறும் உண்டு. ஆனாலும் அவரை ஏனைய பிரிவினர் பொது வேட்பாளராக ஏற்றுக்கொள்ளும் சாத்தியப்பாடு குறைவு.

பொதுமக்களுக்கும் எவ்வித சந்தேகமும் ஏற்படாத வகையிலான ஒரு திட்டத்துடனும் நிகழ்ச்சி நிரலுடனும் இம்முயற்சி முன்னெடுக்கப்பட வேண்டும் என இந்நாட்டின் புத்திஜீவிகள் கருதுகின்றார்கள். வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனின் பெயரும் இதில் அடிபட்டாலும் சிறுபான்மையொருவர் ஒரு நாளைக்கேனும் இலங்கையின் ஜனாதிபதியாகும் நிலைமையை இந்நாட்டின் பெரும்பான்மை சக்தி[illegible] போவதில்லை. பெரும்பான்மை மக்கள் ஏற்றுக்கொள்ளும் ஒருவரே பொது வேட்பாளராக வர முடியும் என்பதே யதார்த்தம்.

கட்சி சார்பற்ற ஒருவருக்கே தமது ஆதரவு கிடைக்கும் என்று ஜே.வி.பி. கூறியுள்ளது. இலங்கையின் பொருளாதார முறையில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் அரசியலமைப்பு மற்றும் ஜனாதிபதி முறை மாற்றம் பெற வேண்டும் என்றும் ஜே.வி.பி. கூறியுள்ளது. சந்தையில் சாமான் வாங்குவது போல பொது வேட்பாளர் தெரிவு செய்ய முடியாது என்றும் பரந்த கலந்துரையாடலின் பின் பல தரப்பினரதும் விருப்பின் பேரில் கட்சி சார்பற்ற ஒருவர் பொது மக்களின் நம்பிக்கையை வெல்லக்கூடிய ஒருவரே வரவேண்டும் என்றும் அக்கட்சி மேலும் குறிப்பட்டுள்ளது.

அந்தவகையில் மாதுலுவாவே சோபித்த தேரரின் பெயர் பலரால் முன்வைக்கப்படுகிறது. அவர் ஆரம்பித்துள்ள அரசியல் இயக்கத்தின் கருப்பொருளாக இருப்பதும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை ஒழிப்பதுதான். பாராளுமன்றத்தில் கொண்டு வந்த கஸினோ தொடர்பான சட்டமூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அரசுடன் கருத்து வேற்றுமைப் பட்டுள்ள விமல் வீரவன்ச, சம்பிக்க ரணவக்க ஆகியோரின் தலைமையிலான தேசிய விடுதலை முன்னணி, ஜாதிக ஹெல உறுமய போன்றவற்றின் ஆதரவும் சோபித தேரருக்குக் கிடைப்பதற்கான வாய்ப்புண்டு. இடதுசாரியினரின் ஆதரவும் ஜே.வி.பி.யின் ஆதரவும் கிடைப்பதற்கான வாய்ப்புமுண்டு. ஆயினும் வடக்கு-கிழக்குத் தரப்பு மக்கள் எந்த நிலைப்பாட்டை எடுப்பார்கள் என்பது முக்கியமாகும். தற்போதைய ஜனாதிபதிக்கு எதிராக வாக்களிக்கும் மனப்பாங்கில் உள்ள வடக்கு - கிழக்கு மக்களின் வாக்குகளை ஜனாதிபதித் தேர்தலின் போது பெற்றுக் கொள்ளும் நிலையில் பொது வேட்பாளர் இருக்க வேண்டும் என்பதும் தவிர்க்க முடியாத ஒரு நிபந்தனையாகும். இந்திய வம்சாவழியினரில் பெருந் தொகையானோரின் ஆதரவைப் பெற்ற கட்சிகள் தற்போது அரசின் பங்காளிகளாக இருந்தாலும் ஜனாதிபதி முறை ஒழிப்பு தொடர்பில் என்ன கருத்தைக் கொண்டுள்ளனர் என்பது குறித்து இதுவரை அறிய முடியவில்லை.

> **ஒருவர் எத்தகைய வாக்குறுதிகளை அளித்தபோதிலும் அதிகாரத்துக்கு வந்த பின் அதனை அனுபவிக்காமல் ஒழித்து விடுவார் என்ற நம்பிக்கை பொதுமக்களுக்கு இல்லை**


> **நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை எப்படிப்போனாலும் இன்றைய ஜனாதிபதியைத் தோற்கடிக்கும் நோக்கில் வாக்களிக்கும் சாத்தியக் கூறுகளுமுண்டு**

விடுதலைப்புலிகளையுத்தத்தில்தோற்கடித்த காலம் முதல் கடந்த இரண்டாண்டு காலமாக முஸ்லிம்களுக்கு எதிராகத் தலை தூக்கியுள்ள சிங்கள பௌத்த இனவாதிகள் விடயத்தில் அரசாங்கம் நடந்து கொள்ளும் மெத்தனப்போக்கால் முஸ்லிம்கள் ஆத்திரமடைந்துள்ளனர் முஸ்லிம்கள் இதே நிலை தொடருமானால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை எப்படிப்போனாலும் இன்றைய ஜனாதிபதியைத் தோற்கடிக்கும் நோக்கில் வாக்களிக்கும் சாத்தியக் கூறுகளுமுண்டு. முஸ்லிம் காங்கிரஸ் உட்பட்ட முஸ்லிம் கட்சிகள் அடுத்துவரும் தேர்தலில் அரசாங்கத்தின் நிபந்தனைக்கு ஆதரவு வழங்குவதற்கென்று முஸ்லிம்களிடம் வாக்குக் கேட்க முடியாத நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக, ஜனாதிபதித் தேர்தல் என்று வரும்போது தாம் வாக்களிக்க வேண்டியது ஆதரவாகவா, எதிராகவா? என்பது தெளிவாக தெரிய வேண்டும் என்பது முக்கியம்.

ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக்கொள்ளும் பெரும்பான்மை மக்கள் விரும்பும் இடதுசாரிகளும் ஜே.வி.பி. யும் ஆதரவளிக்கும் அரசை எதிர்க்கும் இனவாதிகளும் அங்கிகரிக்கும் வடக்கு - கிழக்கு மற்றும் மலைநாட்டுத் தமிழ் மக்களும் முஸ்லிம்களும் ஆதரவளிக்கும் கட்சிசார்பற்ற ஒரு வேட்பாளர் என்பது மரணம் நடைபெறாத ஊரில் இருந்து கடுகு பெற்ற கதையாகப் போய் மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறும் கதையில்தான் முடியும் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபிகளாரின் சுன்னாவும் சட்டவாக்கமும்



மூலம்: கலாநிதி யூசுப் அல்கர்ளாவி
மொழியாக்கம்: அஷ்ஷெய்க் எம்.எப். ஸைனுல் ஹுஸைன் (நளீமி)

(தொடர் 40)

கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி அவர்கள் எழுதிய "அஸ்ஸுன்னா மஸ்தரன் லில் மஃரிபா வல் ஹழாரா" (அறிவுக்கும் நாகரிகத்திற்குமான அடிப்படை என்ற வகையில் சுன்னா) என்ற நூலின் மொழிபெயர்ப்புத் தொடர்.

இமாம் நவவி, ஸஹீஹ் முஸ்லிமிற்கான அவரது விளக்கவுரையில், முஆவியாவுக்கு எதிரான நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது பிரார்த்தனை குறித்து பின்வருமாறு கூறுகின்றார்!

முஆவியாவுக்கு எதிராக நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கேட்ட பிரார்த்தனையைப் பொறுத்த வரை, அதற்கு இரண்டு வகையான பதில்களை அளிக்க முடியும்:

முதலாவது, எவ்வித நோக்கமும் இன்றி பழக்கத்தினடியாக நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களது நாவிலிருந்து உதிர்ந்த வார்த்தையாகும்.

இரண்டாவது, முஆவியாவின் தாமதத்திற்கான தண்டனையாகும்.

முஆவியா இந்த பிரார்த்தனைக்கு உரித்துடையவராக இருக்கவில்லை என இமாம் முஸ்லிம் (ரஹிமஹுல்லாஹ்) விளக்கியிருந்தார். அதனால்தான் இந்த ஹதீஸை இப்பகுதியில் (நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் எவரையாவது சபித்து அல்லது ஏசி அல்லது எதிராகப் பிரார்த்தித்து, அவர் அதற்கு உரித்துடையவராக இல்லாவிட்டால் அது அவரை பாவத்திலிருந்து பரிசுத்தப்படுத்துவதாகவும் நற்கூலியாகவும் அருளாகவும் அமையும்.) பதிவு செய்துள்ளார். வேறு சிலர் இதனை முஆவியாவின் சிறப்பாகக் கருதுகின்றனர். ஏனெனில் ஈற்றில் இது அவருக்கான பிரார்த்தனையாக அமைகின்றது.

இந்த இரண்டாவது கருத்தை இமாம் தஹபி 'சியரு அஃலா மிந்நுபவா' வில் சுட்டிக்காட்டியுள்ளார். "அல்லாஹ்வே நான் எவருக்காவது ஏசினால் அல்லது சபித்தால் அதனை பாவத்திலிருந்து பரிசுத்தப் படுத்தக் கூடியதாகவும் அருளாகவும் அவருக்கு ஆக்கிவிடு" என கூறியிருப்பதனால் இது முஆவியாவிற்கான சிறப்பாகவும் அமையக்கூடும்.

"நபியே நீர் கூறுவீராக! நிச்சயமாக நான் உங்களைப் போன்ற ஒரு மனிதன்தான். நிச்சயமாக உங்களுடைய நாயன் ஒரே நாயன் தான் என்று எனக்கு வஹி மூலம் அறிவிக்கப்படுகின்றது" (அல் கஹ்ஃப் - 110) என்ற வசனத்திற்கு விளக்கமாகவே, "நிச்சயமாக நான் ஒரு மனிதன். மனிதர்கள் பொருந்திக் கொள்வதுபோல நான் பொருந்திக் கொள்கின்றேன்." போன்ற ஹதீஸ்கள் அமைந்துள்ளன என்பதை நீங்கள் அறிந்து கொள்வது அவசியமாகும்.


மனோ இச்சையைப் பின்பற்றுவோரும் கோணல் புத்தி கொண்டோரும் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை தூய்மைப்படுத்துகிறோம் என்ற பெயரில் நபிகளார் அவ்வாறு பேசுவதை விட்டும் பரிசுத்தமானவர்கள் எனக் கூறிக் கொண்டு இவ்வாறான ஹதீஸ்களை மறுப்பதில் முனைப்புக் காட்டுகின்றனர்.

**"அல்லாஹ்வே நான் எவருக்காவது ஏசினால் அல்லது சபித்தால் அதனை பாவத்திலிருந்து பரிசுத்தப்படுத்தக் கூடியதாகவும் அருளாகவும் அவருக்கு ஆக்கிவிடு" என கூறியிருப்பதனால் இது முஆவியாவிற்கான சிறப்பாகவும் அமையக்கூடும்.**

எவ்வகையிலும் இதுபோன்ற ஹதீஸ்களை மறுதலிக்க முடியாது என்பதை நீங்கள் கவனத்திற்கொள்வது அவசியமாகும். ஏனெனில் இந்த ஹதீஸ் ஸஹீஹானது. மாத்திரமல்ல, முதவாத்திரமானதும் கூட. இந்த ஹதீஸை இமாம் முஸ்லிம், ஆயிஷா (ரழியல்லாஹு அன்ஹா) மற்றும் உம்மு சல்மா (ரழியல்லாஹு அன்ஹா) கூறியதாக பதிவு செய்துள்ளார். மேலும் இந்த ஹதீஸ் அபூஹுரைரா (ரழியல்லாஹு அன்ஹு), ஜாபிர் (ரழியல்லாஹு அன்ஹு) ஆகியோராலும் அறிவிப்புச் செய்யப்பட்டுள்ளது. இன்னும் நபித் தோழர்களான சல்மான், அனஸ், சமுரா, அபூ துபைல், அபூ சயீத் (ரழியல்லாஹு அன்ஹு) போன்றோரும் இதனை அறிவிப்புச் செய்துள்ளனர் என்பது இங்கு ஈண்டு குறிப்பிடத்தக்கது. (கன்சுல் உம்மால்: 2/124)

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியவை என நம்பகமான வழிமுறை மூலம் எம்மை வந்தடைந்த அனைத்தையும் ஈமான் கொள்வதே அவர்களை சட்டரீதியாக சங்கைப்படுத்துவதற்கான வழிமுறையாகும். அவ்வாறு செய்வதால் மாத்திரமே தூதர், அடிமை ஆகிய ஒரு பண்புகளையும் ஒருங்கே பெற்றிருந்தவர்களாக அவர்களை அடையாளப் படுத்த முடியும். அல்குர்ஆனும் சுன்னாவும் அவர் மனிதர் என்றே சான்று பகர்கின்றன. ஆனால், நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள், ஹதீஸ்களின் ஒளியில் மனிதர்களில் தலை சிறந்தவரும் அவர்களின் தலைவருமாவார்கள். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் வேறெந்த மனிதரும் பெற்றில்லாத வகையில் நற்பண்புகளையும் ஒழுக்க விழுமியங்களையும் நிறைவாகப் பெற்று விளங்கினார்கள். அவரது வரலாறு இதனை எடுத்தியம்பிக் கொண்டிருக்கின்றது. எல்லாம் வல்ல அல்லாஹ்வும் இதனை அல்குர்ஆனில் பிரஸ்தாபிக்கின்றான். "நபியே! நிச்சயமாக மகத்தான நற்பண்புகளின் மீது நீர் இருக்கின்றீர்" (அல் கலம்: 4)

ரசூல் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறியதாக அறிவிக்கப்படுகின்ற சில விடயங்கள் அல்லாஹ்வின் புறமிருந்து வஹியாக வந்தவையல்ல என்பதையே எமக்கு சுட்டிக்காட்டுகின்றன. அவை அல்லாஹ்வின் தூதை எத்திவைக்கும் வகையில் சொல்லப்பட்டவையுமல்ல. மாறாக அவை மனிதர் என்ற அடிப்படையில் நபிகளாரிடத்திலிருந்து வெளிப்பட்ட சொற்களும் செயல்களுமாகும். அவற்றுக்கும் வஹியிற்கும் தொடர்பேதுமில்லை.



# மனிதன் அல்லாஹ்வின் அற்புத படைப்பு

சுரையா ஜுனைத்

இந்த விரிந்த உலகம், அதிலே இருக்கக் கூடிய மனிதன், மிருகம், பறவை, தாவரங்கள், கடல்கள், மலைகள், ஆறுகள், கோள்கள், நட்சத்திரங்கள் இவை அனைத்துமே நுணுக்கமான சக்திவாய்ந்த படைப்பாளன் ஒருவன் இருக்கிறான் என்பதைக் காட்டுகின்றன.

அல்லாஹ் கூறுகிறான், "விசுவாசம் கொண்டோருக்கு நிச்சயமாக வானங்களிலும் பூமியிலும் அத்தாட்சிகளிருக்கின்றன. இன்னும் உங்களைப் படைத்திருப்பதிலும் ஜீவராசிகளை அவன் பரவச் செய்திருப்பதிலும் (விசுவாசத்தில்) உறுதி கொள்கின்ற சமூகத்தாருக்கு அத்தாட்சிகள் இருக்கின்றன" (அல்ஜாஸியா 3: 4)

அல்லாஹ்வின் படைப்பில் மிக உன்னதமான ஒரு படைப்புத்தான் மனிதன். மலக்குகளை விடவும் மிக உயர்ந்த நிலையில் மனிதனை படைத்ததனால்தான் ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கு சுஜூது செய்யுமாறு மலக்குகளுக்கு அல்லாஹ் கட்டளையிட்டான். அதனை மலக்குகள் ஏற்று ஆதம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களுக்கு சிரம் தாழ்த்தினர்.

மேலும் அல்லாஹ் கூறுகிறான், "அத்தியின் மீதும் ஸைதூனின் மீதும் சத்தியமாக, ஸினாய் மலையின் மீதும் சத்தியமாக, (மக்காவாகிய) அபயமளிக்கும் இந்த நகரத்தின் மீதும் சத்தியமாக, நிச்சயமாக நாம் மனிதனை மிக அழகான அமைப்பில் படைத்திருக்கின்றோம்." (அத்தீன் 1: 4) என மனிதனுக்கு பயனுள்ளவற்றின் மீதும் சத்தியம் செய்து கூறுகிறான்.

இந்த அழகிய படைப்பான மனிதனின் ஒவ்வோர் அங்கங்களையும் ஆராய்ந்து பார்த்தோமானால் அவற்றைப் படைத்த அல்லாஹ்வின் ஆற்றலை, அவனின் மகத்துவத்தை, அவனின் நுண்ணறிவை உணர்ந்து கொள்ளலாமல்லவா? அல்லாஹ்வின் படைப்பினங்களை ஆராய்ந்து சிந்திப்பது மிக உயர்ந்த திக்ராகவும் இபாதத்தாகவும் அமையும்.

எமது உடலின் வடிவத்தை நோக்கும் போது ஏனைய விலங்குகளை விட மிக நுணுக்கமானதாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் அல்லாஹ் படைத்துள்ளான். மிக அழகான முக அமைப்பு, சிறத்தலடைந்த புலனங்கள், வேலைகளை சிறப்பாகச் செய்வதற்கு ஏற்றவகையில் கையும் கை விரல்களின் அமைப்பும் நிற்க, நடக்க, ஓட, பாய உதவக்கூடிய காலும் அதன் விரல்களும் சிந்திப்பவர்களுக்கு சிறந்த அத்தாட்சிகளாகும்.

ஒரு கட்டிடத்தை செங்கற்களால் கட்டுவதுபோன்று எமது உடலும் கலங்கள் எனும் அலகினால் கட்டப்பட்டுள்ளது. வெற்றுக் கண்ணால் பார்க்க முடியாத அளவு சிறிய இக்கலங்களை நுணுக்குக்காட்டியின் உதவியுடன் பார்க்கலாம். மிகச் சிறிய கலத்தினுள்ளே பலவிதமான உயிர் செயற்பாடுகள் நடைபெறுகின்றன.

கலங்களினுள்ளே காணப்படும் நிறமூர்த்தம் எனும் [illegible] அலகுகள் உண்டு. பரம்பரை இயல்புகள் இதன் மூலமாகவே அடுத்த சந்ததிக்கு கடத்தப்படுகின்றன. ஒரு பிள்ளை உடல் அமைப்பிலும் குண இயல்புகளிலும் தாய் தந்தையரின் இயல்புகளை ஒத்து காணப்படுவதை நாம் காண்கின்றோம். நிறம், உயரம், பருமன், கண், காது, மூக்கு, முடி, முகம் என்பவற்றின் வடிவம் விரல்கள், விரல் நகங்களின் அமைப்புகள், குரல் ஓசை போன்ற பல இயல்புகளில் பெற்றோரை ஒத்திருப்பதைக் காணலாம்.

கலத்தில் நடைபெறும் எல்லா உயிர் செயன்முறைகளுக்கும் அவசியமான சக்தியை வழங்குவதற்காக கலத்தினுள் இழைமணிகள் என்ற அமைப்புண்டு. அதேபோல இன்னும் பல அமைப்புகள் கலத்தினுள் காணப்படுகின்றன. அவை ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்கின்றன. கலத்தினுள் நடைபெறும் செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் அமைப்பாக கரு என்ற பகுதி தொழிற்படும்.

வெற்றுக் கண்ணால் கூட பார்க்க முடியாத மிக நுண்ணிய அமைப்பாகிய இந்தக் கலத்தில் வேலைகள் எவ்வாறு வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை ஆராயும்போது அல்லாஹ்வின் ஆற்றலை விளங்கிக் கொள்ளும் மனிதன் அவனை புகழாமல் எவ்வாறு இருக்க முடியும்? எமது உடலின் அடிப்படையாகிய இந்தக் கலங்களில் நடைபெறும் செயற்பாடுகள் ஒரு வேலை நடைபெற கூட்டு முயற்சி, கட்டுப்பாடு தேவை என்பதை எடுத்துக் காட்டுகிறதல்லவா?

நாம் மேலே குறிப்பிட்டவாறு எல்லாக் கலங்களிலும் பொதுப்படையான வேலைகள் நடைபெறும் அதேநேரம் உடலில் ஒரு குறிப்பிட்ட தொழிலை ஆற்றுவதற்காக தோற்றம், வளர்ச்சி என்பவற்றில் ஒத்துள்ள சிறத்தலடைந்த கலக்கூட்டங்கள் காணப்படும். இவை இழையம் என அழைக்கப்படும்.

உமது உடலில் என்பிழையம், தசையிழையம், குருதி இழையம், கசியிழையம், நரம்பிழையம் எனப் பல இழையங்கள் காணப்படுகின்றன. இவ்விழையங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான தொழிலை ஆற்றுகின்றன.

ஒரு கட்டிடத்துக்கு அதன் தூண்கள் உறுதியைக் கொடுக்கும். அதுபோல எமது உடலை உறுதியாக வைக்கவும் உடம்புக்கு ஒரு வடிவத்தைக் கொடுக்கவும் கடத்தப்படுவதற்கும் கலங்களில் உண்டாகும் கழிவுகளை கழிவங்கங்களுக்கு எடுத்து செல்வதற்கும் குருதியிழையம் பங்களிப்புச் செய்கிறது. தசையிழையம் உடலில் அசைவுகளை ஏற்படுத்த உதவுகிறது. நாம் ஒரு வேலையை செய்யும்போது பல இழையங்கள் தொழிற்படுகின்றன. இவையனைத்தையும் முன்மாதிரி இன்றிப் படைத்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தேசிய அரசியல் நிலை:

# மலையக மக்களுக்கு தெளிவு படுத்தப்பட வேண்டாமா?

-மலைஞானி

அநேகமாக அடுத்த ஆண்டின் முற்பகுதியில் ஜனாதிபதி அல்லது பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்படலாம் என்ற செய்தி அரசாங்கத்தினால் வெற்றிகரமாக கசியவிடுப்பட்டுள்ளது. தெற்கு மற்றும் மேல் மாகாணங்களில் அரசாங்கம் தான் எதிர்பார்த்த மாதிரி வெற்றி பெறவில்லை என்ற செய்தி, அரசாங்கத்தின் உயர்மட்டத்தை அதிர்ச்சி அடையச் செய்திருக்கிறது.

இதன் விளைவாகத்தான் அரசின் செல்வாக்கு மேலும் சரிந்து பாதகமான விளைவைச் சந்திப்பதற்கு முன்பாகவே முதலில் ஊவா மாகாண சபைக்கான தேர்தலையும் பின்னர் ஜனவரி அல்லது பெப்ரவரியில் இரண்டில் ஒரு தேர்தலையும் நடத்தி வெற்றிக் கனியை பறித்து விடலாம் என அரசு உயர்மட்டம் கருதுகிறது. அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டும் வருகிறது.



துணிச்சலுடன் கீழ்த்தரமாகவும் அதே சமயம் கொச்சையாகவும் வெளிப்படுத்தி வருவதும் இவை தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுபடாமல் இருப்பதும் அதிர்ச்சி தருவதாக உள்ளன.

மொத்தத்தில் இன்றைய அரசியல் மற்றும் சமூக சூழலிலும் நடப்பவை குழப்பத்தை ஏற்படுத்துவதாகவும் எதிர்காலம் பற்றிய கேள்விகளை எழுப்புவதாகவும் உள்ளன. நடப்பவை நிச்சயமாக ஆரோக்கியமானவையாக இல்லை. பரந்த மட்டத்தில் ஒரு தேக்கநிலை காணப்படுகிறது. நிச்சயமற்றதன்மை தென்படுகிறது. அரசியல் சமூக சகிர்ப்புத்தன்மை குறைந்து வருவதாக பலரும் உணர்கின்றனர். சிறுபான்மை

பத்து வருடங்களாக ஓர் அரசு ஆட்சி செய்யும்போது மெத்தனம், ஊழல், தான் தோன்றித்தனம், மேதாவத்தனம், மக்களிடமிருந்து அந்நியப்படல் என்பன புற்றுகள் போல ஆட்சியில் வளர்ச்சி பெறுவது இயல்பு. இந்தியாவில் காங்கிரஸுக்கு அது தான் நடந்தது, உலகெங்கும் இப்படித் தான் நடைபெற்று வருகிறது. ஏனெனில் இது இயல்பு. இதனால்தான் என்னவோ ஜனாதிபதி பதவிக்காலம் நான்கு வருடங்கள் என்றும் ஒரு ஜனாதிபதி இரண்டு தடவை மட்டுமே பதவி வகிக்க முடியும் என்றும் இருக்கும் சட்டத்தை இதுவரை மாற்றாமல் அப்படியே வைத்திருக்கிறார்கள். அமெரிக்கா போன்ற ஒரு சக்திவாய்ந்த நாட்டு ஜனாதிபதி இரண்டு தடவைக்கு மேல் பதவி வகிப்பாரானால் அந் நாட்டு சீர் கேடடைந்து எதேச்சதிகார நாடாக மாறிவிடும் என்பதால் இரண்டு தடவைக்கு மேல் ஒருவர் பதவி வகிக்க முடியாது என்ற கட்டுப்பாட்டைத் தளர்த்தாமல் வைத்திருக்கிறார்கள்.

நமது ஜனாதிபதி தற்போது மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் நிற்க முடிவு செய்திருக்கிறார். ஐ.ம.சு. கூட்டணியில் ஜனாதிபதியை விட்டால் வேறு ஜெயிக்கும் வேட்பாளர் கிடையாது. ஆனால் இக்கூட்டணியில் இன்று பிளவுகள், மாறுபட்ட கருத்துக்கள் அதிகரிக்க ஆரம்பித்துள்ளன. விரக்தி மனப்பான்மை வெளிப்பட்டு நிற்கிறது. அடங்கி, ஒடுங்கி நின்றவர்களும் தைரியம் பெற்று குரல்கொடுக்க ஆரம்பித்துள்ளார்கள். இவையெல்லாம் கடந்த ஒன்பது ஆண்டுகளாகக் காண முடியாத காட்சிகள்.

இவ்வளவு காலமாக தமிழர் மீதிருந்த கவனம் இப்போது முஸ்லிம் சமூகத்தின் மீது திரும்பியுள்ளது. முஸ்லிம்கள் மீதான தமது வெறுப்பை இனவாதிகள், மிகுந்த


இனத்தவர் என்ன நடக்குமோ என்ற சந்தேகம் கொண்டுள்ளனர்.

இத்தனைக்கும் இக்குழப்பங்கள் அவசியமற்றவை, திணிக்கப்பட்டவை. குறுகிய காலத்திலேயே களையப்பட்டிருக்க வேண்டியவை. சிறுபான்மை இனத்தவர் தாம் அடக்கி ஆளப்படவில்லை என்பதை உணராத வகையில் இந்த அனாவசிய பிரச்சினைகள் கிள்ளி எறியப்பட்டிருக்க வேண்டும். ஆனால் ஏனோ, அதற்கான முயற்சிகள் எடுக்கப்படாமல் உள்ளன.

இனவாதம், இன்றைக்குள்ள பொதுவான அரசியல் நிலை.

➡ 16

# இழுத்து மூடப்பட்ட பல்கலைக்கழகம்




## நல்லதொரு ஐடியா...

வடபுலத்தான்

மே 18 ஐ முன்னிட்டு, ஒரு முன்னேற்பாடாக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தை அஞ்சு நாட்கள் மூடியிருந்ததல்லே...

இது ஏனெண்டு ஆருக்காவது விளங்கியிருக்குமோ தெரியாது. ஆனால், நம் தமிழ் உலகம் இதை வைச்சு ஆயிரமாயிரம் பிரியாணியைப் போட்டு விட்டது.

இதைப் பற்றி பக்கம் பக்கமாகப் பேப்பர்க்காரர் வேறு எழுதிக் கிழித்து விட்டினம். இதை வைச்சு இணையத்தளங்கள் ஒரு தகவல் புரட்சியையே நடத்தி முடித்துள்ளன.

நம் தமிழ் அரசியல்வாதிகள் மட்டும் சும்மா இருப்பினமோ? அல்லது அவைகளென்ன எதிலும் சளைத்தவைகளோ? அவையளும் தங்கட கடமைக்கு இதைப் பற்றிக் கண்டன அறிக்கைகளை வெளியிட்டு, குற்றஞ்சுமத்தி, தங்கள் பணியை முடிச்சிருக்கினம்.

பல்கலைக்கழக மாணவர் அமைப்பும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் பெரிய போர்க்கொடியைத் தூக்கி ஓர் ஆர்ப்பாட்டத்தை நடத்தி தங்களைப் பற்றி வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறித்தும் கொண்டார்கள்.

ஆனால், இது ஏன் மூடப்பட்டது எண்டு ஒருத்தரும் சிந்திக்கவும் இல்லை. அதைப் பற்றி சம்மந்தப்பட்டவர்களுடன் கதைக்கவும் இல்லை.

2012 ஆம் ஆண்டு மாவீரர் நாளுக்கு இந்தமாதிரித்தான் பேப்பர்காரரும் புலம் பெயர்ந்திருக்கிற எங்கட வெளிநாட்டுக் காரரும் கூட்டமைப்புக்காரரும் பப்பாவில் ஏத்திவிட நாலைஞ்சு பெடியள் விளக்கேத்தினாங்கள் அல்லோ..! இந்த பெடியளை விளக்கேத்திறதுக்கு உஷார்ப்படுத்திப் போட்டு, மற்றவையெல்லாம் மெல்லக் கழண்டிட்டினம்.

இந்த நாலைஞ்சு பெடியள் பாவம். வீணாகச் சிக்கி, நாலைஞ்சு மாசம் சிறையிருந்து அலைஞ்சுலைஞ்சுதான் வெளியில வந்ததுகள்.

அதோட பல்கலைக்கழகமும் அஞ்சு மாதம் மூடப்பட்டிருந்துது. இந்தப் பெடியளை விட்டால்தான் பல்கலைக்கழகத்தை நடத்த விடுவம் எண்டு மாணவர்கள் போராடினால் வேற என்ன செய்யிறது? ஐஞ்சு மாசம் பல்கலைக்கழகம் மூடப்பட்டதால ஒரு வருசம் பிந்திப்போய்த் தான் பட்டமளிப்பே நடந்திது.

பெடியளின்ரை வயசில அவங்கள் அப்பிடித்தான் சிந்திப்பாங்கள். அப்பிடித் தான் எதையும் பார்ப்பாங்கள். எதையும் உடன செய்யோணும், எந்தத் தடை வந்தாலும் அதையெல்லாம் உடைச்செறியோணும் எண்டு. அதுவும் பல்கலைக் கழகப் பெடியள் எண்டால் கொஞ்சம் கூடுதலாக உஷாராகத்தானிருப்பாங்கள்.

ஆனால், படிச்சவை, சமூகத்தில பொறுப்பான இடங்களில இருக்கிறவை, புத்திஜீவிகள் எண்டிருக்கிறவை கொஞ்சம் நிதானமாக யோசிக்கோணும். அவைதான் சரியாக வழிகாட்ட வேணும்.

இவையெல்லாம் சரியாகச் சிந்திச்சால் பல காரியங்கள் சிறப்பாக நடக்கும். பல சிரமங்கள் நடக்காமலே போகும்.

ஒரு உதாரணம்:

இந்த முறை மே 18 ஐ ஒட்டி ஒரு கிழமைக்கு பல்கலைக்கழகம் மூடப்பட்டதெல்லோ... இந்த முடிவைப் பற்றி ஆரும் விமர்சிக்கலாம். விமர்சிக்காமல் விடலாம்.

ஆனால், நாலு பேரின்ரை விசுக்கோத்து வேலைகளால நாலாயிரம் ஐயாயிரம் பெடியளின்ரை படிப்பும் எதிர்காலமும் வீணாகாமல் காப்பாற்றப்பட்டிருக்கு.

ஒரு ஆறு ஏழு நாளைக்கு பல்கலைக் கழகத்தை மூடினதால அஞ்சு ஆறு மாதத்தைப் பேணிப் பாதுகாத்திருக்குது பல்கலைக் கழக நிர்வாகம் எண்டுதான் சொல்லுவன். இதைத்தான் புத்திசாலித்தனமான முடிவு எண்டு சொல்லிறது.

ஒரு கிழமையை இழந்தாலும் அஞ்சு ஆறு மாதத்தைப் பாதுகாத்திருக்கிறதுக்காகப் பல்கலைக்கழக நிர்வாகத்தைப் பாராட்டோணும்.

ஆனால், எங்கட ஆட்கள் என்ன செய்யினம் தெரியுமா?

விடடா கெடப்போகிறன். வேணுமெண்டால் வா, வந்து பந்தயம் கட்டு எண்டெல்லோ இந்த மாதிரியான விசுக்கோத்து வேலைகளுக்கு முன்னுக்கு வந்து நிக்கினம்.

இப்ப பல்கலைக்கழகத்தை அப்பிடியே வைச்சிருந்தால், அங்க நாலுபேர் நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு தாங்கள் நினைச்ச மாதிரி நடக்க, அது பெரிய வில்லங்கமாகி, அடிதடி எண்டு வளர்ந்து கைது, சிறை வரை போயிருந்தால்...

பேப்பர்காரருக்குக் கொண்டாட்டம். அரசியல்வாதிகளுக்குத் திருவிழா. இணையப் புரட்சிப்படைக்குப் புரியாணி.

என்ன செய்யிறது, இதொண்டுக்கும் இடம் வைக்காமல், புத்திசாலித்தனமாக நடந்து எல்லாரையும் சப்பெண்டு ஆக்கி விட்டுது பல்கலைக்கழக நிர்வாகம்.

இப்பிடி ஒவ்வொரு முடிவையும் அதோட சம்மந்தப்பட்டவை கொஞ்சம் புத்தியாக நிதானமாக எடுத்தால் இந்த நாடு உருப்படும்.

நாடு உருப்பட வேணும் எண்டால் நாங்கள் உருப்படியாக நாலு காரியம் செய்யவேணும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரவன்ச



## ராஜபக்ஷ அரசாங்கத்திலுள்ள

## ஜனாதிபதியின் அதிகாரப் பலத்

## அரசாங்கத்தின் வீழ்ச்சியின் து

ஹெட்டி ரம்ஸி

மே மாதம் 21 ஆம் திகதி மாலைப் பொழுதில் அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியினால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மான வாக்கெடுப்பிலிருந்து விலகிக்கொண்டதன் மூலம் அமைச்சர்களான விமல் வீரவன்ச மற்றும் சம்பிக ரணவக்க ஆகியோர் மீண்டும் தங்களது அரசாங்க எதிர்ப்பை வெளிக்காட்டியுள்ளனர். அமைச்சர்கள் இருவரினதும் கட்சி உறுப்பினர்களான எல்லாவல மேதானந்த தேரர் மற்றும் அசல ஜாகொட போன்றோர் அரசாங்கத்திற்குச் சார்பாக வாக்களித்த போதிலும் அமைச்சர்கள் இருவரும் வாக்களிப்பிலிருந்து தவிர்ந்து கொண்டனர். கசினோவுக்கு மாத்திரம் எதிர்ப்பு ஆனால் அரசாங்கம் உடைவதனாலும் ஐக்கிய தேசியக் கட்சி கொண்டு வருவதனாலும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு எதிர்ப்பு எனக் கூறுகின்ற அமைச்சர் வாசுதேவ நாணயக்கார போன்றவர்களது வாதங்களின் பிரகாரம் மேற்படி தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்க முடியுமாக இருந்தபோதிலும் வீரவன்ச, ரணவக்க அமைச்சர்கள் இருவரும் அவ்வாறு செய்யவில்லை. தாங்கள் இன்னும் அராசங்கத்திற்கு எதிராக சவால்மிக்கவர்களாக இருக்கப்போகிறோம் என்பதை இதன் மூலம் உறுதிப்படுத்தியுள்ளார்கள். ஒரு விதத்தில் அமைச்சர் சம்பிக்க ரணவக்க இன்னும் காலம் பார்த்துக் கொண்டிருக்கின்ற வேளையில், அமைச்சர் விமல் வீரவன்ச இந்நாட்களில் வேகமானதொரு பயணத்தை ஆரம்பித்துள்ளார். அவர் கிடைக்கின்ற எல்லா வாய்ப்புக்களையும் அரசாங்க எதிர்ப்பை வெளிக்காட்டுவதில் பயன்படுத்த வருகிறார். இதன் முடிவு எவ்வாறு அமையும் என்பது இன்றைய அரசியல் தளத்தில் ஒரு முக்கிய விவாதத்தை தோற்றுவித்துள்ளது. அமைச்சர் வீரவன்சவினது நாடகம் ஜனாதிபதியின் கதை வசனங்களின் பிரகாரம் அரங்கேறுகிறது என்கின்ற வாதங்களும் ஒரு பக்கம் வலுக்கின்ற நிலையில், இது விடயம் தொடர்பில் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றின் போது அமைச்சர் விமலிடம் கேட்கப்பட்டபோது, தனது நடவடிக்கைகளைப் பார்த்து அது தொடர்பில் முடிவெடுத்துக் கொள்ளுங்கள் என்பதாக பதிலளித்திருந்தார். இன்னும் அமைச்சர் வீரவன்ச அரசாங்கத்திலிருந்து விலகுவதற்குத் தயாராகிக் கொண்டிருப்பதான தகவல்களும் வெளியான வண்ணமுள்ளன. எது எவ்வாறிருப்பனும் அரசியல் தீர்மானங்கள் தொடர்பில் நிச்சயமற்ற எதிர்வுகூறல்களைக் கூறமுடியாதுள்ளது.

அமைச்சர் வீரவன்சவின் அரசாங்க எதிர்ப்பானது அவரோடு இணைந்திருக்கின்ற தேசியவாத சக்திகளின் தாங்கொண உள வெளிப்பாடாகும். அவரது கருத்துச் சிந்தனைகளில் பெரிதும் மாற்றத்தை உண்டுபண்ணிய அவரது ஆசிரியரான டாக்டர் குணதாஸ அமரசேகர கடந்த காலங்களில் அரசாங்கம் தொடர்பில் முன்வைத்த விமர்சனங்கள் மிகவும் கர்ண கொடூரமானவையாகும். மஹிந்த ராஜபக்ஷவை ஆட்சி பீடத்திற்கு கொண்டுவர மிகவும் கஷ்டப்பட்ட தேசியவாத சக்திகள் மஹிந்தவின் தற்போதைய ஆட்சிமுறையில் கோபமும் அதிருப்தியுமுற்றுள்ளன. மேற்படி அரசாங்கத்திற்கு எதிரான விமர்சனங்களை அரசியல் ரீதியில் முன்னகர்த்திச் சென்றவர் அமைச்சர் வீரவன்ச ஆவார். தான் உட்பட தன்னோடு இணைந்துள்ள இதர தேசியவாத சக்திகள் அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்ப்பது என்ன என்பது தொடர்பில் தமது கட்சியின் 2 ஆவது தேசிய சம்மேளனத்தின் போது நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட 12 முன் மொழிவுகளை அவர் முன்வைத்துள்ளார். சுருக்கமாக அம் முன்மொழிவுகள் இவ்வாறுள்ளன:

01. புதியதோர் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தை முன்வைக்க வேண்டும். அவ்வரசியல் சீர்திருத்தமானது இலங்கை நாட்டின் ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் பிரிவினைவாதத்தை தோற்கடிக்க முடியுமானதாகவும் தேசிய ஒற்றுமையையும் நல்லிணக்கத்தையும் உறுதிப்படுத்தக் கூடியதாகவும் ஜனநாயக உரிமைகளை விரிவுபடுத்தி நல்லாட்சியை உறுதிப்படுத்துகின்ற மக்கள் நலன்மிக்கதொரு யாப்பாகவும் இருத்தல் வேண்டும்.

02. 2014 ஜெனீவா தீர்மானத்தின் பிரகாரம் சர்வதேச யுத்தக் குற்ற விசாரணைகளை மேற்கொள்வதற்கு நியமிக்கப்படுகின்ற எந்தவொரு சர்வதேச முகவர்களையும் நாட்டிற்குள் நுழைய இடமளிக்கக்கூடாது.

03. சர்வதேச அழுத்தங்களின் காரணமாக எந்தவொரு புதிய பரிசோதனைகளையோ, விசாரணைகளையோ ஆரம்பிக்கக்கூடாது.

04. 13 ஆவது சீர்திருத்தம் தொடர்பில் எந்தவொரு கலந்துரையாடலையும் மேற்கொள்ளக் கூடாது. அதற்கான வழிவகைகளை ஏற்படுத்த தென்னாபிரிக்காவுக்கோ அல்லது எந்தவொரு வெளித்தரப்பினருக்கோ தலையிடுவதற்கு இடமளிக்கக்கூடாது.

05. பிரிவினைவாதக் கருத்துக்களைப் பரப்புகின்ற இலங்கைக்கு எதிரான சர்வதேச அமைப்புகள் அல்லது தரப்பினர்களுடன் தொடர்புகளைப் பேணி வருகின்ற, அவர்களுக்கு தகவல்களை வழங்கிவருகின்ற அனைவர்களுக்கு எதிராகவும் சட்டத்தை கடுமையான முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும்.

06. மத நல்லிணக்கத்திற்கும் மக்[illegible]ின் ஒற்றுமைக்கு எதிராகவும் செயற்படுகின்ற தீவிரவாத அமைப்புகளுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

07. நாட்டின் நிதிச் சொத்துக்களிலிருந்து சில விகிதங்களை விற்பனை செய்ய முடியுமான நுகர்வுப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்துறை ஒன்றை கட்டியெழுப்புவதற்காக முதலீடு செய்ய வேண்டும். சீனி, பால்மா, அரிசி, மா போன்ற உணவுப் பொருட்களுக்கு மாற்றீடாக இறக்குமதி செய்யப்படுகின்ற உணவுப் பொருட்களை மட்டுப்படுத்த வேண்டும்.

08. அதிகாரவர்க்கப் பொருளாதாரத்தை வலுப்படுத்த வேண்டும்.

09. கசினோ, ஒன்லைன் சூது மற்றும் இவைபோன்ற இன்னோரன்ன அநாச்சாரங்கள் நாட்டில் வியாபிக்காத வண்ணம் சட்டச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். அத்தோடு அநாச்சாரங்களை உள்ளடக்கிய எந்தவொரு முதலீட்டுக்கும் வரிச்சலுகைகளை வழங்கக்கூடாது.

10. சீனாவுடன் பொருளாதாரத் தொடர்புகளை பலப்படுத்த வேண்டும்.

11. நாட்டில் நல்லாட்சியை ஸ்திரப்படுத்துவதற்கும் ஊழல் மோசடிகளை கட்டுப்படுத்துவதற்கும் மக்கள் பிரதிநிதிகளினதும் அரசாங்க உயர் அதிகாரிகளினதும் சொத்து விபரங்களை எவ்விதத் தடையின்றி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொதுமக்களுக்கு பெற்றுக்கொள்ள முடியுமான முறைமையொன்றை ஏற்படுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்சி எதை நோக்கி?

வேண்டும்.

12. பாதாளக் கோஷ்டி மற்றும் பெரியளவிலான குற்றச் செயல்களை முடக்குவதற்கு பொலிஸ், இராணுவம் இணைந்து கருமமாற்றக்கூடிய வகையில் கூட்டுப் பொறிமுறை ஒன்றை உருவாக்குதல் வேண்டும். சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டும்.

இவற்றில் 2, 3, 10, 12 ஆகிய முன்மொழிவுகளைத் தவிர ஏனைய முன்மொழிவுகள் தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தும் என எதிர்பார்க்க முடியாதுள்ளது. அரசாங்கத்தின் தற்போதைய நிலைமைகளை அவதானிக்கும்போது அவை நடைமுறையில் சாத்தியப்படுவதில்லை என்பது புலப்படுகிறது. சர்வதேச விசாரணைகளை எதிர்ப்பதற்கு அரசாங்கம் ஏலவே முடிவெடுத்துள்ளது. புதிய விசாரணைகளை நாட்டில் ஆரம்பிக்கவும் இடமளிக்காது. சீன நாட்டின் மீதுள்ள மோகம் குறைந்தபாடில்லை. குற்றவாளிகளுக்கு எவ்வித வழக்கும் பதியாமலேயே மரண தண்டனை வழங்கும் திட்டத்தை

**கூட்டணி உறுப்பினர்களை களங்கப்படுத்தலாம்**

**...தை பலவீனப்படுத்தலாம்**

**...வக்கத்தை அடையாளப்படுத்தலாம்**

அரசாங்கம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளது. தேசிய சுதந்திர முன்னணியின் மீதமுள்ள முன்மொழிவுகளை செயற்படுத்துவது எவ்வாறிருப்பினும் குறித்த முன்மொழிவுகளில் மூன்றில் ஒன்றுக்கு அரசாங்கத்திற்கு விருப்பப்பட முடியும். தமது முன்மொழிவுகளில் பலதையேனும் நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் முன்வருமேயானால் தாம் அதில் திருப்தியுறுவோம் என்பதாக விமல் வீரவன்ஸ ஒரு பொழுது கூறியிருந்தார்.

கடந்த தினமொன்றில் பௌத்த மதபீட தலைமைப் பிக்குகளை சந்திக்கச் சென்றிருந்த வேளையிலும் கூட அரசாங்கம் தங்களது கோரிக்கைகளுள் பலவற்றை நிறைவேற்ற முன்வந்தால் தாம் தொடர்ந்தும் அரசுக்கு ஆதரவளிப்போம் என்பதான கருத்துக்களைக் கூறியிருந்தார். அரசாங்கத்திலிருந்து பிரிந்து செல்லாமல், அரசாங்கத்தை விட்டு வெளியேறிச் சென்று தங்களது கொள்கைகளுக்காக குரல் கொடுப்பது அமைச்சருக்கு அவ்வளவு இலகுவானதொரு விடயமல்ல. உறுதியான நோக்கம், அதனை அடைந்து கொள்வதற்காக இடைவிடாத அர்ப்பணிப்பு, மக்களை இலகுவாக பேச்சாற்றலால் கவரக்கூடிய தன்மை போன்ற திறமையான பண்புகளால் நிரம்பப் பெற்ற அமைச்சர் வீரவன்ஸவுக்கு, சுயேட்சையாக அரசியலில் ஈடுபடுவதற்குள்ள வழிகள் அவரது தேசிய சுதந்திர முன்னணியின் தற்போதைய வரையறைகளால் தடுக்கப்படுகின்றன. தேசிய சுதந்தி

முன்னணியின் தலைவராக உள்ள வீரவன்சவுக்கு அக்கட்சியிலுள்ள இதர தேசியவாதிகளின் கருத்துக்களை அரசியல் தளத்தில் சாத்தியப்படுத்திக் கொள்ள முடியாது போகிறது. அரசியல் மட்டத்தில் ஸ்திரப்பாட்டை அடைவதற்கான தீர்க்கமான கலந்துரையாடல்களோ அல்லது சிந்தனா ரீதியான தூண்டுதல்களோ அவரது கட்சியிலிருந்து அவருக்குக் கிடைப்பதில்லை. தோதாக தேசியவாதச் சிந்தனைகளே அவருக்குப் புகட்டப்படுகின்றன. அமைச்சர் வீரவன்சவினது பேச்சுக்களையே அசை போடுகின்ற, அவரது அமைச்சில் வழங்கப்பட்டுள்ள ஒரு சில பதவிகளால் வாழ்க்கையை ஓட்டுகின்ற சிலரே அவரது கட்சியில் அங்கத்துவம் பெற்றுள்ளனர். அவரது கட்சிக்கு வெளியாலுள்ள அரசியல் குருவான குணதாச அமரசேகரவின் கருத்துச் சிந்தனைகளும் கூட தற்போதைய இலங்கையின் அரசியல் நீரோட்டத்தில் செல்வாக்காகியுள்ளது.

இற்றைக்கு சில காலங்களுக்கு முன்பு அமரசேகர பிரதிநிதித்துவப்படுத்திய தேசியவாத சிந்தனைக் கருத்துக்களுடன் இணைந்திருந்த பெரும்பாலானோர் தற்பொழுது இவரை விட்டுப் பிரிந்துள்ளனர். அவர்களுள் சிலர் தற்பொழுது கடுமையாக விமர்சித்தும் வருகின்றனர். குணதாச அமரசேகரவினதும் வீரவன்சவினதும் தலையீட்டில் தர்க்க ரீதியாகவும் எழுத்து ரீதியாகவும் கடந்த காலத்தில் வெளியிடப்பட்ட பௌத்த புனர்வாழ்வுக்குழு அறிக்கை காட்டுகின்ற சிந்தனா ரீதியான வறுமை, அவர்களது சிந்தனை மனப்பாங்குகள் காலங்கடந்து போயுள்ளமைக்கும் அது தீவிரவாதத் தன்மை பொருந்தியுள்ளமைக்கும் சீரற்ற உதாரணங்களாகும். இலங்கை போன்றதொரு நாடு இன்று முகம் கொடுக்கின்ற பிரதான பிரச்சினைகளுக்கு யதார்த்த ரீதியிலான பின்புலத்தில் எவ்விதத் தீர்வுகளும் அவ்வறிக்கையில் சொல்லப்படவில்லை. இத்தகைய குழுவினது அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தமொன்றை உருவாக்குமாறு அமைச்சர் வீரவன்ச கூறுகின்ற முன்மொழிவுகள் செல்லுபடியற்றதாகிறது.

மறுபுறத்தில் இவையனைத்தினதும் வசன கர்த்தாவன ஜனாதிபதி தொடர்பில் வீரவன்சவுக்கு எவ்வித விமர்சனங்களும் இல்லை. நிதி அமைச்சின் செயலாளர் பி.பி. ஜயசுந்தர தொடர்பிலுள்ள இவரது நீண்டகால விமர்சனங்கள் எவ்வளவு கடுமையானதாக இருந்தாலும் செயலாளரை நியமிப்பது ஜனாதிபதி என்றபடியால் அவரது விமர்சனங்களுக்கு தெளிவானதொரு வரையறையை வைத்துக் கொண்டுள்ளார். கசினோ எதிர்ப்பை எடுத்துக்கொண்டாலும், போக்குவரத்து அமைச்சின் செயலாளர் தம்மிக பெரேரா இலங்கையின் முதற்தர கசினோ வர்த்தகர் என்பதைத் தெரிந்து கொண்டும் அவரை எதிர்ப்பதிலும் ஒரு வரையறையை வைத்துக் கொண்டுள்ளார். தம்மிக பெரேரா போன்ற கசினோ காரர் ஒருவரை செயலாளராக நியமித்தது ஜனாதிபதியே. எதிர்வரக் கூடிய ஜனாதிபதித் தேர்தலிலும் கூட மஹிந்த ராஜபக்ஷவைத் தவிர பொருத்தமானவர் எவரும் விமல் வீரவன்சவிற்கு தென்படமாட்டாது. அவர் அரசாங்கத்தில் தொடர்ந்திருந்தாலோ அல்லது பரிந்து சென்றாலும் கூட அவரிடமிருந்து ஒரு மாற்றுச் சிந்தனையை எதிர்பார்க்க முடியாது.

ஆனாலும் அமைச்சரின் அரசாங்கத்திற்கு எதிரான விமர்சனங்கள் தற்பொழுது ராஜபக்ஷ அரசாங்கத்திலுள்ள கூட்டணி உறுப்பினர்களை களங்கப்படுத்தலாம் என்பதும் ஜனாதிபதியின் அதிகாரப் பலத்தை பலவீனப்படுத்தலாம் என்பதும் அரசாங்கத்தின் வீழ்ச்சியின் துவக்கத்தை அடையாளப்படுத்தலாம் என்பதும் தெளிவான உண்மைகளாகும். எவ்வாறிருப்பினும் இவ்வரசாங்கம் சில காலத்தில் வீழ்ந்து விடும். இவ்வாறு சென்றால் நாம் இருந்தாலும் வீழ்ந்து விடும். அமைச்சரின் முன்மொழிவுகளுக்கு அரசாங்கம் சிறந்ததொரு பதிலை வழங்காவிட்டால் இவ்வீழ்ச்சி உடனடியாக ஏற்பட்டுவிடும் என்பது அவரது கருத்துக்கள் சொல்ல விளைகின்றன. அவரது ஒரு சில தர்க்க விமர்சனங்கள் அரசாங்கத்திற்கு வெளியாலுள்ள விமர்சகர்களின் கருத்தோடு ஒத்துப்போகின்றன. ஆனாலும் அவர் சொல்லாத பல விமர்சனங்கள் உள்ளன. இவையனைத்தையும் ஒன்றிணைத்து அரசாங்க எதிர்ப்பொன்றை உருவாக்குவது எப்படி என்பதைச் சிந்திக்க வேண்டியது எதிர்க்கட்சியின் கடமையாகும். ■

மூலம்: ராவய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துருக்கியில் சுரங்க விபத்து 3 நாட்களுக்கு துக்க தினம்



துருக்கி சோமா நகரின் மேற்கு பகுதியிலுள்ள நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 301 ஆக அதிகரித்துள்ளது.

இது குறித்து அந்நாட்டு எரிசக்தி துறை அமைச்சர் டனீர் யல்டீஸ் கூறும்போது; மீட்பு குழுவினர் கடைசியாக 2 தொழிலாளர்களின் உடல்களை மீட்டனர். மொத்தம் 301 தொழிலாளர்கள் இதில் உயிரிழந்தனர். மீட்பு பணிகள் முடிவடைந்ததும் இந்த விபத்து குறித்து தீவிர விசாரணை நடத்த முடிவு செய்துள்ளோம். இந்த விபத்து எங்களுக்கு பெரும் சோகத்தையும் அதிர்ச்சியையும் கொடுத்துள்ளது எனத் தெரிவித்தார்.

485 சுரங்க தொழிலாளர்கள் இந்த விபத்திலிருந்து உயிர் தப்பியுள்ளனர். எனினும் இந்த விபத்தில் பலியானோரின் மொத்த எண்ணிக்கை குறித்துக் கணக்கிட முடியவில்லை. இன்னும் பல சடலங்கள் சுரங்கத்துக்குள் புதையுண்டு இருக்கலாம் என பல்வேறு தரப்பிலிருந்தும் கூறப்படுகிறது.

துருக்கி அரசு சுரங்க விபத்தில் பலியானோரின் அஞ்சலிக்காக 3 நாட்களுக்கு துக்க தினமாக அறிவித்துள்ளது.

## 8 இன்ச் இடைவெளிக்குள் விழுந்த சிறுவன் 6 மணிநேரம் போராடி மீட்பு



சீனாவில் 5 வயது சிறுவன் ஒருவன் இரண்டு கட்டிடங்களுக்கு இடையே இருந்த 8 இன்ச் இடைவெளிக்குள் சுமார் 23 அடி ஆழத்தில் தவறி விழுந்து விட்டான்.

8 இன்ச் இடைவெளிக்குள் மீட்புப் படையினர் யாரும் உள்ளே முடியாத நிலை இருந்ததால் சிறுவன் விழுந்திருந்த இடத்தின் அருகேயுள்ள சுவரில் ஓட்டை போட்டு சிறுவனை மிக சாமர்த்தியமாக மீட்டனர்.

சிறுவனை மீட்டவுடன் சிறுவனின் தாய் கட்டிப் பிடித்து கதறியழுத காட்சி காண்போர் நெஞ்சை கரைய வைக்கும்படி இருந்தது.

## எகிப்தில் 135 குடும்பங்கள் உண்ணாவிரதம்

எகிப்திய சிறைகளில் இராணுவத்தால் அடைக்கப்பட்டுள்ள தமது குடும்ப உறவினர் மற்றும் பிள்ளைகளை விடுவிக்கக் கோரி 135 குடும்பங்கள் உண்ணாவிரத போராட்டத்தில் இறங்கியுள்ளன.

இது, பல கட்டமாக நடைபெறும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எகிப்திய இரணுவ புரட்சிக்கு பின் இன்னும் எகிப்தில் குழப்பங்கள் குறைந்தபாடில்லை. பல ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டும் கைது செய்யப்பட்டு கொடுமைகளுக்கும் உள்ளாகிவிடுகின்றனர்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஊடகங்கள் இது குறித்து மௌனம் சாதித்தே வருகின்றன என எகிப்து மக்கள் விஷனம் தெரிவிக்கின்றனர்.

## உலக சிந்தனையாளர்களுள் ஒருவர் தாரிக் ரமழான்

### பிரிட்டன் டைம்



பிரிட்டன் டைம் பத்திரிகை, பல்வேறு சமூகங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள நூறுபேரில் ஒருவராக சுவிட்சர்லாந்தின் இஸ்லாமிய சிந்தனையாளர் டாக்டர், தாரிக் ரமழானைத் தேர்ந்தெடுத்துள்ளது. இவர் இமாம் ஹசனுல் பன்னா அவர்களின் பேரர். ஐரோப்பாவில் இஸ்லாமிய உரை ஆற்றுவதிலும் இஸ்லாமோ போபியாவுக்குத் தக்க தீர்வு காண்பதிலும் ஐரோப்பாவில் வாழும் சிறுபான்மையினர் சமமாக நடத்தப்படாததை எதிர்த்து இயக்கம் கண்டதிலும் மாபெரும் சாதனை படைத்தவர் தாரிக் ரமழான் என டைம் பத்திரிகை பாராட்டியுள்ளது.

## உலக சாதனை படைத்த சவூதி மாணவி



உலகின் 14 முக்கிய நாடுகளிலிருந்து 500 இளம் கணித மேதைகள் கலந்து கொண்ட மன கணித சர்வதேச போட்டி அண்மையில் ஹாங்காங்கில் நடைபெற்றது.

இதில் அனைவரையும் திகைக்க வைக்கும் விதத்தில் சர்வதேச அளவில் மூன்றாம் இடத்தை பிடித்தார் சவூதி அரபியாவைச் சேர்ந்த ஸரூக் பிந்து ஹமீத் முஹ்னஸி என்ற பெயரையுடைய 12 வயது மாணவி.

அந்த மாணவியின் அற்புதமான கணித ஆற்றலைக் கண்டு அங்கு வந்திருந்தவர்கள் அனைவரும் ஆச்சரியம் அடைந்தனர்.

## உலகை திகைக்கச் செய்த எகிப்திய நீதிமன்றத் தீர்ப்பு



எகிப்தில் வெளியான தீர்ப்பு முழு உலகையும் திகைக்கச் செய்துள்ளது. அதுதான் பல்கலைகழக மாணவிகளுக்கான சிறைத் தண்டனையாகும். எகிப்தில் ஜனாதிபதி முர்சிக்கு எதிராக இடம் பெற்ற இரணுவ கிளர்ச்சியின் பின்னர், அங்கு தொடர்ந்தும் பல ஆர்ப்பாட்டங்கள் பல பாகத்திலும் இடம்பெற்று வருகின்றன.

இதன்போது எகிப்திய இராணுவத்தால் கைது செய்யப்பட்ட மினா, அப்றார் என்ற மாணவிகளுக்குக்கு இரு வருடங்களும் யுஸ்ரா என்ற மாணவிக்கு ஆறு வருடங்களும் மேலும் மன்சூரா பகுதியிலுள்ள 16 மாணவர்களுக்கு தலா ஐந்து வருடங்களும் தண்டனை வழங்கப் பட்டுள்ளது.

## நைஜீரியாவில் இரட்டை குண்டுவெடிப்பு எண்ணிக்கை 118 ஆக உயர்வு



கடந்த மாதம் 300 நைஜீரிய பள்ளி மாணவிகளை கடத்திய போகோ ஹராம் அமைப்பினர் மீது போர் நடவடிக்கை எடுக்க நைஜீரியா உட்பட நான்கு ஆபிரிக்க நாடுகள் முடிவு செய்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதனால் ஆத்திரமடைந்த போகோ ஹராம் அமைப்பினர் நைஜீரிய நகரம் ஒன்றில் அடுத்தடுத்த இரண்டு கார் வெடிகுண்டுகளை வெடிக்க வைத்து பழிவாங்கினர். இந்த பயங்கர தாக்குதலில் 118 பேர் கொல்லப்பட்டதாக செய்திகள் வெளிவந்துள்ளன. பலி எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கக்கூடும் எனவும் அஞ்சப்படுகிறது.

இச்சம்பவம் நடந்த அடுத்த 20 நிமிடங்களில் அங்கு வந்த ஒரு மினி பஸ்ஸிலிருந்தும் வெடிகுண்டும் வெடித்தது. இந்த விபத்தில் 46 பேர் பலியானதாகவும் 45 பேர் படுகாயம் அடைந்ததாகவும் கூறப்பட்டது.

இரட்டை குண்டு வெடிப்பில் அங்கிருந்த கட்டிடங்கள் அனைத்தும் சேதமடைந்தன. கட்டிட இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 118 ஆக உயர்ந்துள்ளது.

குண்டு வெடிப்பு சம்பவத்திற்கு நைஜீரிய அதிபர் குட்லக் ஜோன்தன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், போகோ ஹராம் அமைப்பினருக்கு எதிரான போரில் வெற்றி பெற மக்கள் அனைவரும் ஒற்றுமைப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

## சிரியாவுக்கு நீதியில்லை பேரக் குழந்தைகளும் நீதி கேட்கும்


சிரியாவில் நிலவி வரும் கொடிய நிலையை, மனித உரிமை மீறலை சர்வதேச கிரிமினல் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்ல ஏதுவான தீர்மானம், ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் கொண்டு வரப்பட்டது. பிரான்ஸ் கொண்டு வந்த இந்த தீர்மானத்துக்கு ஆதரவாக 13 நாடுகள் வாக்களித்தன.

ஆனால் சிரியாவின் நட்பு நாடான ரஷ்யாவும் சீனாவும் தங்கள் மறுப்பு வாக்குரிமையை பயன்படுத்தி விட்டன. இதனால் தீர்மானம் நிறைவேறாமல் போய்விட்டது. சிரியாவுக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் மீது ரஷ்யா தனது மறுப்பு வாக்குரிமையை பயன்படுத்தியிருப்பது இது 4 ஆவது முறை.

வாக்கெடுப்புக்கு பின்னர் ஐ.நா. வுக்கான அமெரிக்க தூதுவர் சமந்தா பவர் பேசும் போது, இந்த பூமியில் அமைந்துள்ள நரகத்தில் (சிரியாவில்) வாழுகின்ற மக்களுக்கு நீதி வழங்குவதில் நாம் எப்படி தோற்றுப் போனோம் என்று நமது பேரக் குழந்தைகள் இப்போது முதல் இனி வருங்காலத்திலும் நம்மிடம் கேள்வி கேட்பார்கள் என வேதனையுடன் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலீபா கப்டரின் செயற்பாடுகளை லிபிய அரசாங்கம் இராணுவப் புரட்சிக்கான முன்னேற்பாடாக விமர்சிக்கிறது






ஸகி பவ்ஸ் (நளீமி)

சென்றவாரம் பொரின் அப்யாஸ் சஞ்சிகையில் (Who will win in the Middle East?) மத்திய கிழக்கில் யார் வெற்றி பெறப் போகிறார்? என்ற தலைப்பில் அமெரிக்காவில் வசிக்கும் சவூதி அரேபிய பிரபல ஊடகவியலாளர் தாரிக் உஸ்மான் கட்டுரையொன்றை எழுதியிருந்தார். அக்கட்டுரை 1950 களிலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கிடையில் நிலவும் அதிகாரப்போட்டி பற்றியும் அதன் நவீன திருப்பங்கள் பற்றியும் பல கருத்துக்களை வாதிக்கிறது. குறிப்பாக, 1950 - 60 இற்கு இடைப்பட்ட காலம் அரபு நாடுகளின் அதிகாரத் தலைமையை எகிப்து வகித்தது. அதன் தலைவராக ஜமால் அப்துல் நாஸர் திகழ்ந்தார். 1967 ஆம் ஆண்டு அரபு இஸ்ரேலிய யுத்தத்தில் அரபு நாடுகள் அடைந்த படுதோல்வியும், அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற ஜமாத் அப்துல் நாஸரின் மரணமும் எகிப்தின் தலைமைத்துவத்தை ஆட்டங்காணச் செய்தன.

1970 களில் எண்ணெய் பீப்பாய்க்கான விலையேற்றம் சவூதி அரேபியா தலைமையிலான வளைகுடா நாடுகளை நோக்கி மத்திய கிழக்கின் தலைமைத்துவத்தை நகர்த்தியது. 1993 ஆம் ஆண்டு பலஸ்தீனத்தின் பதாஹ் அமைப்பின் தலைவர் யசீர் அரபாதுக்கும் இஸ்ரேலியப் பிரதமர் யட்ஸக் ரோபனுக்குமிடையில் இடம்பெற்ற ஒஸ்லோ உடன்படிக்கையும் இஸ்ரேல் ஜோர்தானிய சமாதான உடன்படிக்கையும் அரபுலகின் நான்காம் கட்டத்தை தீர்மானித்தன. அதாவது கடந்த நான்கு தசாப்த காலமாக நிகழ்ந்த அதிகாரப் போட்டி ஒரளவுக்கு நீங்கி பொருளாதார கூட்டிணை ஒன்றினை நோக்கி அரபு நாடுகள் தள்ளப்பட்டன. இதன் விளைவாக, இஸ்ரேலுடன் சுமுகமான நிலையொன்றை அரபு நாட்டுத் தலைவர்கள் ஏற்படுத்திக்கொண்டனர். ஏககாலத்தில் பலஸ்தீன் விவகாரம் ஒரு முக்கிய பிரச்சினையாக அரபுத் தலைவர்களால் உத்தியோக பூர்வமாக கருதப்பட்டே வந்தது.

1999 களில் மிகக் கடுமையான அரபு எதிர்ப்பாளர்களிடம் இஸ்ரேலிய அரசு கைமாறியது. எனவே அரபு இஸ்ரேலிய கூட்டிணைவு சடுதியாக ஸ்தம்பித்து விட்டது. 2000 களில் மத்திய கிழக்கின் தலைமைத்துவம் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க யாரிடமும் இருக்கவில்லை. 2000, 2005 களில் அரபுலக தலைமைகளின் அதிகரித்த ஊழல்களும் அதிகார துஷ்பிரயோகங்களும் மக்களை விரக்தியின் உச்சத்தை நோக்கி நகர்த்தின. 2011ஆம் ஆண்டு, அரபு வசந்தம் அரபுலகில் மீண்டுமொருவலுச்சமநிலை மாற்றத்தை ஏற்படுத்துகிறது. அரபு வசந்தம் எதனை சாதித்தது? சாதிக்க வில்லை? என்ற கலந்துரையாடலுக்கு அப்பால், அரபுலகில் புதிய எதிரிகளை உருவாக்கியிருக்கிறது என்பதே பொருத்தமான அரசியல் சூத்திரம் என ஊடகவியலாளர் தாரிக் உஸ்மான் கருதுகிறார். அதாவது, 1950-60 களில் இஸ்லாமியவாதிகளுக்கும் அப்துல் நாஸருக்குமிடையிலான போராட்டம் இடம்பெற்றது. 1960 -70 களில் சவூதி மற்றும் ஏனைய வளைகுடா மன்னராட்சிகளுக்கும் எகிப்துக்குமிடையில் போராட்டம் தொடர்ந்தது. 1970 -1990 வரை அரபு இஸ்ரேலிய பதற்ற நிலை காணப்பட்டது. இந்த வரிசையில் 2011 இன் பின்னர் அரபு மன்னராட்சியும் அரபு குடியரசுகளும் இஸ்ரேலும் இணைந்து இஸ்லாமிவாதிகளுடன் போராட துவங்கியுள்ளன. எனவே, அரபு நாடுகளுக்கு அரபு வசந்தம் பெற்றுக்கொடுத்தது என்ன? என்பதற்கு அப்பால், அது இன்னுமொரு போராட்ட கட்டமைப்பை ஆரம்பித்து வைத்த ஒரு நிகழ்வாகவே நோக்க வேண்டும் என்பது தாரிக் உஸ்மானின் சிந்தனையாகும். இதுவே எகிப்திய இராணுவ புரட்சியிலும் சிரியாவில் தொடரும் சிவில் யுத்தத்திலும் யமனில் தொடரும் அரசியல் உடன்பாடற்ற தன்மையிலும் தெளிவாகப் புலப்படுகிறது என்கிறார் தாரிக் உஸ்மான். லிபியாவில் இடம்பெறும் சமீபத்திய நிகழ்வுகள் இத்தகைய அரபுலக இஸ்லாமியவாதிகளுக்கு இடையிலான போராட்டத்தின் புதிய அத்தியாயம். அங்கும் ஆரம்பித்து விட்டதை எதிர்வு கூறுவதாக உள்ளது.

### லிபியாவில் என்ன நடக்கிறது?

2011 ஆம் ஆண்டு கேர்ணல் கடாபி ஆட்சியிலிருந்து தூக்கியெறியப்பட்டது முதல் துவங்கிய அசாதாரண சூழமைகள் இன்னும் நிறைவடையவில்லை. தனக்கெதிரான மக்கள் பேரலையை எதிர்கொள்வதற்காக கடாபி ஆபிரிக்க கண்டத்திலுள்ள பல்வேறு ஆயுதக் குழுக்களை தருவித்தார். கடாபியின் வீழ்ச்சியுடன் கடாபியின் ஆயுதக் கிடங்குகள் அவருக்கு எதிராகப் போராடிய கோத்திர ஆயுதக் குழுக்களின் கையில் சிக்கிக்கொண்டன. கடாபியின் பின்னரான லிபியாவின் அரசியல் அரங்கில் தமக்கான அரசியல் இலாபங்களை பெற்றுக் கொள்ளும் நோக்கோடு தமது ஆயுதக் குழுக்களை கோத்திரங்களும் அரசுசாரா ஆயுதக் குழுக்களும் பயன்படுத்தத் துவங்கின. தமது எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கு இடைக்கால அரசுகள் கரிசனை காட்டாதபோது, அக்கோத்திரங்கள் லிபியாவின் பல்வேறு பகுதிகளை தங்களது சுய கட்டுப்பாட்டின் கீழால் கொண்டு வந்தன. மேலும், எண்ணெய் வளம் மிக்க நகரங்களை கைபப்ற்றியதுடன், சட்டபூர்வமற்ற வகையில் எண்ணெய் ஏற்றுமதி செய்ய ஆரம்பித்தன. லிபியாவின் மத்திய அரசால் இவ்வாயுதக் குழுக்களை அடக்கவோ, கட்டுப்படுத்தவோ முடியாத பலவீனம் காணப்படுகிறது.

மறுபுறத்தில், புரட்சிக்குப் பின்னர் வந்த இடைக்கால அரசுகளும் நியாயமான மாற்றங்களை செய்வதற்கு தவறிவிட்டமை நிலைமையை இன்னும் மோசமாக்கியது. குறிப்பாக, புரட்சியின் பின்னரான பிரதமராக இருந்த அலி ஸைடான் ஊழல் குற்றச்சாட்டில் பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்டார். இரண்டு வருடங்களுக்கும் மேலாக லிபியாவின் பாராளுமன்றம் இயங்கிக் கொண்டிருந்தாலும், நாட்டின் சட்ட யாப்பிலோ பாதுகாப்பு தொடர்பாகவோ எந்தவித உடன்பாடும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மத்தியில் ஏற்படாமை லிபிய மக்களுக்கு மத்தியில் மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது. வெறுமனே தலைநகரில் கூட்டம் கூடி சட்டம் அறிவிருக்கும் சபையாகவே அரசு தொழிற்படுகிறது. பென்காஸி போன்ற பெரும் நகரங்களின் பாதுகாப்பு அப்படியே நீர்த்துப் போயிருக்கிறது. நிலைமை அப்படியிருக்கும் போது ஆயுதக் குழுக்களை சட்டபூர்வமற்ற முறையில் தொழிற்பட அரசு அனுமதிக்காது என ஊடகவியலாளர் மாநாட்டில் அரச அறிவிப்பாளர் உரத்துச் சொல்வதால் நடைபெறப் போவது ஒன்றுமில்லை என்பது லிபிய மக்களின் நியாயமான ஆதங்கமாகும்.

அதனோடிணைந்த வகையில், லிபியாவின் பாராளுமன்றம் மற்றும் சட்ட யாப்புக்கான சபையைப் பொறுத்தவரை, அதில் லிபிய இஃவான் முஸ்லிமூன் அமைப்பினரும் இஸ்லாமியவாதத்தை ஆதரிக்கும் பல கோத்திரங்களினதும் பிரதிநிதிகளும் நியாயமான ஆதிக்கம் செலுத்தி வருகின்றமை உண்மை. சவூதி அரேபியா, அல்ஜீரிஆ மற்றும் எகிப்து போன்ற நாடுகள் இதன் ஆபத்தை கவனமாக மதிப்பிட்டு வருகின்றன. இந்தப் பின்புலத்தில் தற்போது லிபிய அரசியல் அரங்கில் புதியதொரு திருப்பம் ஏற்பட்டுள்ளது. அதாவது, மேஜர் ஜனரல் கலீபா கப்டர் என்ற ஒருவர் லிபிய இராணுவத்தின் சில பிரிவினரை ஒழுங்குபடுத்தி, லிபிய அரசவையில் செல்வாக்குச் செலுத்தும் இஸ்லாமியவாதிகளையும், லிபியாவில் இயங்கும் இஸ்லாமிய ஆயுதக் குழுக்களையும் கோத்திரங்களையும் ஒழித்துக் கட்டப் போவதாக பகிரங்கமாக பிரசாரம் செய்து வருகிறார். லிபிய மக்கள் விருப்பம் தெரிவித்தால், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தான் குதிக்க தயாராக இருப்பதாகவும் குறிப்பிடுகிறார். அவ்வாறு ஜனாதிபதியாகத் தெரிவாகும் பட்சத்தில், இஃவான்களை லிபியாவிலிருந்து பூண்டோடு அழிப்பதற்கு தான் தயாராக இருப்பதாக சூழுரைத்திருக்கிறார். இன்னும், எகிப்துடன் இணைந்து லிபியாவில் இயங்கும் ஆயுதக் குழுக்களை தாக்குவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் தெளிவாக பிரசாரம் செய்கிறார். மேஜர் ஜனரல் கலீபா கப்டரின் செயற்பாடுகளை லிபிய அரசாங்கம் இராணுவப் புரட்சியொன்றுக்கான முன்னேற்பாடு என அறிவித்துள்ளதோடு, அவரை அரசியல் அரங்கிலிருந்து ஒதுங்கிக் கொள்ளுமாறும் அறிக்கை விட்டுள்ளது.




மேஜர் ஜனரல் கலீபா கப்டர் என்ற ஒருவர் லிபிய இராணுவத்தின் சில பிரிவினரை ஒழுங்குபடுத்தி, லிபிய அரசவையில் செல்வாக்குச் செலுத்தும் இஸ்லாமியவாதிகளையும், லிபியாவில் இயங்கும் இஸ்லாமிய ஆயுதக் குழுக்களையும் கோத்திரங்களையும் ஒழித்துக் கட்டப்போவதாக பகிரங்கமாக பிரசாரம் செய்து வருகிறார்.

### யார் இந்த ஜனரல் கப்டர்?

1969 ஆம் ஆண்டு கேர்ணல் கடாபியை ஆட்சிப்பீடமேற்றுவதற்கு துணையாக இருந்தவர்களில் மேஜர் ஜனரல் கலீபா கப்டரும் ஒருவர். கேர்ணல் கடாபியுடன் நெருங்கிய சகவாசம் வைத்திருந்த ஜனரல் கப்டர், 1970 களில் லிபிய இராணுவத்தின் தலைவராக நியமனம் பெறுகிறார்.

➡ 17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஷஃபான்

# ரமழானை எதிர்கொள்ளும் பொழுதுகள்




## கழுகும் நரியும்



வேடன் விரித்த வலையில் கழுகு ஒன்று சிக்கிக் கொண்டது. அதைப் பிடித்த வேடன், சிறகுகளை மட்டும் வெட்டி சங்கிலியால் கட்டிப் போட்டிருந்தான். அவ்வழியே சென்ற பெரியவர் ஒருவர், அதன் மீது இரக்கம் கொண்டார். அந்தக் கழுகை வேடனிடமிருந்து விலைக்கு வாங்கி, தன் வீட்டிற்குக் கொண்டு சென்று, அன்புடன் வளர்த்தார்.

இறக்கைகள் நன்கு வளர்ந்ததும் அதைப் பறந்துபோக அனுமதித்தார். கழுகு பறந்து செல்லும் போது அதன் பார்வையில் ஒரு முயல் தென்பட்டது. அதை அப்படியே தூக்கி வந்து தன்னை வளர்த்த பெரியவரிடம் காணிக்கையாகக் கொடுத்தது.

இதைக் கவனித்துக் கொண்டிருந்த நரி, ஏற்கனவே உன்னைப் பிடித்த வேடன் மறுபடியும் பிடிக்கலாம். இந்த முயலை நீ அவனிடம் கொடுத்திருந்தால், மறுபடியும் அவன் உன்னைப் பிடிக்காமல் இருப்பான். பெரியவருக்கு நீ முயலைக் கொடுத்தாலும் கொடுக்காமல் இருந்தாலும் அவர் உன்னைப் பிடிக்க வரப்போவதில்லை. எதற்காக அப்படிச் செய்தாய்? என கழுகைப் பார்த்துக் கேட்டது.

அது தவறு. வேடனிடம் நான் முயலைக் கொடுத்தாலும் பிற்காலத்தில் அவன் என்னை வலைவிரித்துப் பிடிக்கலாம். ஆனால், நான் ஆபத்தில் இருந்தபோது என்னைப் பெரியவர் காப்பாற்றியுள்ளார். அவரிடம் நான் கொண்டுள்ள நன்றியையும் விசுவாசத்தையும் வெளிப்படுத்தவே முயலைக் காணிக்கையாகச் செலுத்தினேன். உதவி செய்தவரிடம் நன்றியோடு இருப்பது தான் ப்ண்புள்ள செயல் எனப் பதில் கூறியது, கழுகு.

கதையின் நீதி: ஆபத்துக் காலங்களில் உதவி செய்தவர்களை மறக்காமல் நன்றியோடு இருப்பதுதான் நல்லவர்களுக்கு அழகு.



## நீண்டநேரம் இணையத் தளம் பாவிப்பவரா?

### எச்சரிக்கிறது புதிய ஆய்வு

இணையப் பாவனையானது தற்போது அனேகமானவர்களை தன் பக்கம் ஈர்த்துள்ளது. இதனால் இணையத்திலேயே தமது நேரம் முழுவதையும் செலவிடுபவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த உளவியலாளரான டாக்டர் ரி.எம். ஷார்ப் என்பவரால் மேற்கொள்ளப்பட்ட புதிய ஆய்வொன்று இவ்வாறானவர்களுக்கு எச்சரிக்கை விடுப்பதாக அமைந்துள்ளது.

அதாவது, நீண்ட நேரமாக இணையத்தளத்தை பாவிப்பவர்கள் பாரிய மன அழுத்தத்திற்கு உட்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் ஆய்விற்காக 16 வயதிற்கும் 34 வயதிற்கும் இடைப்பட்ட 1029 பேர் பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களில் 25 வீதமானவர்கள் நாள் ஒன்றிற்கு 21 மணித்தியாலங்கள் இணையத் தளத்தில் இருக்கின்றனர் என்றும் இந்த வயதெல்லைக்கு உட்பட்டவர்கள் சராசரியாக 18 மணித்தியாலங்கள் இணையத்தில் இருக்கின்றனர் என்றும் குறித்த ஆய்வு தெரிவிக்கின்றது.

இதனால் மன உளைச்சல், கவலை, கழுத்துவலி, தூக்க மயக்கம், தூக்கமின்மை போன்றவற்றிற்கும் உள்ளாவதாக அந்த ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

## கிளி

கிளியின் சராசரி ஆயுட் காலம் 50 ஆண்டுகள். அறுநூறுக்கும் மேற்பட்ட வித விதமான கிளிகள் உள்ளன. கிளியால் தன் மேல் அலகை மட்டுமே அசைக்க முடியும். கேட்கும் சக்தி அதிகம். கிளி ஓராண்டிற்கு ஒரு முட்டை மட்டுமே இடும். பெரும்பாலான பறவைகளுக்கு அதன் கால் விரல்களில் மூன்று முன்னோக்கியும் ஒன்று மட்டும் பின்னோக்கியும் இருக்கும். ஆனால், கிளிகளுக்கு இரண்டு விரல்கள் முன்னோக்கியும் இரண்டு விரல்கள் பின்னோக்கியும் இருக்கும். கியா என்ற பெயர் கொண்ட அவுஸ்திரேலிய கிளிகள் மாமிசம் தின்பவை. தென்னமெரிக்காவில் உள்ள அமேசன் நதியில் வாழும் ஒருவித மஞ்சள் நிற கிளிகள் மீனைத் தின்னும். பச்சை நிற கிளி குஞ்சுகள் நாளடைவில் மஞ்சள், பச்சை, சிகப்பு ஆகிய நிறங்களுடன் பஞ்சவர்ண கிளிகளாக மாறிவிடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெண்கள் தேசம்

தயாரிப்பு: சமீலா யூசுப் அலி



# காசு சம்பாதிக்கும் பெண் திமிர் கொண்டவள்

பெண் உழைக்கலாமா, கூடாதா? என்ற கருத்து வேறுபாடுகளைத் தாண்டி உலகம் வளர்ந்து மிக நீண்டகாலமாயிற்று.

ஒரு முஸ்லிம் பெண் காசுக்கு வேலை பார்த்தல் ஆகுமா? என்ற ஐயம் இன்னும் சிலரது உள்ளத்தில் இல்லாமல் இல்லை.

பணி புரிதல் என்பது அத்தியவசியமான போது மட்டுமே என்று பரவலாகச் சொல்கிறார்கள். அத்தியவசியமா? அல்லது அநாவசியமா? என்பதை அந்தப் பெண்ணும் அவள் சார்ந்த குடும்பமும் மட்டுமே தீர்மானிக்க முடியும்.

ஒரு துறையில் தேர்ச்சி பெற்ற பெண், அந்தத் துறைக்கான பங்களிப்பை வழங்கியாக வேண்டியது அவசியம். அதற்கான ஏற்பாடுகளை அவளது குடும்பமும் சமூக அமைப்பும் செய்தே ஆக வேண்டும்.

குடும்பத்தை ஒழுங்காகப் பராமரித்து முடித்த பின்னர்தான் தொழிலுக்குச் செல்லலாம் என்று பலர் கூறலாம். குடும்பத்தைப் பரமாரிப்பது என்பது இடையுறாத ஒரு வேலை. அதில் மனைவிக்கு மட்டுமல்ல கணவனுக்கும் பங்கிருக்கிறது என்பது புரிதலுக்குரியது. குடும்பத்தையும் தொழிலையும் ஒரே நேரத்தில் திறம்பட நிர்வகிக்கும் ஆற்றல் பெண்களுக்கு நிச்சயமாக இருக்கிறது. ஒரு குடும்பம் என்றால் ஆயிரமிருக்கும். அதில் கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் புரிந்துகொண்டு, ஒருவரது வேலையை இன்னொருத்தர் செய்ய உதவலாம். இதற்கு அழகிய உதாரணம்: இறைத்தூதர் முஹம்மது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் தம் மனைவிமார்களிடம் வீட்டு வேலைகளில் எவ்வளவு உதவியாக இருந்தார்கள் என்பது. இப்போதெல்லாம் ஒரு தேநீர் ஊற்றக்கூட தெரியாது என்று கணவர் ஒதுங்குவதும் ஒத்தாசை செய்வதை அவமானமாகக் கருதுவதும் ஒரு பெருமையாகி விட்டிருக்கிறது.

எல்லாப் பெண்களும் வேலை செய்ய வெளிச் செல்லத்தான் வேண்டும் என்பதில்லை. வீட்டிலிருந்தும் கூட பணி புரியலாம். தமது திறமைகளையும் ஆற்றல்களையும் வளர்த்துக் கொள்ள விரும்பும் மகளிரும் தனக்கென்றொரு பொருளாதார சுதந்திரத்தை ஆசிப்பவர்களும் தொழில் செய்வதற்கு எந்தத் தடையும் கிடையாது.

தொழில் செய்யும் போது வரையறைகள் இருக்கின்றதே என்ற உங்கள் ஆதங்கம் புரிகிறது. ஹலாலான தொழில், நேர்மை, நம்பிக்கை மற்றும் நாணயமாக நடந்து கொள்தல் போன்றவை தொழில் செய்யக் கூடிய அனைவரையும் கட்டுப்படுத்தக் கூடிய வரையறைகள்தான்; அதில் இரு கருத்துக்கு இடமில்லை. மற்றப்படி இஸ்லாம் கூறுகின்ற அழகிய வாழ்வியலை நடைமுறைப்படுத்துவது பணி புரிவதற்காக வெளிக்கிளம்பும் போது மட்டுமல்ல, வாழ்வின் அனைத்துக் கட்டங்களிலும் கடைப்பிடிக்க வேண்டியதாகும்.


இஸ்லாமிய வரலாற்றின் தாய் அன்னை கதீஜா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் மிகப் பெரும் வர்த்தகத்தைக் கொண்டு நடத்திய ஒரு வெற்றிகரமான வியாபாரத் தலைவி (Business Woman). நபி முஹம்மத் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களுக்கு உறுதுணையாய் இன்னுமொரு தோளாய் இருக்க அந்தத் தொழில் அவருக்கு தடையாக இருக்கவில்லை. மாறாக தன் செல்வம் கொண்டு துணைவரை திடப்படுத்துபவராகவே அவர்கள் இருந்தார்கள்.

### சில பகிர்வுகள்

காசு சம்பாதிக்கும் பெண் திமிர் கொண்டவள் என்ற கருத்து சமூகத்தில் இருக்கிறது. நான்கு காசு சம்பாதித்தால் தலை, கால் புரியாது கணவனை மதிக்க மாட்டாள் என்ற அநாவசியமான பயங்களும் இல்லாமலில்லை. காசு சம்பாதிக்காமலே ஆணவம் கொள்ளும் பெண்களும் மதிக்காத மகளிரும் தாராளமாய் இருக்கிறார்கள். இவை தனிமனித இயல்பு சார்ந்த பண்புகள் மாத்திரமே.

வீட்டிலிருந்தோ, வெளியில் சென்றோ தனது கையால் உழைப்பதில் ஒரு சந்தோஷம் இருக்கிறது இறைவனுக்காக நேர்மையாக உழைக்கும் போது காசுக்கு மேலால் ஓர் ஆத்ம திருப்தி ஆட்கொள்கிறது. தன் காலில் நிற்கும் போது தன்னம்பிக்கை வளர்கிறது.

சமீலா யூசுப் அலி



# கண்களை வைத்தும் உடல் ஆரோக்கியத்தை சொல்லலாம்




கண்கள் இதயத்திற்கு மட்டும் கதவுகளாக இருப்பதில்லை, உடல் ஆரோக்கியத்திற்கும் தான்! அதற்காகத் தான் உடல் நிலை சரியில்லை என்று மருத்துவரிடம் சென்றால், அவர்கள் முதலில் கண்களைப் பரிசோதிக்கின்றனர்.

மங்கலான பார்வை: பொதுவாக இந்த பிரச்சினை கணினியில் அதிக நேரம் வேலை பார்ப்பவர்களுக்கு ஏற்படும். ஏனெனில் கம்ப்யூட்டரிலுள்ள பிக்சல்களின் அமைப்பு சரியாக இல்லாததாலும் இந்நிலை ஏற்படலாம். சிலருக்கு கண்களில் இருந்து கண்ணீர் வரும்.

மேலும், கண்களிலுள்ள லூப்ரி கேட்டிங் ஏஜென்ட் இல்லாத காரணத்தினால், கண்களில் எரிச்சல் ஏற்படுகிறது. அதிலும் மங்கலான பார்வை இருந்தால், அது நீரிழிவிற்கு ஒரு விதமான அறிகுறியாக கூட இருக்கும்.

**சிவப்பு மற்றும் எரிச்சல் கொண்ட கண்கள்:** கண்கள் சிவப்பாகவும் எரிச்சலுடனும் இருந்தால், அது சைனஸ் மற்றும் சளியின் அறிகுறி. சில நேரத்தில் அலர்ஜியின் காரணமாகவும் கண்களுக்கு போடும் மேக்கப்பில் இருக்கும் இரசாயனங்கள் மூலமாகவும் வரும் தேவையில்லாமல் கண்களுக்கான மருந்துகளை பயன்படுத்தினாலும் இவ்வாறு ஏற்படும்.

**வெளிர் நிற கண்கள்:** வெளிர் நிறத்தில் கண்கள் இருந்தால், உடலில் அனிமியா முற்றியுள்ளது என்பதற்கான அறிகுறி. அதாவது, உடலில் உள்ள ஹீமோ குளோபினின் அளவு மிகவும் குறைவாக இருப்பதால், கண்கள் வெளிர் நிறத்தில் இருக்கிறது. இந்த நிலையில் கண்கள் இருந்தால், உடனே மருத்துவரை அணுக வேண்டும்.

**மஞ்சள் நிற கண்கள்:** மஞ்சள் நிறத்தில் கண்கள் இருந்தால் உடலில் கல்லீரல், பித்தப்பை மற்றும் பித்த நாளங்கள் சரியாக இயங்காததால் ஏற்படுகிறது. மேலும் கண்களில் இருக்கும் வெள்ளை நிறப்பகுதி மட்டும் நன்கு மஞ்சள் நிறத்தில் காணப்பட்டால், அவர்கள் மஞ்சள் காமாலையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறியலாம்.

**வீக்கமான கண்கள்:** கண்கள் வீக்கத்துடன் காணப்பட்டால், உடலில் குறைபாடு உள்ளது என்பதை காட்டுகிறது. அதுவும் தைராய்டிசத்தில் ஒன்றான, ஹைப்பர் தைராய்டிசத்தின் அறிகுறியாக உள்ளது. உடனடியாக மருத்துவரை அணுக வேண்டும்.

**வறட்சியான கண்கள்:** கண்கள் வறட்சியுடன் காணப்பட்டால், உடல் நிலையில் குறைபாடு மிகுந்துள்ளதை காட்டுகிறது. மேலும் உடலில் இருக்கும் நோய் எதிர்ப்பு அமைப்பு பலவீனமடைந்துள்ளது. இதனால் உடலில் நோய்கள் எளிதில் நுழையும் வாய்ப்புள்ளது. ஆகவே இந்த நிலையில் இருந்து தவிர்க்க, நிறைய தண்ணீரை பருக வேண்டும். மேலும் நல்ல ஆரோக்கியத்தை தரும் உணவுகளை உண்ண வேண்டும்.

# தலைமுடி பிரச்சினைகளுக்கு தீர்வு

தலைமுடியைக் காப்பாற்றிக் கொள்ள அனைவரும் பாடாய்பட்டுக் கொண்டிருக்கும் இன்றைய கால கட்டத்தில் அவை சந்திக்கும் பிரச்சினைகளையும் அதற்குரிய தீர்வுகளையும் பார்க்கலாம்:

- முருங்கை கீரையை அரைத்து தலையில் தேய்த்து குளித்தால் பொடுகு வராமல் தடுக்கலாம்.
- முருங்கை கீரையுடன் மிளகு சேர்த்து அரைத்து தொடர்ந்து 15 நாட்களுக்கு சாப்பிட்டால் இரத்த சோகை குணமாகும்.
- மிளகுத்தூள், வெங்காயம், உப்பு மூன்றையும் கலந்து அரைத்து தலையில் புழு வெட்டுள்ள இடத்தில் பூசினால் அந்த இடத்தில் முடி முளைக்கும்.
- மருதாணி இலை, அவுரி இலை இரண்டையும் தேங்காய் எண்ணெயில் காய்ச்சி, வடிகட்டி தலையில் தேய்த்து வந்தால் முடி கருப்பாக மாறும்.
- மருதாணி இலைகளை நன்றாக அரைத்து சிறு, சிறு உருண்டைகளாக வெயிலில் காய வைத்து தினமும் ஓர் உருண்டையை தேங்காய் எண்ணெயில் கரைத்து தலையில் தடவி வந்தால் முடி வளரும்.
- பொடுதலைக் கீரைச்சாற்றில் வசம்பு, வெள்ளை மிளகு இரண்டையும் சம அளவில் எடுத்து ஊற வைத்து, உலர்த்திப் பொடியாக்கி, ஒரு ஸ்பூன் பொடியை நல்லெண்ணெயில் குழைத்து தலைக் குத் தேய்த்து, ஒரு மணிநேரம் ஊறவைத்து குளித்தால் பொடுகுத் தொல்லை தீரும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பதவிப்பிரமாண...

(05 ஆம் பக்கத் தொடர்)





ஆனால், தற்போதைய நிலையில் முதலமைச்சர் இந்த முடிவை எடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார் என்றே தோன்றுகிறது. தமது மாகாண நிர்வாகத்தை சுமூகமாக நடத்திக் கொண்டு போகும் வகையில் சில அதிகாரிகளை மாற்றுவது போன்ற சிறிய விடயங்களிலும் ஒத்துழைப்பு வழங்க ஜனாதிபதி மறுக்கும் நிலையில் வட மாகாண சபையோடு தாம் சுமூகமான உறவை கொண்டுள்ளதாக உலகுக்கு காட்டிக்கொள்ளவே இந்த அழைப்பின் மூலம் ஜனாதிபதி முயற்சிக்கிறார் என்று முதலமைச்சர் நினைப்பது நியாயமே.

கடந்த காலத்தில் அரசாங்கம் தம்மால் வழங்கக்கூடிய ஒத்துழைப்பை வட மாகாண சபைக்கு வழங்கியிருந்தால் முதலமைச்சர் கட்டாயம் ஜனாதிபதியின் இந்த அழைப்பை ஏற்கத்தான் வேண்டும். அவ்வாறு ஒத்துழைப்பு கிடைத்திருந்தாலும் அவர் ஜனாதிபதி முன்னிலையில் முதலமைச்சராக பதவிப் பிரமாணம் செய்துகொண்ட போது எதிர்த்ததைப் போல் வட பகுதியில் சில தீவிரவாதிகள் இதனையும் எதிர்க்கலாம். ஆனால் அரசாங்கம் மாகாண சபைக்கு அவசியமான ஒத்துழைப்பை வழங்கியிருந்தால் அவ்வாறான எதிர்ப்புகளை மதியாமல் முதலமைச்சர் நடந்து கொண்டிருக்கலாம்.

எனவே, இது தமக்கு அவசியமான குறைந்தபட்ச ஒத்துழைப்பையாவது வழங்காத அரசாங்கத்திற்கு தமது எதிர்ப்பை தெரிவிக்க மாகாண சபைக்கும் முதலமைச்சருக்கும் கிடைத்த அரிய சந்தர்ப்பமாக முதலமைச்சர் நினைக்கிறார் போலும்.

அண்மைக்காலமாக வட பகுதியில் அரசியல்வாதிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் மட்டுமன்றி, வட பகுதியில் சாதாரண மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலும் உறவு மோசமாகி வந்துள்ளது. அதிகார பரவலாக்கல் தொடர்பான விடயங்கள், பொது வாழ்க்கையில் தொடரும் இராணுவத்தின் தலையீடுகள், காணி அபகரிப்பு மற்றும் போரில் இறந்தவர்களை நினைவுகூரல் போன்ற பல விடயங்கள் அதற்குக் காரணமாக அமைந்தன.

அவற்றின் போது யார் சரி, யார் பிழை என்பது ஒரு புறமிருக்க, இவற்றால் வட பகுதியில் சாதாரண மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான உறவு மேலும் மோசமாகியது என்பதே உண்மையாகும். இந்நிலையில் தாம் ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று மோடியின் பதவிப்பிரமாண வைபவத்தில் கலந்துகொண்டால் அது தம்மை மக்களிடமிருந்து அந்நியப்படுத்தி விடலாம் என விக்னேஸ்வரன் நினைத்தால் அதுவும் நியாயமே. சிலவேளை அரசாங்கத்தின் நோக்கங்களில் ஒன்றாக அவ்வாறு அவரை அந்நியப்படுத்துவதும் இருந்திருக்கலாம்.

போர் முடிவடைந்தவுடன் இருந்ததைப் பார்க்கிலும் இப்போது வட பகுதியில் தமிழ் அரசியலில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருவதை அவதானிக்கலாம். குறிப்பாக அப்போது இருந்ததைப் பார்க்கிலும் இப்போது வட பகுதியில் தீவிரவாதம் மீண்டும் வளர்ந்துள்ளது. அரசியல் காரணங்களுக்காகவும் தேர்தல் வெற்றிக்காகவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு புலிகளை பூஜித்தமையும் அரசாங்கம் தமிழ் மக்களின் கோரிக்கைகளை தொடர்ந்து அவமதிப்புச் செய்து வந்தமையுமே இதற்குக் காரணமாகும்.

இந்நிலைமை தொடர்ந்தால் 1970, 1980 களிலும் இடம்பெற்றதைப் போல் அந்தத் தீவிரவாதம் எதிர்காலத்தில் மிதவாத தமிழ் அரசியல்வாதிகளுக்கு சுருக்குக் கயிறாக மாறக்கூடும். ஆனால் இப்போதைக்கு அதன் வளர்ச்சிக்கான காரணங்கள் இல்லாமலும் இல்லை. அவ்வாறு தீவிரவாதம் வளர்ந்து வரும் நிலையில் தமிழ் மக்களில் பெரும்பாலானவர்கள் ஏற்றுக்கொள்ளாத ஒரு விடயத்தை முதலமைச்சர் செய்தால் அவர் மக்களிடமிருந்து அந்நியப்பட்டு விடலாம். எனவே அவர் ஜனாதிபதியின் அழைப்பை நிராகரிக்கும்போது அதனையும் கருத்தில் கொண்டிருக்கலாம்.

இலங்கைத் தமிழ் அரசியலில் முதலமைச்சர் போன்ற மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் சிறியதோர் பனிப்போர் நடந்து வருவது பலருக்குத் தெரியும். அவர் முதலமைச்சர் வேட்பாளராக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமையால் நியமிக்கப்பட்ட போதும் அவர் ஜனாதிபதியின் முன் முதலமைச்சராக பதவிப்பிரமாணம் செய்துகொண்ட போதும் இந்தப் பனிப்போர் ஓரளவுக்கு அம்பலத்துக்கு வந்தது. எனவே வட பகுதியில் தீவிரவாதம் மீண்டும் வளர்ந்துள்ள இச்சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியின் அழைப்பை அவர் ஏற்பது அவருக்கு கடினமானதாக இருந்திருக்கும்.

தமிழ்நாட்டுத் தலைவர்கள் தமது சொந்த அரசியலுக்காகவே இலங்கை தமிழர்களின் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுகிறார்கள். ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள். தம்மைத் தாமே தீ மூட்டிக்கொள்ளும் வகையில் சாதாரண மக்களை உணர்ச்சிவசப்படுத்துகிறார்கள். விக்னேஸ்வரனே இதனை வட மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் காலத்தில் கூறியிருந்தார். ஆனால் அவர்களது ஆர்ப்பாட்டங்கள் இலங்கைத் தமிழர்களுக்கு பல சந்தர்ப்பங்களில் நன்மையளித்துள்ளன.

எனவே இலங்கை, தமிழ்த் தலைவர்கள் மற்றும் தமிழக தலைவர்களை முற்றாக பகைத்துக் கொள்ளவும் விரும்புவதில்லை. இலங்கை ஜனாதிபதி, மோடியின் பதவிப்பிரமாண வைபவத்திற்கு வருவதையே விரும்பாத தமிழகத் தலைவர்கள், இலங்கை ஜனாதிபதியோடு வட மாகாண முதலமைச்சரும் இந்தியாவுக்கு வருவதை எவ்வகையிலும் விரும்பமாட்டார்கள். எனவே ஜனாதிபதியோடு மோடியின் பதவிப்பிரமாண வைபவத்திற்குச் சென்று வீணாக தமிழக தலைவர்களை பகைத்துக்கொள்ள விக்னேஸ்வரனும் விரும்பமாட்டார்.

ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று, முதலமைச்சர் விக்னேஸ்வரன் புதுடில்லிக்குச் சென்றாலும் புதிய இந்திய பிரதமரின் கவனத்தை ஈர்த்துக்கொள்ள அவருக்கு வாய்ப்பு கிடைக்கும் என்ற உத்தரவாதமும் இல்லை. ஏனெனில் இது இலங்கைத் தூதுக்குழுவொன்று மட்டும் கலந்துகொள்ளும் வைபவமல்ல. அதேவேளை, தமிழக தலைவர்கள் மத்தியில் இலங்கையின் வட பகுதி முக்கியத்துவம் பெற்றுள்ள போதிலும் இந்திய மத்திய அரசாங்கத்தின் பிரதமர் ஒருவருக்கு, அதிலும் வட இந்தியாவைச் சேர்ந்த ஒருவருக்கு வட மாகாண முதலமைச்சர் முக்கியமானவராக தெரிய நியாயமில்லை. எனவே இந்தப் பயணத்தால் வட மாகாணம் அடையப்போகும் நன்மை எதுவுமில்லை என்றும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நினைத்திருக்கலாம்.

நாட்டில் இன நல்லிணக்கத்திற்கு அரசாங்கத்திற்கும் வட மாகாண சபைக்குமிடையில் நல்லுறவு வளர்வது அத்தியாவசியமாகும். அந்த வகையில் வட பகுதியில் எழுந்த எதிர்ப்புகளை உதறித் தள்ளிவிட்டு விக்னேஸ்வரன் ஜனாதிபதி முன்னிலையில் முதலமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமை வரவேற்கத்தக்கதாகும். அதேபோல் முதலமைச்சர், ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று மோடியின் பதவிப் பிரமாண வைபவத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்று தென் பகுதியில் பலர் நினைக்கிறார்கள்.

ஆனால் விக்னேஸ்வரன், ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் இரு தரப்பினரினதும் நடவடிக்கைகள் காரணமாக வட மாகாண சபையும் மத்திய அரசாங்கமும் ஒன்றையொன்று மென்மேலும் அந்நியப் படுத்திக் கொண்டன. எனவே முதலமைச்சர் மோடியின் பதவிப்பிரமாண வைபவத்தில் கலந்துகொள்வதில் அர்த்தமில்லை என்றும் சிலர் வாதிடலாம்.

உண்மையிலேயே அவர் புது டில்லிக்குச் செல்வதில் கிடைக்கக்கூடிய நன்மையோ அல்லது தீமையோ இல்லை என்றே கூற வேண்டும். ஒரு புறம் மோடியும் ஒரு புறம் மஹிந்தவும் ஒரு புறம் தமிழக தலைவர்களும் மற்றொரு புறம் விக்னேஸ்வரனும் அவரவரது அரசியல் பிரசாரத்துக்காக இச்சந்தர்ப்பத்தை பாவிக்கிறார்கள். அவ்வளவுதான். மக்கள் நலன் என்பது இதில் மிகக் குறைவாகவே சம்பந்தப்பட்டுள்ளது.

நன்றி: தமிழ் மிரர்

## தேசிய அரசியல்...

(09 ஆம் பக்கத் தொடர்)

இதில் மலையக மக்களின் நிலை என்ன என்பது மலையகக் கட்சிகளினால் தெளிவுபடுத்தப்பட வேண்டிய அவசியமுள்ளது. ஆனால் மலையக அரசியல் கிணற்றில் போட்ட கல் மாதிரி திசையின்றி அபிப்பிராயம் வெளிப்படாமல் கிடக்கிறது.

இதற்கான பிரதான காரணம் இக்கட்சிகளிடம் ஒற்றுமை இல்லாததும் கொள்கை, இல்லாததும் ஒரு தெளிவற்ற சமூகப் பார்வை இல்லாமையுமே என்பது வெளிப்படையானது. அரசின் நிழலில் குளிர் காய்ந்தால் போதும் என்ற நிலையில் அவை தத்தமது வசதிவாய்ப்புக்களை மட்டும் பார்த்துக் கொண்டு காலத்தைக் கடத்துகின்றன. ஒட்டுமொத்தமாக இன்று சிறுபான்மை சமூகம் எதிர்கொண்டிருக்கும் பிரச்சினைகள் பற்றியோ அல்லது மலையக மக்களின் எதிர்காலம் பற்றியோ வாயைத்திறக்காத நிலையில் அவை சோம்பிக் கிடக்கின்றன.

எதிர்பார்க்கப்படும் தேர்தல்கள் தொடர்பாக எல்லாக் கட்சிகளும் வெவ்வேறு விதமான கருத்துக்களை வெளியிடுகின்றன. அரசாங்கத்தின் அங்கத்துவக் கட்சிகளான இடதுசாரிக் கட்சிகள், முஸ்லிம் கட்சிகள், ஜாதிக ஹெல உறுமய, வீரவன்சவின் கட்சி, பௌத்த தீவிரவாத அமைப்புகள், அமைச்சர்கள், ஆஸாத் சாலி எனப் பலரும் பல கட்சிகளும் அரசாங்கத்தின் போக்கை விமர்சிக்கின்றன. நாங்களும் இப்படித்தான் இருப்போம் செயற்படுவோம் என்பதை தெரிவிக்கிறார்கள். தேர்தலை சந்திக்க ஒன்றிணைவது, ஒன்றிணைப்பது, கூட்டணி அமைப்பது, பொது வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பது எனப் பல முயற்சிகள் வெளிப்படையாகவும் திரை மறைவிலும் மேற்கொள்ளப்படும். இச்சமயத்திலும் மலையக கட்சிகள் மட்டும் எந்தக் கருத்தையும் வெளியிடாமல் பயங்கர மௌனத்தில் பூனை கண்ணை மூடிக் கொண்ட மாதிரி இருக்கின்றன.

ஏன் எதுவும் பேசாமல் இருக்கிறீர்கள் என்று இக்கட்சிகளிடம் கேட்டால் இது நாம் சம்பந்தப்படாத விஷயம் என்றும் மலையக மக்களின் பாதுகாப்பே எமக்கு முக்கியம் என்றும் சரியான சந்தர்ப்பத்தில் சரியான முடிவு எடுப்போம் என்றும் இவை பதில் தரலாம். ஆனால், உண்மையான காரணம் அதுவல்ல. இன்றைய அரசியல் சூழல் மலையக மக்கள் சம்பந்தப்படாதது என்று எப்படி சொல்ல முடியும்.?

மலையக மக்கள் இந்நாட்டை சார்ந்தவர்கள், பிரஜைகள் இல்லையா? கட்சிகள் எடுக்கும் சுயலாப அடிப்படையிலான முடிவுக்கு மலையக வாக்காளர்கள் கட்டுப்பட வேண்டும், கட்டுப்படுவார்கள் என்று இக்கட்சிகள் கருதுகின்றனவா?

தேர்தல் வரப் போகின்ற இக்காலத்தில் அதற்குத் தயாராகும் இப்பருவத்தில் தமது வியூகங்கள் பற்றி மலையகத்தில் ஒரு கருத்தாடல், கலந்தாலோசித்தல் இருக்க வேண்டியது கட்டாயம். மலையகக் கட்சிகள் கை நீட்டும் இடத்தில் புள்ளடி போடுவது மட்டுந்தான் வாக்காளர்களின் வேலையென்று இவை நினைக்கலாம். இன்றைக்கு மனோ கணேசனைத் தவிர யாரும் எந்தக் கருத்தையும் முன்வைப்பதாக இல்லை.

மலையக மக்களுக்கு எல்லா வசதிகளும் கிடைத்துவிட்ட மாதிரியும் அவர்களுக்கு பிரச்சினைகளே இல்லாத மாதிரியும் இக்கட்சிகள் நடந்து வருகின்றன. கடந்த ஒன்பது ஆண்டுகளை எடுத்துக் கொண்டால் இக்கட்சிகள் இம்மக்களுக்காக எதைச் சாதித்துள்ளன? வா[illegible] என்ன?

மலையகக் க[illegible] எல்லா அரசியல் கட்சிகளும் அரசியல் வர்த்தகம் செய்வது ஒன்றும் புதிதல்ல. ஆனாலும் அவை சந்தர்ப்பங்கள் ஏற்படும் போது தமது மக்களுக்காக குரல் கொடுக்கவே செய்கின்றன போராடுகின்றன. ஆனால் எப்படியாவது தேர்தல் காலத்தில் வாக்காளர்களின் வாக்குகளை வாங்கிக் கொடுத்துவிட்டால் தீர்ந்தது நமது கடமை என்ற ரீதியான சிந்தனை தவிர வேறு எதுவும் இக்கட்சிகளிடம் இருப்பதாக தெரியவில்லை.

சௌமிய மூர்த்தி தொண்டமானுக்கு பின் அந்த மலையக அரசியல்வாதியும் எதையும் வாங்கிக் கொடுத்ததில்லை என்பதே உண்மை. நாங்கள் சாதித்தோம் இ. தொ.கா. வுக்கும் ம.ம.மு. வுக்கும் மார்தட்ட முடியுமா?

இன்றைய அரசியல் சூழலும் மலையக மக்களும் என்ற தலைப்பில் மலையகத்தில் ஒரு விவாதம் ஏற்படுத்தப்பட்டு மக்கள் மத்தியில் ஓர் அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய கட்டாயம், அவசியம் ஏற்பட்டுள்ளது. கட்சிகள் இதைக் கையில் எடுக்காவிட்டால், மலையகத்தின் புத்திஜீவிகளும் அமைப்புகளும் இக்காரியத்தை செய்ய முன்வர வேண்டும்.

மலையகக் கட்சிகளின் இந்தப் போக்கை, அதனூடாக அரசை விமர்சிக்க புறப்பட்டால் தம்மைக் காப்பாற்றிக் கொள்ளவதற்காக இதே மலையகக் கட்சித் தலைமைகள் சம்பந்தப்பட்டவர்களைக் காட்டிக் கொடுத்து பயங்கரவாத முத்திரை குத்தப்பட்டு விடலாம் என்ற அச்சத்தில் நியாயம் இருக்கவே செய்கிறது. ஏனெனில், பயங்கரவாதத்துக்கு துணை போனார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பெ. சந்திர[illegible] இறுக்கி வைத்தது ஒரு [illegible]த் தலைமைதான் என்பது அனைவரும் அறிந்த செய்தி.

எனவே, உண்மை நிலையை மக்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்பும் அமைப்புக்கள் மற்றும் தனி நபர்கள், எதிர்க்கட்சிகளுடன் துணையுடன் இக்கடமையை ஆற்ற முன்வர வேண்டும். எப்படியோ, உண்மை நிலை மலையக மக்களுக்கு எடுத்துச் சொல்லி தெளிவுபடுத்த வேண்டிய கடமை கட்டயாயமாக ஆற்றப்பட்டே ஆக வேண்டும்.

## கிரேண்ட்பாஸ்...

முன் பக்கத் தொடர்

சென்ற வருடம் கொழும்பு கிரேண்ட்பாஸில் அமைந்துள்ள பள்ளிவாசல் தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினைக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் அநுர சேனாநாயக்க மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு பிரதியமைச்சர் பைஸர் முஸ்தபா ஆகியோர் பிரதேச பொதுமக்களுடனும் அப்பிரதேச விகாரைகளின் தலைமை மதகுருமார்களுடனும் கலந்துரையாடிய போதே பிரதிப் பொலிஸ் மா அதிபர் இவ்வாறு தெரிவித்தார் .

அங்கு கருத்து தெரிவித்த அமைச்சர் பைஸர் முஸ்தபா, குறித்த பள்ளிவாசலில் புனர்நிர்மாணப் பணிகள் வெகுவிரைவில் முடிவுறும் எனவும் அதனை சீக்கிரம் நிர்மாணித்து முடிக்க பிரதேசவாசிகளினதும் பௌத்த விகாரைகளினதும் தலைமை மதகுருமார்கள் ஒத்தாசை புரிய வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைய குற்றங்கள்...

முன் பக்கத் தொடர்

மேலும், இணைய வங்கி சேவைகளை பயன்படுத்தும் சந்தர்ப்பங்களில் குறித்த இணையத்தளங்களின் உண்மைத் தன்மையினை இனங்காணுவது அவசியம் என்றும் வங்கிகளின் இணையத்தளங்கள் என சில போலியான இணையத்தள முகவரிகள் மின்னஞ்சல் மூலம் கிடைக்கப் பெறலாம் எனவும் இவர் மேலும் குறிப்பிட்டார்.

வங்கி கணக்கு விபரங்கள, கடவுச்சொல் விபரங்கள், தனிப்பட்ட விபரங்களை கோரி வரும் மின்னஞ்சல்களுக்கு பதிலளிக்க வேண்டாம் எனவும் குறித்த வங்கிகளின் உத்தியோகபூர்வ இணையத்தளங்களில் வங்கிச் சேவை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அவர் கூறினார்.

இணைய குற்றங்களை கண்டறிவதற்காக உருவாக்கப்பட்டுள்ள புலனாய்வுத் துறையினரின் சிறப்பு பிரிவிற்கு, சமூக வலைத்தளங்கள் தொடர்பில் 235 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் ஊடக பேச்சாளர் தெரிவித்தார்.

## மரண தண்டனை...

முன் பக்கத் தொடர்

இது தொடர்பில் ஆராய்ந்து, நீதி அமைச்சரிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்படும். அதன் பின்னர் குறித்த அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது. 9 பேரைக் கொண்ட இந்த மீளாய்வுக்குழுவிற்கு, ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியொருவர் தலைமை வகிக்கின்றார்.

இதேவேளை, 450 கைதிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சு சுட்டிக்காட்டுகிறது.

## முஸ்லிம் அமைச்சர்...

முன் பக்கத் தொடர்

நரேந்திர மோடி பிரதமர் ஆகிறார் எனும் செய்தியை கேள்விப்பட்டவுடன் இலங்கை அரசு பயத்தால் ஆட்டங்கண்டு அவர் பிரதமராவதற்கு முன்பதாகவே அவருக்கு அழைப்பு விடுத்தது. ஆனாலும் அதையும் விட அதிகமாக அமைச்சர் விமல் வீரவன்சவைக் கண்டு அரசாங்கம் நடுங்கிப் போய்விட்டது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## குழந்தைகளுக்கு...

முன் பக்கத் தொடர்

வயிற்று வலி இருக்குமானால் நீர் ஆகாரங்களை அதிகமாக கொடுக்குமாறும் மூன்று நாட்களுக்கு மேல் காய்ச்சல் இருந்தால் டெங்கு காய்ச்சலா என இரத்தப் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் எனவும் தகுதியான வைத்தியர்களிடம் சிகிச்சை பெற வேண்டும் எனவும் காய்ச்சல் வந்த குழந்தைகளுக்கு ஓய்வு அவசியம் என்றும் டாக்டர் தீபால் பெரேரா கூறியுள்ளார்.

## அரசு தப்புக்கணக்கு...

(02 ஆம் பக்கத் தொடர்)

ஏனென்றால் மோடியும் சீனாவுக்கு எதிரானவர். இதனால் இலங்கை சீனாவுடன் கொண்டுள்ள நட்புறவை தகர்ப்பதற்கு இலங்கைக்கு எதிரான அனைத்து நடவடிக்கைகளையும் மோடி அரசு மேற்கொள்ளும்.

## முஸ்லிம் சமூகத்தின்...

முன் பக்கத் தொடர்

இவை ஒவ்வொன்றும் குறித்த துறைகளில் சிறப்புச் சேவை செய்கின்றன. எனவே அவை அனைத்தும் இயங்குவது அவசியம். தமக்குள்ளே பிணக்குகளைத் தோற்றுவித்து ஒருவரையொருவர் அழித்துக் கொள்ளாது இறுதியில் குறிப்பிட்ட இலக்கை அடைய வழிசமைக்க வேண்டும்.

இது மொத்த சமூகமும் செய்ய வேண்டிய ஒரு பாரிய பொறுப்பாகும். அத்துடன் மனிதன் செய்யும் கடமைகளை இருவகையாகப் பிரித்துப் பார்க்கலாம். ஒன்று, இறைவனை நெருங்குவதற்காகச் செய்யும் நன்மைகள். மற்றையது மனிதர்களை நெருங்குவதற்காகச் செய்யும் நன்மைகள். இதில் இறைவனை நெருக்குவதற்கான செயல்களை பொதுவாக எல்லோரும் தெரிந்து வைத்துள்ளனர். ஆனால் மனிதர்களை நெருங்குவதற்கான செயலில் அறியாமை காரணமாக மிகவும் பின்னடைவு காட்டுகின்றனர்.

சமூகத்துடன் இணங்கி வாழ்தல், இயற்கை சமனிலையைப் பேணுதல் போன்றவை மூலம் நாம் மனிதர்களை நெருங்கும் காரியங்களைச் செய்துகொள்ள முடியும்.

இது தவிர பிரத்தியேக கடமைகளும் உண்டு. அவை நபருக்கு நபர் வேறுபடும். உதாரணத்திற்கு ஒரு வைத்தியரின் கடமையை ஓர் ஆசிரியர் செய்ய முடியாது. ஒரு பொலிஸ்காரரின் வேலையை ஒரு குடிமகனால் செய்ய முடியாது. எனவேதான் வகிக்கும் வகிபாகத்திற்கேற்ப செய்யக்கூடியது எது, செய்யக்கூடாதவை எவை எனக் கூறுபோட்டு அறிந்துகொள்ள வேண்டும்.

## எட்டு வெப்...

முன் பக்கத் தொடர்

அரசாங்கத்தினுள்ள அமைச்சர்கள் அரச குடும்பஸ்தினர். அவர்களது அதிகாரிகளது அண்டவாளங்கள் அரச சொத்துக்களை சூறையாடுதல் மற்றும் ஊழல்கள் போன்ற செய்திகளை இந்த வெப்தளங்கள் மக்களுக்கு கொண்டு சென்றதாலேயே இவைகளை அரசாங்கம் நிறுத்தியுள்ளது.

## கலீபா...

(13 ஆம் பக்கத் தொடர்)



பின்னர், 1987 களில் சாட் மீதான லிபியாவின் படையெடுப்பை ஜனரல் கப்டர் வழிநடாத்தினார். ஆனால், ஜனரில் பல பாரிய தவறுகளால் லிபியப் படை சாட்டில் தோல்வியைத் தளுவுகிறது.

சாட் ஆக்கிரமிப்பில் ஏற்பட்ட தோல்வியைத் தொடர்ந்து கோர்ணல் கடாபி ஜெனரல் கலீபா கப்டரை நாட்டிலிருந்து வெளியேறுமாறு உத்தரவிடுகிறார். அதனைத் தொடர்ந்து கலீபா கப்டர் ஐக்கிய அமெரிக்காவில் அரசியல் தஞ்சம் புகுகிறார். அமெரிக்காவில் கலீபா கப்டர் கோர்ணல் கடாபிக்கு எதிராக செயற்படுகிறார். 2011 ஆம் ஆண்டு லிபிய மக்கள் கோர்ணல் கடாபியை ஆட்சியிலிருந்து விரட்டியடித்தவுடன், கலீபா கப்டர் லிபியாவுக்கு மீண்டும் திரும்பி வருகிறார். என்றாலும் கலீபா கப்டரின் அரசியல் பிரவேசம் ஆவேசமானதாக இருக்கவில்லை. 2012, 13 களில் தீவிரவாதத்தை ஒழிப்பதில் லிபிய இடைக்கால அரசின் பணிகளில் போதாமை நிலவுகிறது என மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து வந்தார். என்றாலும், சமீபத்தில் லிபியாவின் அரச இராணுவத்தினர் சிலரின் உதவியுடன் லிபிய அரசை பதவியிறங்குமாறு அச்சுறுத்தி வருகிறார். லிபியாவின் அரச நிறுவனங்கள் பலவீனமானதாக இருந்தாலும், கலீபா கப்டரின் செயற்பாடுகள் லிபியாவின் ஜனநாயகத்திற்கு மண்ணளவும் சந்தர்ப்பமில்லாத இராணுவ அரசை மீண்டும் தோற்றுவிக்கலாம் என அரசியல் விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர்.

# புரூணையில் சில நாட்கள்...

தொடர்-27



——பஷீர் அலி
kinniyabasheerali@gmail.com

பாத்ரூமுக்குப் போவதைத் தவிர வேறு எங்கு செல்வதனாலும் காரிலேயே சென்று வந்ததினால் என் பிரயாண அனுபவம் அந்தக் காருக்குள்ளேயே சுருங்கிவிட்டதாக உணர்ந்தேன். சிறிய தூரத்துக்காவது நடந்து செல்வதற்கும் இஸ்மத் அலியும் ஸிஹானும் கடுமையான ஆட்சேபனைகளைத் தெரிவித்ததினால் வேறு வழியின்றி காருக்குள்ளேயே நான் தஞ்சமானேன்.

புரூணையின் பிரயாண அனுபவங்களைப் பெற வேண்டும் என்பதற்காக, பஸ்ல போவமா? என்று அடிக்கடி நச்சரித்துக் கொண்டே இருந்தேன்.

பஸ்ல போறத்த விடுங்க; முதலில் ஒங்களுக்கு பஸ்ஸ காட்றம் பாருங்க, என்று சொல்லிச் சொல்லியே சில நாட்களைக் கடத்திவிட்டார்கள் இருவரும்; ஒரு பஸ்தானும் கண்ணில் படவேயில்லை.

அன்றைய தினம் பஸ் வண்டியைப் பார்ப்பதற்கென்றே பஸ் வண்டிகள் ஊர்ந்து திரிவதாக சொல்லப்படும் பிரதான வீதி ஒன்றுக்கு அழைத்துச் சென்றனர்.

அரை மணி நேரத்தின் பின்னர் வந்தது!

அரை மணி நேரத்துக்கொரு தடவைதான் பஸ் வந்தால், சும்மாவா வரும்? முட்டிமோதி நசிபட்டு... மூச்சுவிட இடமின்றி... ஆடி, ஆடி... புகை விட்ட படி... கண்டக்டரின் அதட்டல் வார்த்தைகள் பஸ் சப்தத்தைவிட மேலெழுந்து... நமது நாட்டு பஸ் ஒன்றின் கற்பனையுடன் நின்றிருந்தேன்.

ஊதா நிற வர்ணம் பூசிய குளிரூட்டப்பட்ட மினி பஸ் ஒன்று எங்களைக் கடந்து சென்றது. எண்ணிப் பார்த்தேன் நான்கே நான்கு பயணிகள்!

மூக்கில் இருந்த என் விரலை எடுத்துவிட்டு, புரூணையின் பஸ் கதையை நண்பர்கள் இருவரும் சொல்லத் தொடங்கினார்கள்.

புரூணையின் பிரதான போக்குவரத்துச் சாதனம் கார்கள்தான்!

கார்கள் இல்லாத வீடுகள், இல்லை புரூணையில்! சில வீடுகளில் ஐந்துக்கு மேற்பட்ட கார்கள் கூட நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். சராசரியாக ஒரு வீட்டில் மூன்று கார்களாவது இருக்கும்.

சனத்தொகையுடன் ஒப்பிடும்போது உலகில் அதிகமான கார்கள் உள்ள நாடு புரூணைதான் என்றால் பார்த்துக்கொள்ள வேண்டியதுதான்.

பொதுவாக ஆண்கள், பெண்கள் எல்லோரும் கார் வைத்திருப்பார்கள். அதன் காரணமாக பஸ் வண்டிகளின் தேவை அங்கு மிகக் குறைவாகவே உள்ளது. பேசிக் கொண்டிருக்கும் போதே அதே ஊதா நிறத்தில் 6 பயணிகளுடன் இன்னொரு குளிரூட்டிய மினி பஸ் எங்களைக் கடந்து சென்றது. அதன் பின்னர்தான் அந்த ஊதா நிறத்தின் இரகசியம் புரிந்தது.

போக்குவரத்துக்காக பெரும்பாலும் கார்களே பயன்படுத்தப்படுவதால் பஸ்களின் தேவைப்பாடு குறைவாகவுள்ள காரணத்தினால், தனியார் பஸ்கள் பொதுச் சேவையில் ஈடுபடுவதில்லை. விசேட தேவைகளுக்காகவும் வாடகைக்குப் பெறுவதற்காகவும் தனியார் பஸ்கள் உள்ளன, புரூணையில்!

நான் கண்ட இரண்டு பஸ் வண்டிகள் மட்டுமல்ல நாடு முழுவதும் ஆங்காங்கே சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள அரச போக்குவரத்து சபைக்கு சொந்தமான அனைத்து பஸ் வண்டிகளும் ஒரே அமைப்பிலான ஊதா நிற பஸ்களாகவே இருக்கும்.

இன்னுமொரு விசேஷம் என்னவென்றால், அந்த பஸ்களில் கடமையாற்றும் பஸ் ஒட்டுநர்கள் ஆண்களாகவும் நடத்துநர்கள் பெண்களாகவுமே இருப்பர்.

அந்த நடத்துநர் பெண்கள், டிகட்... டிகட்... டிகட்... என்று கூவிக் கொண்டிருக்கமாட்டார்கள். அவர்கள் பாட்டுக்கு அவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள ஆசனத்தில் வசதியாகத் தூங்கி விடுவார்கள்!

குறைந்த எண்ணிக்கையானவர்களே பஸ்களில் பிரயாணம் செய்வதால் கண்டக்டர்மாருக்கு பெரிதாக வேலையில்லை. பெரும்பாலும் இலத்திரனியல் அட்டைகளைப் பயன்படுத்தியே பயணங்களை மேற்கொள்வதால், பிரயாணிகளே சுயமாக பயணச்சீட்டுகளைப் பெற்றுக் கொள்வர். இனி, தூங்க வேண்டியதுதான் கண்டக்டர்மார்!

புரூணையில் நான் தண்டவாளத்தைக் கண்டதே இல்லை.

புரூணையில் புகையிரத சேவையுமில்லை என்பதை அறிந்த பின்னர்தான் தண்டவாளத்தை தேடிக் கண்டுபிடிக்கும் பணியை நிறுத்திக் கொண்டேன்.

திரும்பும் திசையெல்லாம் தாரளமாகக் கார்களைக் கண்ட நான் ஒரு வாரத்துக்குள் எட்டு மோட்டார் சைக்கிள்களையும் நான்கு துவிச்சக்கர வண்டிகளையுமே வீதியில் கண்டிருக்கிறேன் என்பது இன்னோர் ஆச்சரியமான செய்தி!

மோட்டார் சைக்கிள்களைக் காணவில்லை என்பதற்குக் காரணம் இருக்கிறது: மிகவும் விலை கூடிய ஆடம்பர வாகனங்களில் ஒன்றுதான் மோட்டார் சைக்கிள். அப்படியானால் கார் வாங்குகிறார்களே என்று கேட்கிறீர்களா? புரூணையில் கார்கள் வாங்குவது நமக்கு புஸ் பைசிக்கிள் வாங்குவது போல. அங்கு மோட்டார் பைசிக்கிள் ஒன்று வாங்கும் பணத்துக்கு பாவித்த இரண்டு கார்கள் வாங்கலாம்.

புரூணையில் பிரபலமான சங்கங்களின் ஒன்றுதான் மோட்டார் சைக்கிள்கள் பாவனையாளர் சங்கம்.


சங்கம் வைத்து நடத்துமளவு விரல்விட்டு எண்ணக்கூடிய சிறிய தொகையினரிடம் மட்டுமே மோட்டார் சைக்கிள்கள் இருக்கின்றன.

ஆங்காங்கே ஓரிரு துவிச்சக்கர வண்டிகளைக் காணலாம். அதுவும் இந்தியர்களே துவிச்சக்கர வண்டிகளைப் பாவிப்பதாக நண்பர் இஸ்மத் அலி சொன்னார்.

சரி, புரூணைக்குப் போகும் ஐடியா இருந்தால் பஸ்ல சுற்றிப் பார்கேலுந்தானே என்ற எண்ணத்தைத் தூக்கி ஒரு பக்கம் வைத்துவிட்டு, ஓர் எழுபது, எண்பது ஆயிரம் ரூபாவை கையில் எடுத்துச் செல்லுங்கள். சொந்தமாக கார் ஒன்றே வாங்கி சுற்றித் திரியலாம், அங்கு.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாருமற்றதொரு குடிசை

அந்த குடிசையின் ஒற்றை அறையில் பனை ஓலைப்பாயில் பிணமாகப் படுத்திருந்த தனது கணவனின் தலையை தனது மடியில் வைத்து ஓலமிட்டு அழ ஆரம்பித்தாள் மரியா. அவளுக்கு துணையாக மூத்த மகள் செவிலியும் இளையவள் ராசாத்தியும் அழுது கொண்டிருந்தார்கள்.

ஐந்து வயது கடைசி மகன் எரிந்து கொண்டிருந்த ஊதுபத்தியை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். மாலை மூன்று மணிக்கு பிணம் அடக்கம் செய்ய தயாரானது. இறுதி அழுகை இன்னும் பலம் கூடியிருந்தது.

உடல் அடக்கம் செய்ய எடுத்துச் சென்றபோது பிணத்தின் முன்னும் பின்னும் சென்ற உறவுக்காரர்களின் கூட்டம், அடக்கம் முடிந்து திரும்பி வந்தபோது பாதியாக குறைந்திருந்தது. பத்து பதினைந்து உறவினர்கள் அந்த குடிசையில் தங்க, அன்றைய இரவு அழுகையினூடே நகர்ந்தது.

மூத்த மகள் செவிலி வயசுக்கு வந்து ஒரு வருடந்தான் ஆகியிருந்தது. ராசாத்தி இன்றோ, நாளையோ என்றிருந்தாள். இத்தனை காலமும் தனது கணவனின் கூலி வேலையில் கிடைக்கும் சொற்ப வருமானத்தில் குடும்பம் தத்தளிக்கவே செய்தது. அந்த மனுசனும் போய் சேர்ந்துவிட்டான் இனி இவர்களை வைத்து எப்படி காலம் தள்ளுவது என்ற கவலை மரியாவை அலைக்கழித்தது. இளையவன் முருகேசன் வழக்கம்போல அறுந்துபோன சைக்கிள் டயரை சிறு குச்சியால் தட்டி விளையாடிக் கொண்டிருந்தான்.

பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த செவிலி படிப்பை நிறுத்திவிட்டு பக்கத்திலிருந்த முந்திரி ஆலையில் தினசரி கூலியாக சேர்ந்து கொண்டாள். ஏழாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த ராசாத்தி திருச்சியில் ஒரு வீட்டில் வேலைக்காரியாக அனுப்பி வைக்கப்பட்டாள்.

காலம் அதி வேகமாய் கடந்து கொண்டிருந்தது.செவிலியை யார் தலையிலாவது கட்டி வைக்க வேண்டும் என்ற எண்ணம் மரியாவின் மனதில் தினமும் எழுந்து அடங்கியது. சேமிப்பு பணமோ, நகைநட்டு எதுவுமின்றி எந்த ராஜகுமாரனும் வந்து அவளை சீண்டவில்லை.

மரியாவின் குடும்ப நிலைவரங்களை கேட்ட பொன்னுவுக்கு சபலம் தட்டியது. தினமும் அவனது வீட்டை தாண்டி முந்திரி ஆலைக்குச் செல்லும் செவிலியைப் பார்த்து எச்சில் விழுங்கினான். பொன்னுவுக்கு நாற்பது வயதுக்கு மேலிருக்கும் ஏற்கனவே திருமணம் ஆனவன். அவனது கொடுமை தாங்காமல் அவனது மனைவி தாய் வீட்டுக்கு வாழாவெட்டியாக ஓடிப் போயிருந்தாள். தனியாக காலத்தை தள்ளும் பொன்னுவுக்கு இரண்டாந்தரமாக யாரையாவது கட்டிக்கொள்ளும் ஆசை இருந்தது. அவனது முரட்டு குணம் பார்த்து யாரும் பெண் தர முன்வரவில்லை.

மார்கழி மாத சாயங்கால நேரத்தில் மரியாவின் குடிசை வீட்டுக்கு வந்து சம்பந்தமில்லாமல் எதை, எதையோ பேசி காலம் கடத்தினான் பொன்னு. செவிலி வீட்டு முற்றத்தில் குழம்புக்காக வாங்கி வந்த சாளை மீனை கழுவிக் கொண்டிருந்தாள்.

நேரம் இருட்டாப் போவுது நீங்க புறப்படுங்க! அம்மியில் அரைத்துக் கொண்டிருந்த மரியா சொன்னபோது, பொன்னுவுக்கு தனது எண்ணத்தை எப்படி சொல்வது என்று தெரியாமல் தடுமாறினான். தனது வயதுக்கும் செவிலியின் வயதுக்கும் இருபத்தி ஐந்து வருட வித்தியாசமிருந்தது. எப்படி கேட்பது என்று தயங்கி இறுதியில் துணிந்து தனது உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்தினான்.

“நீங்க கிளம்புங்க என் மககிட்ட குடும்ப சூழ்நிலையை பேசி சம்மதிக்க வெச்சுடுறேன்” மரியாவின் வார்த்தைகளைக் கேட்டு பொன்னு ஆகாயத்துக்கும் பூமிக்கும் குதித்தான். செவிலி எனக்குத்தான் என்று அவளை நோக்கி ஒரு பார்வையை வீசி விட்டு நகர்ந்தான்.

“இவனா எனக்கு மாப்பிள்ளை, இவன கட்டுறதுக்கு பதிலா கல்யாணம் பண்ணாம நான் வீட்டுலேயே இருந்துடுவேன்” செவிலி தீர்மானமாகச் சொன்னாள்.

“உங்கப்பா பெரிசா எதையும் சம்பாரிச்சு வெச்சுட்டு போகல, மாப்பிள்ளைக்கு வயசு கொஞ்சம் அதிகந்தான், ஆனா நல்ல வசதியிருக்கு, இந்த குடிசையில நீ கஷ்டப்படுறத விட, அவர கட்டிகிட்டா நீ நிம்மதியா இருக்கலாம்...”

மரியாவின் பேச்சில் செவிலி பதிலெதுவும் பேசாமல் அடங்கிப்போனாள். தனது உணர்வுகளை புதைக்க அம்மா குழி தோண்டுவது அவளுக்கு லேசாக புரிந்தது. அவளது மௌனத்தை சம்மதமாக எடுத்துக்கொண்டு மறுநாள் காலை பொன்னுவுக்கு விபரம் தெரிவிக்க அன்றிரவு வந்து மகள் கழுத்தில் தாலி கட்டி அழைத்துச் செல்வதாகக் கூறினான்.

முந்திரி ஆலைக்குபோக தயாரான செவிலியை தடுத்து நிறுத்தி இன்று இரவு உனக்கு கல்யாணம் என்றபோது அதிர்ந்தாள் செவிலி. தனது மனவருத்தத்தை வெளிக்காட்டாமல் மூடி மறைத்தாள்.

“அம்மா, முந்திரி ஆலையுல பாக்கி சம்பளத்த வாங்கிட்டு வந்திடுறேம்மா” கெஞ்சிக் கேட்ட செவிலியின் வார்த்தைகளுக்கு சம்மதித்தாள் மரியா.

மாலை ஆறு மணிக்கு பொன்னு வந்திருந்தான். மரியாவுக்கு பயம் தொற்றிக்கொண்டது காலையில் சம்பளம் வாங்கிவிட்டு வந்துவிடுகிறேன் என்று புறப்பட்ட செவிலியை காணாமல் பரபரப்பானாள். சட்டென்று உடை மாற்றிவிட்டு முந்திரி ஆலைக்கு விரைந்தாள்.

“செவிலி சம்பளத்த வாங்கிகிட்டு காலையில பத்து மணிக்கே புறப்பட்டாளே...” செக்யூரிட்டியின் பதிலைக்கேட்டு மேலும் பதட்டமானாள். மனம் புயல் அடங்காத கடலைப்போல கொந்தளித்தது.

நடையில் சுரத்தின்றி வீடு வந்து சேர்ந்தாள். அடங்க மறுத்த கண்ணீர் பொலபொலவென்று வந்திறங்க வாய்விட்டு அழுதாள். தனது நம்பிக்கைகள் மெல்ல, மெல்ல நொறுங்குவதைப் போல உணர்ந்தான், பொன்னு.

மரியாவின் அழுகைச் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்து வீட்டார் ஒன்று கூடி விபரம் கேட்டு கொதித்துப் போனார்கள். மிரண்டு போயிருந்த பொன்னுவை நழுவ விடாமல் கேள்விக்குமேல் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

“ஏலேய் இந்த வயசுல உனக்கு பதினாறு வயசு பொண்ணு கேக்குதா, உனக்கு ஏத்த பொண்ணு செவிலி இல்ல, அவ அம்மா மரியாதான், அவளும் ஒரு விதவை, நீ அவள இல்ல கட்டிக்க ஆசப்படனும், ஏய் மரியா, உனக்கும் புருஷன் இல்ல, கஷ்டப்பட்டு குடும்பம் நடத்துற, பேசாம பொன்னுவ கட்டிக்க...” கூட்டத்திலிருந்த செல்வமணி உரக்கச் சொன்னபோது மரியா பதிலெதுவும் சொல்லாமல் நின்றாள்.

பொறியில் சிக்கிய எலியைப்போல ஊர்க்காரர்களிடம் சிக்கினான் பொன்னு. இரவு நகர, நகர ஒருவித பயம் அவனை ஆட்கொண்டது. ஊர்க்காரர்களின் தர்ம அடிக்குப் பயந்து மரியாவை கட்டிக்க சம்மதித்தான் பொன்னு.

அந்த அர்த்த ராத்திரியில் நாள், நட்சத்திரம், நல்ல நேரம் எதுவும் பார்க்காமல் மரியா கழுத்தில் தாலி கட்டினான் பொன்னு. தூங்கிக் கொண்டிருந்த தனது இளைய மகனை தோளில் போட்டு, மாற்று உடைகள் திணித்திருந்த துருப்பிடித்த இரும்புப்பெட்டியை தூக்கிக்கொண்டு பொன்னுவோடு பயணமானாள் மரியா. அவர்கள் வாழ்ந்த குடிசை யாருமற்றதொரு நிலையில் அனாதையாக நின்றது.

மூன்று மாதம் ஓடிப்போனது. அடித்த வெயிலுக்கு குடிசையின் கூரை நைந்து போய் சருகாய் மாறியிருந்தது. சற்று இளைப்பாறலாம் என்று பறந்து வரும் பறவைகள் வந்தமர்ந்தால் கூட பொத்தல் விழும் அளவுக்கு சிதிலமாகியிருந்தது. நைந்துபோன ஓலைகளுக்கடியில் வைக்கப்பட்டிருந்த கம்புகள் உளுத்து எப்பொழுது வேண்டுமானாலும் விழுந்துவிடும் நிலையில் இருந்தன.

பெரும் மழை பெய்து ஓய்ந்ததில் கூரை, சுவத்துக்குள்ளே தஞ்சமடைந்து குடிசை வெட்ட வெளியானது.

ஒரு பாழடைந்த வீட்டைப்போல அந்த குடிசையின் மண்சுவர்கள் அநாதையாக நின்றது. மழையின் போக்கு நின்றபாடில்லை. மண், மழைநீரை முழுவதுமாக குடித்து கொஞ்சம் கொஞ்மாக சரியத் தொடங்கியது. ஒரு குடிசை இருந்த எந்த சுவடும் இன்றி மண்மேடாய் காட்சியளித்தது அந்த குடிசை.

பொன்னுவின் முரட்டு குணம் பிடிக்காமல் வாழாவெட்டியாக திரும்பிய மரியாவுக்கு இருந்த ஒரே குடிசையும் மண்ணோடு மண்ணாகிப் போனதில் மரியாவின் மனதில் பாரங்கள் அடர்ந்திருந்தன. அன்றிரவு பள்ளிக்கூட வராந்தாவில் தனது மகனோடு ஒதுங்கினாள். ஒரு ஓலைக் குடிசையாவது கட்டிவிட வேண்டும் என்ற வெறி அவளை துரத்த தூக்கம் வர மறுத்த போதிலும் இரவு வழக்கம்போல் நகர்ந்து கொண்டிருந்தது.

## மண்முனைப்பற்று...

(05 ஆம் பக்கத் தொடர்)

உங்களது பெயர்களை வாக்காளர் இடாப்பிலிருந்து நீக்கி விட்டோம், நீங்கள் காத்தான்குடிக்கு செல்லுங்கள் என்று அங்குள்ள கிராம சேவகர் நிலக்ஷன் அவர்கள் கூறியிருக்கின்றார்.

திருமதி. நிரோசா, பதுர் நிஷா, சுக்ரா உம்மா, சபீனா, ஆரிபா, சவுறா பீவி, ஆசியா உம்மா ஆகிய 07 பேருடைய பெயர்களையும் நீக்குவதாகவும் கூறியிருக்கின்றார்.

இதேபோல் பயங்கரவாத காலங்களில் பாதிக்கப்பட்ட ஏழை மக்கள் தங்களுக்கொரு நிரந்தர வீட்டை அமைத்துக் கொள்வதற்காக அனுமதிகோரி விண்ணப்பித்திருந்த போது அந்த விண்ணப்பத்தை பொதுச் சுகாதார பரிசோதகர் தனக்கு எவ்விதத்திலும் சம்பந்தப்படாத காணி உரிமையினைப் பற்றிப் பேசி இருக்கின்றார்.

இவரால் சிபாரிசு செய்யப்பட வேண்டும் என இருக்கையில் மேலதிகமாக திரு. நா. நரேந்திரகுமார் என்கின்ற பொதுச் சுகாதார பரிசோதகர் குறித்த காணி அரச காணியா? இல்லையா? என்பதை அப்பகுதி கிராம சேவகர், பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்திய கடிதம் இணைக்கப்பட வேண்டும் என அவருடைய பரிசோதனைக்கு தேவையற்ற மேலதிக காரணங்களை எழுதி அப்படிவங்களை நிராகரித்து இருக்கின்றார். இவ்விடயம் இங்கு மட்டுமல்ல ஒல்லிக்குளத்திலிருந்தும் விண்ணப்பித்த முஸ்லிம் விண்ணப்பதாரிகளுக்கும் மேலதிகமாக சேர்க்கப்பட்டுள்ளது. அதேநேரம் இந்த விண்ணப்பங்கள் சுகாதார வைத்திய அதிகாரியினுடைய கையொப்பங்கள் ஏதும் இல்லாமல் நேரடியாக செயலாளர், மண்முனைப்பற்று பிரதேச சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான இவ்விடயங்களுக்கு பொறுப்புக் கூறுவதற்குரிய காரணங்கள் கேட்ட போதும் கூட இது வரையில் அதற்கு எவ்வித பதிலும் இல்லாமல் இழுத்தடிக்கப்படுவதை பார்க்கும்போது மண்முனைப்பற்றில் இருக்கின்ற முஸ்லிம்களுடைய விடயங்களில் அரச அதிகாரிகள் எல்லோரும் ஒன்றிணைந்து செயற்படுகின்றார்களோ என சந்தேகம் எழுகின்றது.

ஏழை மக்களுடைய நிரந்தர வீட்டுப் பிரச்சினையை தீர்க்கும் முகமாக உரிய அதிகாரிகளை அவர்களுடைய சட்ட வரம்புக்குள் நின்று செயற்பட்டு இந்த மக்களுக்கு நிவாரணம் கிடைக்க வேண்டும் என உங்களை கேட்டுக் கொள்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புறப்படு பெண்ணே

நவீன ஜாஹிலியத்திற்குள்
மறைந்திருக்கும் கோழைகளை
மறை வழியில் தட்டியெடுக்க
புறப்படு பெண்ணே புறப்படு!

இன்றும்
தியாகங்கள் பல செய்து
தீனை நிலைநாட்டிட
உலக மோகத்தை மறந்திட
அதன் மூலம் சுவனமதை
அடைந்திட புறப்படு பெண்ணே!

வந்தோம் வாழ்ந்தோம்
என்பதற்கு இது ஒன்றும்
வரண்டுபோன வயல் நிலமல்ல
சுவனத்தை வெற்றி கொள்ள
நன்மைகளை விளைத்திடும் பயிர்
நிலமே...

பெண்ணே புறப்படு
நன்மையின் பக்கம்
விரைந்திடு!

கடமைகளை முறையாய்
பேணிடு
நன்மைகளை சுவனத்தில்
விதைத்திடு
நாமும் நீயும் சுவனம்
செல்வோம்
புறப்படு! புறப்படு!

ஏ.பி. ரமீஸா
இஸ்லாஹிய்யா வளாகம்



# உயிர் மொழி

## புனித ரமழான்

அகிலத்து மானிடரை
அறிவால் அரவணைக்க
அல்குர்ஆன் சுமந்து வந்த
அழகிய மாதம் ரமழான்

பணக்காரன் பசியறிய
ஏழைகளின் பசிபோக்க
உண்மை முஸ்லிமின்
உள்ளம் தூய்மையடைய
உலகுக்குள் உலா வரும்
உண்மை மாதம் புனித ரமழான்


இருப்போர் எல்லாம்
இல்லாதோருக்கு ஈந்து
கொடுக்க எங்கள்
இறைவன் எமக்களித்த
இனிமையாய் புனித ரமழான்

உம்மி நபி இறுதியாய்
உலகுக்குக் கொண்டு வந்த
புனித அல்குர்ஆனின்

புனித பொக்கிஷமாம்
புனித ரமழானின்
புண்ணியம் தேடிட
புறப்படுவீரே முஸ்லிம்களே!

உலக மக்கள்
உள்ளம் ஒளிர
உண்மை மிளிர
உள்ளன்போடு பிடியுங்கள்
உரிமையுள்ள நோன்பை
ஈருலகும் நன்மை பெற!

பாத்திமா மனால் மஃறூப்
திருகோணமலை





# வெண்ணிலவே...

முகம் பார்க்க வந்தாயோ
முழுமதியே வெண்ணிலவே...
பூரணமாய் உடல் பெருத்து
பொன்னுரைத்து முலாம் பூசி
கானகத்து அமைதியிலே – குளத்தில்
கால் கழுவ வந்தாயோ...

மேகங்கள் மறைத்துன்னை
மெல்ல மெல்ல கூட்டி வந்து
தாமரைக்குச் சேதி சொல்லி – நீ
தன் வழியே சென்றாயா...?

காடு மலை கடந்து
கன தூரம் கடல் கடந்து
சேனை பல கடந்தும் – நீ
செல்வதெங்கே வெண்ணிலவே!

தன்னந்தனிப் பயணம்
தவிக்கிறதே எந்தனுள்ளம்
உறங்காத வெண்ணிலவே –
இன்றெனக்கு
உறக்கமில்லை விழிகளிலே...

கிராமத்தான் கலீபா
பொத்துவில்

# மண்ணறை



எண்ணற்ற ஆண்டுகளாய்
இறந்தோரின் எலும்புகளை
மண்தோண்டி எடுக்கின்ற
மடமைதனை என்னென்போம்!

எலும்பெடுத்து ஆராய்ந்து
எச்சங்களை எண்ணிப் பார்த்து
தளம்புகின்ற மானிடரே
தலையோட்டில் என்ன கண்டீர்?

மீண்டெடுத்து உயிர்கொடுத்து
மனிதனாகப் படைப்பதென்றால்
தோண்டி எடுக்கும் தொழிலுக்கு
தொகையாகப் பணம் கிடைக்கும்!

ஏனிந்த வீண் வேலை
எலும்புகளும் தொழில் நன்றோ
மனிதன் செத்தா வெறும் கூடு
மீன் செத்தால் கருவாடு!

செத்தவரின் சடலத்தை
சந்திக்கு விடுவதனால்
சந்ததிகள் மனக்குமுறல்
சஞ்சலத்தில் மாய்ந்துவிடும்!

இனிமேலும் இச்செயலை
இல்லாது ஒழித்திடுங்கள்
துனியாவின் கடைசி நாள்
தொல்லை தீரும் மண்ணறையே!

மூதூர் கலைமேகம்



# ஏங்கிடும் முதுமை

காலை பனிப்பூக்களாய் மனித இனங்களில்
ஜொலித்திடும் இந்த இளமை
மாலைநேரமதில் வாடிய மலர்களாய்
முதுமை வந்து தாண்டவமாடிடும்

அகவைகளின் எண்ணிக்கைகளோ தினமும்
நாட்டில் அதிகரிக்கும் போதெல்லாம்
இகமதில் வாழும் மனிதர்களின்
வாலிப வனப்பும்
வற்றிக்கொண்டே போகும் நிலைமை

குருதியின் வேகமும்
குறைந்து கொண்டே போகும்
உறக்கம் விழிப்பு உணர்வும் தளர்ந்திடும்
விரும்பும் எதனையும்
செய்யவும் உண்ணவும்
வழமை போலில்லாமல் போய்விடும்

இளமை நதி வழிந்து கொண்டேயிருக்கும்
முதுமையின் ரேகைகள்
உடலில் முத்திரை குத்தும்
பளபளத்து மின்னிய
வாழ்வத்தனையும் இனி
தளர்ந்து தளர்ந்து கொண்டே இருக்கும்

அங்கங்கள் செயலிழக்க
ஆங்காங்கே விரைந்து
குடி கொண்டிடுமே சிற்சில நோய்கள்
தொங்கில்லா நீண்ட கதைகள் போன்று
சிந்தனைகள் பல
வளர்ந்து கொண்டிருக்கும்

இரு கால்களின் நடைமாறி தடியூன்றி
முக்கால்களால் வாழ்வு
ஆரம்பித்தும் விடும்
இருளென்ன
வெளிச்சமென்ன அவைகள்
இரண்டுமே ஒன்றாகிடுமே
இந்த முதுமைக்கு

வாலிபத்தின் நினைவுகள்
சாதனைகள் வேதனைகள்
வந்து வந்து காதோரம்
இசை மீட்டிடும்
சலித்துவிடவே உள்ளமும்
நிலைகளும் தடுமாறி
மரணத்தின் வரவை
எண்ணியேங்கிடும் முதுமை

எம். எம். அலி அக்பர்
கிண்ணியா


## யா(து)தவன் செய்வான்?

கைதவத்தை நற்றவமென்றெண்ணி
வாழ்கிறான்
உலகில் உழைக்க வழி
அறியாததனாலா?
'காசா லேசா' என்கிறான்
பரிதானம் எடுக்கிறான்
பரிதவிக்கும் ஏழைகளின்
உழைப்பை சுரண்டுகிறான்
சென்னி விரி நாகம்போல்
பழிக்குப் பழி தீர்க்க நினைக்கிறான்
வட்டியால் வயிறு நிரப்புகிறான்
வாய்மை சேய்மையாகி விட்டவனுக்கு
நிரந்தரமற்ற உலகம்
நிலையானதுபோல் தோன்றுவதனால்
அத்தனை அட்டூழியங்களையும்
அச்சமின்றி செய்கிறான்
ஆதவன் தலையின் சாண் உயரத்திற்கு
வரும் எதிர்பாராத நாளில்
யாதவன் செய்வான்?
அசத்தியங்கள் சுட்டெரிக்கப்படும்
அந்நாள் சத்தியவான்களுக்கு நன்நாள்
நன்மைகள் களி நடனம் புரியும்
அந்நாளில் சத்தியமே வெல்லும்!

சப்ரி எம் ஷாபி
பூவலிகடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதோ...
நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த
விற்பனையில் சாதனை படைத்த
எனது டயறியின் மறுபக்கம்
மீள்பதிப்பு செய்யப்பட்டுள்ளது




பிரபல சிறுவர் நோய்நல விஷேட
நிபுணர் டாக்டர் முஸ்தபா றயீஸ்
அவர்கள் எழுதிய
எனது டயறியின் மறுபக்கம்
உங்கள் கைகளில்...

விலை: ரூபா. 250.00

ALHASANATH PUBLICATION
77, DEMATAGODA ROAD
COLOMBO - 09

UNIVERSITY OF WOLVERHAMPTON

கட்டிட நிர்மாணத் துறையில்
மாத வருமானம்
ரூபா 150,000/= இனை
உறுதி செய்யும்
18 மாத பாட நெறி

# BTEC HND in Quantity Surveying

Leading to BSc (Hons) From UK

## Why Choose BCAS for Quantity Surveying?

- நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தியேக QS கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாடநெறி.
- பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க QS நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்
- முன்னணி நிறுவனங்களினூடாக வழங்கப்படும் நடைமுறைப்பயிற்சிகள்.
- RICS, CIOB, IQSL போன்றவற்றினால் அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்.
- தற்போது இலங்கையிலேயே Top-Up கற்கைநெறியினை University of Wolverhampton அல்லது London South Bank University உடன் இணைந்து பூர்த்தி செய்யும் அறிய வாய்ப்பினை BCAS Campus உங்களுக்கு வழங்குகின்றது.
- தற்போது இலங்கையிலேயே MSc கற்கைநெறியினை பூர்த்தி செய்துகொள்ளும் வாய்ப்பு.

5 MSc in Construction Project Management From University of Wolverhampton
4 BSc (Hons) in Quantity Surveying Top-Up From University of Wolverhampton or London South Bank University
3 BTEC HND in Quantity Surveying
2 Foundation Course
1 After O/L
After A/L

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

For Details : 077 283 4595

Corporate Office :
32, Dharmarama Road, Colombo 6, Sri Lanka.
011 255 9255 info@bcas.lk

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar

# Social Media Workshop

நான்கு தசாப்த ஊடக அனுபவத்தின் புதிய பரிமாணம்

சமூக ஊடகங்கள் மூலம் உங்கள் தொழிலை முன்னேற்றலாம் என்பது உங்களுக்குத் தெரியுமா?

Status Photo Ask Question Milestone

Facebook, Twitter, Youtube, Linkedin, Flickr, Blogger, Livestream போன்ற நாம் அனைவரும் பயன்படுத்தும் சமூக வலைதளங்களே சமூக ஊடகங்கள் (Social Media) எனப்படுகிறது.

Post

E-Money, E-Marketing என்பன விஷேடமாக கற்றுத் தரப்படும்

பங்குபற்றும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்படும்

JMF ஊடக நிறுவனம் Insight Institute
உடன் இணைந்து நடத்தும்

ஒரு நாள் சமூக ஊடக
செயலமர்வு

முதலீடு 2100/= மாத்திரமே
(மதிய உணவு, சிற்றுண்டி உள்ளடங்கலாக)

பண்ணவயில்
08.06.2014 (ஞாயிற்றுக்கிழமை)
காலை 09.00- மாலை 05.00
(குறிப்பிட்டளவு தொகையினரே அனுமதிக்கப்படுவதால் அனுமதிக்கு முந்திக் கொள்ளுங்கள்.)

தொடர்புகளுக்கு
0777 407669

Just Media Foundation
77, Dematagoda Rd, Colombo-09
www.facebook.com/JMFSriLanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed at AJ Prints (Pvt) Ltd. 44, Station Road, Dehiwela.